பி.லீலா குழுவினர் பாடிய 'சாயாந்தாடப்பா சுயந்தாடு, தங்க சிலையே சாய்ந்தாடு பிள்ளை இல்லா குறை தீர்த்த செல்வா நீயும் சாய்ந்தாடு, கைலை மலையானின் கருணையினால் வந்தவனே, சிவபக்தி எப்போதும் குறையாமல் உத்தமனாய் நூறாண்டு நீ வாழவேண்டுமப்பா' என்ற பாடலை இலங்கை வானொலி பிறந்தநாள் வாழ்த்து, கோஷ்டி கானம் நிகழ்ச்சிகளில் அடிக்கடி கேட்டே மனப்பாடம் ஆகிவிட்டது. பிருந்தாவனி சாரங்காவில் விஸ்வநாதன் - ராமமூர்த்தி இசை அமைத்த அந்த கோஷ்டிகானத்திற்குப் பின் வந்த வருடங்களில் அந்த ராகத்தில் இன்னும் சில கோஷ்டி கானங்களை அருமையாக மெட்டமைத்து தந்தனர். பத்மினி ப்ரியதர்ஸினி ஆடும் குறத்தி நாட்டியப் பாடலை ஏ.பி.கோமளா பாடினார். பால மார்க்கண்டேயாவுக்கு டி.எஸ்.பகவதியும் மற்றும் நாகையாவும் பாடிய சிவபக்தி பாடல்கள் தன்மயப்படுத்துபவை 'ஜெய ஜெய ஸர்வேசா', 'ஓம் ஜய ஜய சங்கர ஸாம்ப ஸதாசிவ'. பி.பி.ஸ்ரீனிவாஸ் சூலமங்கலம் ராஜலட்சுமி பாடிய நீண்ட பாடல் காட்சியில் மகன் (பாப்ஜி) மார்க்கண்டேயனை நினைத்து தாய் (புஷ்பவல்லி) சோகமாக பாடும் காட்சி. கன்னட பதிப்பில் சிறிய மார்க்கண்டேயராக பேபி உமா நடித்தார்.

## ஆடும் நீரோடை மீதே தேன் சிந்த பண்பாடுவோமே

ஜெமினி பிக்சர்ஸ் 'அலாவுதீனும் அற்புத விளக்கும்' தெலுங்கிலும் தமிழிலும் தயாராகியது. பாட்டு புத்தகத்தின் அட்டையில் இசையமைப்பாளர் ராஜேஸ்வரராவ் அவர்கள் சிதார் மீட்டுவதை முழு பக்கமாக போட்டிருந்தார்கள். ராஜேஸ்வரராவ் அவர்களின் இசையில் ரிச் ஆர்கெஸ்ட்ராவின் பாடல்கள் அனைத்தும் அருமையாக அமைந்திருந்தன. அலாவுதீனும் அற்புத விளக்கும் படத்தின் பாடல்கள் இலங்கை வானொலியின் evergreen songs என்று சொல்லலாம். டி.எஸ்.பாலையா அளிக்க, எம்.எல்.பதி தயாரித்து டி.ஆர்.ரகுநாத் வி.ஸ்ரீநிவாசன் அவர்களின் கதைக்கு ஏ.எல்.நாராயணன் வசனம் எழுதினார். நாகேஸ்வரராவ் - அஞ்சலிதேவி, தங்கவேலு ஜி. சகுந்தலா இரு ஜோடிகளோடு மந்திரவாதியாக எஸ்.வி.ரங்காராவ், டி.எஸ்.பாலையா அவரால் ஏவப்பட மந்திரத்தால் ஊமை பாலையாவாகவும், எஸ்.வி.ரங்காராவ் மந்திரத்தால் உருவாகிய பதுமை ராஜசுலோசனாவும் கதை பொழுது போக்காக செல்லும். பாட்டு புத்தகத்தில் நாடறிந்த கதை என்று போட்டிருந்தார்கள். படித்த பெண், சௌபாக்யவதி படங்களுக்கு ஆரூர்தாஸை சிபாரிசுசெய்த திருவாரூர் அம்பி என்கிற வி.ஸ்ரீநிவாஸனை டி.ஆர். ரகுநாத்திடம் 'அலாவுதீன்' படத்திற்கு உதவியாளராக பணியாற்ற அனுப்பினார் (இவர்தான் பின்னாள் முக்தா ஸ்ரீநிவாசன்) ஸிதாரா கதாபாத்திரத்தில் நடித்த ராஜசுலோசனாவுக்கு மருதகாசி இயற்றிய இரு பாடல்கள் - ஜிக்கி பாடிய 'உன்னாலே வந்தேனையா' (ரங்காராவ் முன் ஆடிப் பாடும்) மற்றும் பி.சுசிலா பாடிய 'கன்னி பெண்ணே வா, என்னை கொஞ்சம் பார், உன்னை எண்ணும் ஏங்கும் என்னை நிக்காஹ் செய்துக்கோ'. அஞ்சலிதேவிக்கு பி.சுசிலா கோரஸ் பாடிய மருதகாசி இயற்றிய 'ஆசை மன்னன் என் ராஜா வருவார்', பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் இயற்றிய 'கண்ணுக்கு நேரிலே கலை கண்ணுக்கு நேரிலே' ஆகியவை. தங்கவேலு.ஜி. சகுந்தலாவுக்கு கே.ஆர்.செல்லமுத்து கே.ராணி பாடிய எம்.பி.சிவம் எழுதிய 'சமயம் வாச்சுதய்யா கோமாளி' என்ற பாடல். எஸ்.வி.ரங்காராவ் அவர்களுக்கு வில்லிபுத்தன் எழுதி திருச்சிலோகநாதன் குரலில் 'பழைய தீபம் தந்தால் புதிய தீபம் தருவேன்'. அடிமை வியாபாரியும் சேர்ந்தும் பாடும் தமிழ் ஒளியின் பாடலை ஹுசேன் தீன் பாடினார், 'தில்லாலேலம் ஏலந்தான்' என்ற அந்த பாடலில் நித்யகலா, பி.கே.சரஸ்வதி, ஸ்வர்ணலதா, சி.என்.ராஜலட்சுமி ஆகியோர் அடிமைப் பெண்களாக நடித்தனர். அதே வருடம் 'மாயா பஜாரில்' குணச்சித்திர கடோத்கஜ மந்திரவாதிக்கு 'கல்யாண சமையல்சாதம்' பாடிய திருச்சி லோகநாதன் அவர்கள் இப்படத்தில் வில்லன் மந்திரவாதிக்கு 'விநோததீபம்பாரு' பாடலை பாடிவிட்டார்.

கவிஞர் கண்ணதாசன் கைவண்ணத்தில் ஏ.எம்.ராஜா - பி.சுசிலா இருவரின் அமுத குரலில் 'சேலாடும் நீரோடை மீதே தேன் சிந்த பண்பாடுவோமே கண்ணோடு கண்ணும் பேசாமல் பேசும் சமே சுவை அமுதே காண்போம் இங்கே' பாடல் காஷ்மீரில் கலரில் படமாக்கப்ட்ட கனவு நாகேஸ்வரராவ் அஞ்சலி தேவி நடித்த இந்த டூயட் பாடல் இரு பக்க இசைதட்டு. இலங்கை லியில் 'சேலாடும் நீரோடை மீதே' 'கன்னி பெண்ணே வா', 'ஆசையுடன் என் ராஜா வருவார்', ணுக்கு நேரிலே' ஆகிய பாடல்கள் மிக பிரபலம். கமலா ரம்பா ஆடிய நடனத்துக்கு லக்ஷ்மண எழுதிய 'இன்றைக்கு இருப்பது ஒன்றே நிஜமென என்றே இன்பம் தேடுவாய் நன்றாய் ஆடி என்ற பாடலை ஏ.பி.கோமளா பாடினார். இலங்கை வானொலியில் கவியுள்ளம், இன்றைய நட்சத்திர பாட்டும் பதமும் நிகழ்ச்சிகளில் இப்பாடல் இடம் பெறும். இசை அமைப்பாளர் நிகழ்ச்சியில் ராஜே ரராவின் பாடல்கள் என்றால் அநேகமாக 'அலாவுதீன்' படப்பாடல் ஏதாவது ஒலிபரப்பாகும்.

## தாயே உன் செயலல்லவோ

1956-ல் 'ப்ரேம பாசத்திற்கு' பிறகு தமிழ் தெலுங்குஇரண்டிலும் தயாரான 'இரு சகோதரிகள் தில் நரசு ஸ்டூடியோஸார் மீண்டும் ஜெமினி கணேசன், சாவித்திரி, கிரிஜா ஆகியோரை நடிக்க னர். அதே அக்கா, தங்கை கதை என்றாலும் இதில் கணேசன் திருடன் இல்லை, சாவித்ரியும் இல்லை. எம்.என்.நம்பியார், டி.எஸ்.துரைராஜ், வி.கே.ராமசாமி, டி.பி.முத்துலட்சுமி, சி.கே.சரஸ்வதி நடித்தனர். கிரிஜாவின் ஜோடியாக நம்பியார் நடித்தார். தெலுங்கில் 'பலே அம்மாயிலு' என்று யிட்டனர். அதில் என்.டி.ராமராவ், சாவித்திரி, ஜக்கையா, கிரிஜா பலர் நடித்தனர். இரு படங்களுக்கு ராஜேஸ்வரராவ் இசையமைத்தார். வசனம் பாடல்களை தஞ்சை ராமையாதாஸ் எழுதினார்.

எம்.எல்.வசந்தகுமாரி - டி.வி.ரத்னம் பாடிய தில்லானாவோடு ஆரம்பமாகிறது படம். 'விரகநிலை தாபம் மீறும் வேளையில் பருவ மலரும் தேடி வாடுதே தருணமே என்னையாளும் தீரா, ஸ்வாமி ணராஜ கெம்பீரா' என்று ஜதியோடும் ஸ்வரத்தோடும் எம்.எல்.வசந்தகுமாரி, டி.வி.ரத்னம் பாடியதற்கு சாவித்ரி - கிரிஜா இருவரின் நடனம். இந்த படத்தில்தான் ஒரு முழு நீள பரதநாட்டியத்தை சாவித்ரி ஆடினார் போலும். வீணையை மீட்டிக்கொண்டு சாவித்ரி - கிரிஜா பாடுவதற்கு எம்.எல்.வசந்தகுமாரி பி.லீலா பாடிய 'தாயே உன் செயலல்லவோ இன்ப தாலாட்டி அறிவென்ற பாடலூட்டும் செந்தமிழ் தாயே உன் செயலல்லவோ' என்ற மோகன ராகத்தில்மிக அற்புதமான இரு பக்க இசை தட்டில் முன் பக்கத்தில் மிக வேகமாக ஸாஹித்யத்தை பாடி விட்டு பின் பக்கத்தில் ஸ்வர வெள்ளமாக நிரவலில் பாடி வசந்தகுமாரியும் லீலாவும் ஜலக்கிரீடையாக ஓடுவார்கள். சரியான கால கட்டத்தில் எம்.எல்.வசந்தகு மாரி, பி.லீலா ஆகியோர் திரை இசைக்கு பொக்கிஷமாக பயன்பட்டார்கள்.

ஜிக்கி குழுவினர் பாடிய 'ஜிகு ஜிகு ஜினக்கு' என்ற லம்பாடி பாட்டு, பி.சுசிலா குழுவினர் கிரிஜா தோழியருக்கு பாடிய 'ஓஹோ ஹோ காதலினால்' என்றொரு பாட்டு, சாவித்திரிக்கு ஜிக்கி பாடிய 'சும்மா சாப்பிட வாங்க, அம்மா கூப்பிடறாங்க' மற்றும் ஜிக்கி குழுவினர் பாடிய 'காதல் கனிந்திடும் நேரத்திலே' என்ற இரு பாடல்கள், கிரிஜாவுக்கு பி.சுசிலா பாடிய 'ஜோரான ரூபமே மாறாத தீபமே' 'தங்க சிலையே வாடா தமிழ் கலையே வாடா; உன்னை தாலாட்டும் தாயுள்ளம் பாராயோ' ஆகியவை மற்ற பாடல்கள். பாகவதராக டி.எஸ்.துரைராஜ் நடித்த 'ஜோரான சரக்கிருக்கு பாருங்க' மற்றும் 'லாட்டரியாலே பேட்டரிபோலே' ஆகிய பாடல்களை முறையே ஸோலோவாக திருச்சி லோகநாதனும், டூயட்டாக திருச்சி லோகநாதன் - ஜிக்கி பாடினர். ஜெமினி கணேசன் - சாவித்திரி நடித்த 'இனி மனம் போலே நாமே இரு வானம்பாடி போலே வாழ்வினிலே இன்ப கானம் பாடுவோமே' என்ற பாடலை கண்டசாலா, பி.லீலா பாடினர். 'இருசகோதரிகள்' தெலுங்கு 'பலே அம்மாயிலு' படத்தில் 'கோபால ஜாகேலரா' என்று 'தாயே உன் செயலல்லவோ' பாடலுக்கு பதிலாக எம்.எல்.வசந்தகுமாரி பி.லீலா பாடினர்.

## மோகன புன்னகை ஏனோ

1957ல் ஜெமினி கணேசன் கதாநாயகனாக நடித்து வெளியான 8 படங்களில் 6 படங்களில் சாவித் திரிதான் அவரது ஜோடி. W.S.V. நாயுடு என்பவர் வி.ஆர்.வி. புரொடக்ஷன்ஸ் மூலம் தயாரித்த 'பத்தினி தெய்வம்' படத்தில் ஜெமினி கணேசன் - சாவித்திரியோடு நம்பியார், சந்திரபாபு, காகா ராதாகிருஷ்ணன் எஸ்.வி.ரங்காராவ், பி.எஸ்.வீரப்பா, ராஜசுலோசனா, ஜி.வரலக்ஷ்மி, எம்.சரோஜா, அங்கமுத்து பலர் நடித்தனர். கே.எம்.கோவிந்தராஜன் வசனம் எழுத சி.எச்.நாராயணமூர்த்தி இயக்கினார். தஞ்சை ராமையாதாஸ் அனைத்து பாடல்களையும் எழுத விஸ்வநாதன் - ராமமூர்த்தி இசை அமைத்தனர். 'சிட்டுப்போலே பறக்கும் குதிரை' என்று சரோஜினி பாடிய ஒரு பாடல். பி.லீலா, டி.எம்.சௌந்தரராஜன் பாடிய 'ஞானக்கண்ணா எழுந்திரு நாழியாகுதே மகிழ்ந்திரு' என்ற பாடலுக்கு குசலகுமாரி - ராமு நடனம். 'வாராய் இன்றே மோகனா இன் பம் தாராய் ராதாகிருஷ்ணா கோகுல கண்ணா' என்று பி.லீலா பாடியதற்கு குசலகுமாரி நடனம்.

...லீலா கோரஸ் பாடிய 'சின்ன சின்ன வயசிலே செல்லமான வயசிலே சொன்ன பேச்சை கேக்க ... அம்மா, அப்பா சொன்ன பேச்சைக் கேக்க வேணும்' - பாடல் இலங்கை வானொலியில் பிறந்த ... நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகும். இந்தப் பாடலை சாவித்திரி பள்ளிக் கூட டீச்சராக பாடி நடித் ... தொகையறாவோடு டி.எம்.சௌந்தரராஜன் கோரஸ் பாடிய 'தண்ணிக்குடம் கக்கத்திலே தாழங் ...க்கத்திலே' பாடலுக்கு ஜெமினி கணேசன் தோழர்கள் நடித்தனர். வி.எம். ஏழுமலை குழுவினரோடு ... பெருமையை சொல்லுவேன்' என்ற பாடலை பாடி நடித்தார். 'பத்தினி தெய்வம்' படத்தின் ... டூயட் பாடல்களை ஜெமினி கணேசன் - சாவித்திரிக்கு டி.எம்.சௌந்தரராஜன் பி.சுசிலா பாடி

...குமா இல்லை ருசிக்குமா, காதலர் இருவர் கருத்தொருமித்த
...வு பட்ட இன்பம் வாழ்வில் கசக்குமா இல்லைருசிக்குமா' என்ற திலங் ராக பாடல்.
...லவி : மோகன புன்னகை ஏனோ அனுராகத்தின் இன்பமிதானோ
அனுபல்லவி : தியாகமே வாழ்வினில் சிறந்ததுதானோ ஆகம வேதங்கள் அறிந்ததும் வீணோ சாகசமே
இனிமேலே இந்திர லோகமே காண்பதினாலே (மோகன புன்னகை) என்ற அற்புதமான மோகன ராக இரு குரலிசை.

இலங்கை வானொலியின் பல நிகழ்ச்சிகளில் இந்த இரு டூயட் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்திருக் ... டி.எம்.சௌந்தரராஜன் ஜே.பி.சந்திரபாபு பாடியது 'ஆத்துக்கு பாலம் அவசியம்'. பி.சுசிலா ஸோலோ ... வேதாந்தம் பேசுவாங்க வேஷமெல்லாம் போடுவாங்க' என்று பாடியதற்கு சாவித்திரி நடித்தார். ராஜசு ...க்கு 'உங்கள் மனசு ஒரு தினுசு மதி முகந்தானே சொகுசு' என்ற பாடலை பி.லீலா பாடினார்.

## ... பொண்ணே ராமக்கா உன் அத்தான் வரான் பாத்துக்கோ

...ல் 'நீதிபதி' படத்தின் வெற்றிக்குப் பிறகு என்.எஸ்.கே.யின் சகோதரர் என்.எஸ்.திரவியம் ... பிலிம்ஸ் சார்பில் தயாரித்த வெற்றிப் படம் 'யார் பையன்'. ஹிந்தியில் அசோக்குமார் - மீனாகு ... Sathyam Bose இயக்கிய Bandish (55) படத்தின் ரீமேக் தான். ஹிந்தியில் பிரமாதமாக அனை ... கவர்ந்த டெய்ஸி இரானியை ஜெமினி கணேசன் சாவித்திரி நடித்த 'யார் பையன்' தமிழிலும் ... வைத்தார்கள். ஹிந்தியில் 'டொமேட்டோ' என்றிருந்த அவரது பெயர் தமிழில் 'பூரி' என்றானது. பூங் ... நாகையா தன் பேரனுக்கு ஜெமினி கணேசனை அப்பா என்று கைகாட்ட, அச்சிறுவனும் ஜெமி ... பிடித்து கொள்ள, வேறு வழியில்லாமல் தன் காதலி சாவித்திரியின் வீட்டில் அவனை விட்டு, ... சாவித்திரியை அம்மா என்றழைக்க ஜெமினி அச்சிறுவனிடம் சொல்லிக் கொடுக்க, ஒரு பக்கம் ... கணேசனின் அம்மா, அப்பாவான என்.எஸ்.கிருஷ்ணன் - டி.ஏ.மதுரம் இவர்களின் கலாட்டா, மற் ... பக்கம் ஜெமினி கணேசன் படும் அவஸ்தைதான் 'யார் பையன்' நகைச்சுவை கதை. சே.சாரங்கபா ... புதல்வியாக சுரபி பாலசரஸ்வதி ஜெமினி கணேசனை மணம் செய்ய துடிப்பார். டி.ஆர்.ராமசந் ... சாவித்திரியை விரும்புவார். சாவித்திரியின் அண்ணனாக முஸ்தஃபா நடித்தார். வி.கே.ராமசாமி ... வித்யாவதியையும் ,அம்மா - அப்பாவாக செட் அப் செய்து என்.எஸ்.கே. - டி.ஏ.மதுரம் இருவ ... ஜெமினிகணேசன் நம்ப செய்வார். அப்போதும் அச்சிறுவன் ஜெமினி கணேசனை தன் அப்பா ... மகாகனம் பொருந்திய ஸ்ரீமான் சுந்தரராஜன் என்றும் சொல்லி அமர்க்களப்படுத்துவான். ...ராமசாமி - வித்யாவதி இருவரின் 'டூப்' பையும் மோப்பம் பிடித்துவிடும் என்.எஸ்.கிருஷ்ணன் ...க்கு டிஃபன் எடுத்து வரும் சமையல்காரர் தடுக்கி விழுந்து கொட்டி விட, 'பொய் சொன்னா ... கிடைக்காதுன்னு சொல்வாங்க. நீங்க நூத்துக்குநூறு உண்மையை சொல்றீங்க, அப்படியும் ... டிஃபன் கிடைக்கலை.' என்று நையாண்டி செய்வார். பிறகு வரும் தந்தியில் ஜெமினியின் குட்டு ... இவர்கள் இருவரையும் வெளியேவிரட்டி அடிப்பார். போகும்போது 'ரூபா' என்று வித்யாவதி ... சொல்லி வி.கே.ராமசாமி அழைத்து செல்ல, 'இன்னும் ரூபா வேறயா...' என்று என்.எஸ்.கே.சத்தம் ... 'என் பொண்டாட்டி பேரு ரூபா அதைத்தான் கூப்பிட்டேன்' என்று சொல்ல, 'பொண்டாட்டி ... ரூபா, நாளைக்கு குழந்தை பிறந்தா நையா பைசான்னு பேரு வைப்பாங்க போலிருக்கு' என்று ... கிருஷ்ணன் எரிந்து விழுவார். 'யார் பையன்' கதையை முதலில் கேட்ட கலைவாணர் ...கே. அவர்கள் 'இந்தப் படத்திற்கு ஜெமினி கணேசன் கதாநாயகனாக நடித்தால் இயல்பாக இருக்கும்' ... அபிப்பிராயம் சொன்னாராம்.

...ப்தா ஜோதிர்மய ராய் எழுதிய 'சேலேகார்' வங்காள மூலக்கதைக்கு திரைக்கதை வசனமெழுதி ... இயக்கியவர் டி.ஆர்.ரகுநாத். பாடல்கள் அனைத்தையும் மருதகாசி எழதினார். மத்யாமாவதி ... சாவித்திரிக்கு பி.சுசிலா பாடிய 'தந்தை யாரோ தாயும் யாரோ, நீயும் எந்த ஊரோ, ஜாலக்காரா ... நீயும் யாரோ நானும் யாரோ' என்ற தாலாட்டு பாடலை மட்டும் டி.சலபதிராவ் இசையமைத்தி ... மற்ற பாடல்களை எஸ்.தட்சிணாமூர்த்தி இசையமைத்தார். ஏ.எம்.ராஜா ஜிக்கி பாடிய 'வாசமிகும் ... சோலையிலே ஒரு வானம்பாடி ஜோடி கானம் பாடிடுதே' என்ற பாடலுக்கு பிறகு ஜெமினிகணேசன்

சாவித்திரிக்கு படத்தில் போராட்டம்தான். 'பளபளப்ப - ஜிலுஜிலுஜிலு பலூனை பாரு - சைனா பலூனை பாரு - ஜப்பான் பலூனை பாரு' பாடலை எஸ்.ஸி. கிருஷ்ணன் பாடினார். 'தேங்காய் மாங்காய் பட்டாணி சுண்டல்' பாடலை சி.கோமதியும் 'ஆழாக்கு ஓரணா எலந்தபழம்' பாடலை தங்கப்பன் கமலா ஆகியோர் பாடினர். ஜெமினி கணேசன் சுரபி பாலசரஸ்வதி நடித்த 'கனிரசமே அதிரசமே கண்ணே மங்கம்மா' என்ற பாடலை சீர்காழி கோவிந்தராஜன் ஜிக்கி பாடினர். பள்ளிக்கூட டீச்சராக இந்திரா அவர்கள் குழந்தைகளோடு 'கண்ணாமூச்சி ஆட்டம் இல்லேடா ராஜா, எண்ணி பார்த்து பதிலை நீ சொல்லுடா ராஜா' என்று பாடுவதை ஆர்.பாலசரஸ்வதி குழுவினர் பாடினர். இந்த பாடலை இலங்கை வானொலி பிறந்தநாள் வாழ்த்து, முத்துகுவியல், கோஷ்டி கானம் நிகழ்ச்சிகளில் நிறைய கேட்டிருக்கிறேன்.

டெய்ஸி இரானிக்கு பேபி கஸ்தூரி பாடிய

'அம்மா பொண்ணே ராமக்கா உன் அத்தான் வாரான் பாத்துக்கோ
துட்டு தருவான் வாங்கிக்கோ சுருக்குபையிலே போட்டுக்கோ
தட்டான் கைலே கொடுத்துக்கோ தாலி வாங்கி கட்டிக்கோ'

என்ற பாடல் அந்த காலகட்டத்தில் மிகவும் பிரபலமான ஒன்று. அந்தப் பாடலில் கடைசியாக 'அம்மா ஒரு பூனை அப்பா ஒரு யானை அவங்களையே ஆட்டி வைக்கிற அத்தை ஒரு பானை' என்று முடிக்கும் போது பி.எஸ்.ஞானத்தின் முகம் போகும் போக்கே சிரிப்பாக வரும். கோபம் வந்தாலும் சாவித்திரி மயங்கி போய் டெய்சியை அணைத்துக் கொள்வார். ஜெமினி கணேசன் சாவித்ரி ஜோடியின் குழந்தையாகவே டெய்ஸி இரானி பொறுத்தமாக தோற்றமளித்தார்.

ஒரு கட்டத்தில் பொறுக்க முடியாமல் டெய்ஸியை தூரத்தில் எங்காவது கொண்டுவிட்டுவர ஜெமினி காரில் வேகமாக செல்லும்போது பின்னணியாக கண்டசாலா பாடிய 'சுயநலம் பெரிதா பொதுநலம் பெரிதா இந்த சொல்லின் உண்மை தன்னை எண்ணி பாரடா' என்ற பிரபலமான சுத்த தன்யாஸிராக பாடல் ஒலிக்கும். ரிஷ்யச்ருங்கர் இசை நாடக பாடலை டி.வி. ரத்னம் குருவாயூர் பொன்னம்மாள் கோஷ்டி ஆகியோர் பாடியதற்கு குசலகுமாரி அம்பிகா குழுவினரின் நடனம். தொய்வில்லாமல் பொழுது போக்காக அமைந்த 'யார் பையன்' படத்திலும் ஜெமினி கணேசன் மிக இயல்பாக Happy-go-lucky காதல் இளைஞனாக பரிமளித்தார். ஸ்டைலாக சிகரெட் புகைத்துக் கொண்டு modern இளைஞர் போன்று ஜெமினியை பார்த்து சாவித்ரியோ மற்ற நடிகைகளோ மயங்கியதில் வியப்பென்ன. நவீன க்ராப்பும் உடைகளும் ஜெமினிகணேசன், ஸ்ரீராம் போன்றவர்களுக்கு பொறுத்தமாக அமைந்தன. 'ப்ரேமபாசம்' (56) 'யார் பையன்', 'மல்லிகா' போன்ற படங்களில் ஜெமினிகணேசனுக்கு ஜானவாச உடை அணிவகுப்புதான்.

## கனியா கன்னியா வாழ்வில் இன்பம் சொல்லவா

ஜுபிடரின் 'கற்புக்கரசி' வெற்றி படத்திலும் ஜெமினி கணேசன் சாவித்திரி ஜோடி நடித்தது. வழக்கம் போல் ஜுபிடர் படங்களை இயக்கிய ஏ.எஸ்.ஏ. சாமியே டைரக்ட் செய்தார். எம்.என்.நம்பியார், எம்.கே.ராதா, தங்கவேலு, ஆர்.பாலசுப்பிரமணியம், பி.பி.ரங்காச்சாரி, பி.எஸ்.வெங்கடாசலம், ஜி.வரலக்ஷ்மி, கே.ஆர்.செல்வம், ஈ.வி.சரோஜா, எஸ்.ரேவதி, எஸ்.மோகனா பலர் நடித்த 'கற்புக்கரசி' படத்திற்கு உடுமலை நாராயண்கவி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், மருதகாசி, கண்ணதாசன் ஆகியோரின் கருத்துள்ள பாடல்கள் இடம் பெற்றன. ஜி.ராமனாதனின் இசையில் அமரகீதங்களாகி விட்ட சில பாடல்களை எவ்வளவு கேட்டாலும் வியக்க வைக்கும் அவரது இசை கோர்வை.

கற்பகத் தீவில் குளிக்க வந்த தேவகன்னி சசிகலாவாக ஈ.வி. சரோஜா தோழிகள் பாடுவதை ஜமுனா ராணி, ஏ.பி.கோமளா குழுவினர் 'எல்லை மீறுதே மனம் துள்ளி ஓடுதே' என்ற நீண்ட பாடலாகப் பாடினர். மந்திரவாதி பாலசுப்பிரமணியத்திடமிருந்து தப்பிக்க முனிவர் (பி.பி.ரங்காச்சாரி) காலில் விழ, அவர் தவம் கலைய, தேவகன்னிகையை பகலில் கற்பக மர கனியாகவும், இரவில் கன்னியாகவும் மாறி விளங்கும்படி சபிக்கிறார்.

சந்திர கிரஹணத்தில் தோன்றிய மன்னருக்கு பிறக்கும் மகனை கொண்டே தேவ கன்னிகையை அடைய முடியும் என்பதால் மந்திரவாதி அத்தகைய மன்னர் ஜெயசீலனை (எம்.கே.ராதா) மணந்த ஏழை பெண் சந்திரிகாவின் (ஜி.வரலட்சுமி) சிற்றன்னை சிங்காரியின் (கே.ஆர்.செல்லம்) மகளை மோகனாவை (எஸ்.மோகனா) சந்திரிகாவை போல உருமாற்றி மன்னரிடம் சேர்த்து விடுகிறான். நிஜ சந்திரிகாவோ மோகனாவாக உரு மாற்றப்பட்டு தந்தையைக் காப்பாற்றும் தலைவனாக பிரதாபனை (ஜெமினி கணேசன்) பெற்றெடுத்து வளர்த்து வருகிறாள். போலி மகாராணிக்கு பிறந்த போலி இளவரசன் ஜெகவீரனை (நம்பியார்) தந்தையை கொல்லும் தனையனாக விஷமேற்றி வளர்க்கிறான் மந்திரவாதி. தலைநகருக்கு தன் நண்பன் சிலம்பனோடு (தங்கவேலு) வந்த பிரதாபன் ஒரு மதம் பிடித்த யானையை அடக்கி 'மந்திரி குமாரி' மஞ்சுளாவின் (சாவித்ரி) காதலையும் மன்னரின் அபிமானத்தையும் பெறுகிறான். தன் தாய் சுயரூபம் அடைய கற்பகத்தீவின் கனியை

வர பகலில் தேவகன்னி கற்பக கனியாக மாறும் போது அதை பறிக்க, புற்றுக்குள் தவமிருக்கும் வெகுண்டு அவனை சபிக்கிறார். அதன் காரணமாக தாய்க்கு கற்பக கனி கொடுத்து அவள் உருமா கல்லாகி விடுகிறான். இதற்கிடையில் போலி மகாராணியை கொன்று அந்த பழியை அரசன் மேல் மகன் ஜெகவீரனை சந்திர கிரஹணத்தன்று கொல்ல வேண்டுமென தூண்டுகிறான் மந்திரவாதி.

இதைபோல சுவாரஸ்யமாக செல்லும் ராஜாராணி மந்திரஜாலங்கள் நிறைந்த பொழுதுபோக்கு கதை வெளியான அந்த காலகட்ட படங்களில் அநேகமாக காரியம் கை கூடுகையில் கல்லாய் போவதாகத் திருப்பங்கள் வரும். கணவனே 'கண்கண்ட தெய்வம்', 'மணாளனே மங்கையின் பாக்கியம்' படங் தொடர்ந்து 'கற்புகரசி'யிலும் ஜெமினிகணேசன் கல்லாய் மாறும் சாபகட்டம். 'பூலோக ரம்பை' உண்மை சொல்லும் நல்ல நண்பன் நம்பியார் கல்லாகி விடுவார்.

வெற்றி படமான ஜுபிடரின் 'கற்புக்கரசி'யில் பி.பி.ஸ்ரீனிவாஸ் எம்.எல்.வசந்தகுமாரி பாடிய பாகோ கற்கண்டோ, காதில் பாயும் மதுர மொழி', பி.பி.ஸ்ரீனிவாஸ் அவர்களுக்கு கிடைத்த பாடல் என்று சொல்லலாம். ஒன்று, ஜி.ராமநாதன் அவர்கள் இசையில் முதன் முதலாக ஒரு பாடல் கிடைத்தது, இரண்டு, பிரபல கர்நாடக சங்கீத வித்வான் எம்.எல்.வசந்தகுமாரியோடு கிடைத்தான ஒரு வாய்ப்பு. ஜி.வரலட்சுமி, எம்.கே.ராதா நடித்த இந்த டூயட் காட்சியை படத்திலி நீக்கி இருந்தார்கள். மற்ற பாடல்கள் : 'செல்ல கிளியே அல்லி குளமே', 'சொல்ல துள்ளி மகிழ்ந்தாடும்', 'பிள்ளை செல்வமே தாலேலோ', 'ஆடும் பெண்ணே ஆசை கண்ணே', ஆண்டவனாகும்'. 'தூங்காது கண் தூங்காது இருள் சூழும் உலகில்பொது வாழ்வு தோன்றும் வரை கண் தூங்காது' என்று டி.எம்.செளந்தரராஜன் பாடிய பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடல் கணேசன் நடித்த காட்சி. 'காயமேயிது பொய்யடா - இதில் கண்ணும் கருத்தையும் வையடா' பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடலை டி.எம்.செளந்தரராஜன் சீர்காழி கோவிந்தராஜன் இரு பக்க ட்டாக பாடினார்கள். ஜெமினி கணேசன் தங்கவேலு 'மருந்தோ மருந்து' என்று விற்கும் பாடல் காட்சி. னிலே உதயமானதே - நான் இதுவரை காணாத புதிய லோகமே' என்று டி.எம்.செளந்தரராஜன் - பாட ஜெமினி கணேசன் சாவித்திரி நடித்த டூயட் காட்சி. ஒரு ஹிந்தி படப்பாடலின் மெட்டை டமாக தழுவிய பாடல்.

## டு விளையாடும் கலை செல்வமே

அம்பிகாபதி பிழை மாற்ற கம்பருன்னை அழைத்தபோது' என்ற விருத்தத்தை மேல் ஸ்தாயில் த்திலிருந்து ஊற்றெடுத்து ஸஹஸ்ராரா கமலத்தில்பீறி அடித்தது போல் டி.எம்.செளந்தரராஜனின் இனி மேல் இப்படி ஒரு ஓங்கார விருத்தத்தை கேட்க இயலுமா என்று பெருமூச்சு விட வைக் அந்த விருத்தத்தை தொடர்ந்து அதற்கேற்ப எம்.எல்.வசந்தகுமாரி பி.லீலா ஆகியோரின் வேகவா சங்கராபரணராகத்தில் ஸாஹித்யத்தையும் நிரவல் ஸ்வர வரிசைகளையும் அலைமேல் அலை இசைவாரி செய்ததற்கு ஏற்ப, சாயி - சுப்புலக்ஷ்மியின் பம்பர வேக ஆடல் அரிதான விறுவிறுப்பான பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் தமிழ்நாட்டு சிற்ப கலாச்சாரத்திற்கு கவிதை புகழாரத்திற்கு தனின் உயர்ரக திரை இசை சிகரத்தையே தொட்டது மகத்தான இந்த அரிய பாடலில்தான். நீ கொடடி நான் நாலுநாளில் வந்திடுவேன்' என்ற மருதகாசி பாடலை எஸ்.ஸி.கிருஷ் ரத்னமாலா தங்கவேலு - எம்.சரோஜா ஜோடிக்கு பொருத்தமாக பாடினர்.

கற்பக தீவுக்கு போகும் வழியில் காந்த தீவில் மாயக்கார ராணியிடம் (எஸ்.ரேவதி) மாட்டிக்கொண்டு கணேசனும் ரேவதியும் நடிக்கும் 'தத்தக்கா புத்தக்கா நாலு காலு தானே நடக்கையில் ரெண்டு காலு' பாடல். ராகினி - காந்தா ஆடிய 'இல்லாத அதிசயமா இருக்குதடி ரகசியமா எதை நினைச்சு இவ இப்படி ஆச்சுதோ' என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடலை கே.ஜமுனாராணியும் ஏ.பி.கோ பாடினார்கள்.

ஜெமினிகணேசன் ஈ.வி.சரோஜா நடித்த பிரபல டூயட் பாடலை டி.எம். செளந்தரராஜன் ஜிக்கி இருவ ராமநாதனின் வழக்கமான மெட்டில் இனிமையாகப் பாடினார்கள். 'கனியா கன்னியா வாழ்வில் இன் வா? காதல் பேசும் தீதிலாத கன்னியமுதம் உண்ணவா' என்ற அந்த பாடல் நான் அடிக்கடி ளும் பாடல்களில் ஒன்று. கற்புக்கரசி படத்தை டைரக்ட் செய்து கொண்டிருந்த போதுதான் சுகவீனம் அடைந்து சிகிச்சைக்கு ஹைதராபாத் சென்றபோது அங்கே காலமானார். அதனால் சாமி இயக்கத்தைத் தொடர்ந்தார். 'நல்லதங்காள்' (1955) படத்தில் மாதுரிதேவியோடு சேர்ந்து க்கு துன்பம் விளைவித்த மோஹனா, 'ஆரவல்லி' (1957) படத்தில் ஜி.வரலக்ஷ்மியோடு கூட்டணி ஆண்களை அடிமையாக்கினார். ஆனால், 'கற்புக்கரசி'யில் (1957) இன்னும் ஒரு படி மேலே போய் க்ஷ்மியின் கணவர் எம்.கே.ராதாவையே மணந்து விடுவார். அதுவும் ஜி.வரலக்ஷ்மியாக உருமாறி

மோஹனா செய்யும் துரோகத்தை 'தங்கமலை ரகசியம்' (1957) படத்தில் பி.எஸ்.வீரப்பாவை வ...
டி.ஆர்.ராஜகுமாரிக்கு உருமாறும் மந்திரகுழிகளை வழங்கி நம்பியார் - எம்.வி.ராஜம்மாவை ...
வீரப்பாவை நம்பியாராக்கி, ராஜகுமாரியை மணக்க செய்வார் தனம்.

## ஆடி பாடி வேலைசெஞ்சா அலுப்பிருக்காது

'கற்புக்கரசி'யைப் போல சாவித்ரி நடித்த எங்கள் வீட்டு மகாலட்சுமி' படமும் வெற்றி பெற்றது. ...
பூர்ணா பிக்சர்ஸ் பேனரில் 'திருட்டு ராமன்' (தொங்க ராமுடு - 1956) என்ற முதல் வெற்றி தயா...
தொடர்ந்து 'எங்கள் வீட்டு மகாலட்சுமி' படத்தை ஏ.நாகேஸ்வரராவ் தயாரித்து வழங்கினார். நாகே...
மதுசூதன்ராவ் பங்குதாரர்களாக தயாரித்த எங்கள் வீட்டு மகாலட்சுமியின் தமிழ் வடிவத்திற்கு ...
வசனம். தெலுங்கு வசனத்தை படித்துக் காட்ட ஸ்ரீதர் அவர்கள் தன் பாணியில் அவசியமான மாற்...
டன் தமிழில் எழுத வேண்டிய அந்த வேலையை மூன்று நாட்களில் ஒன்பதாயிரம் ரூபாய் ...
திற்கு முடித்துக் கொடுத்தார். ஏ.நாகேஸ்வரராவ், சாவித்திரி, சுந்தரிபாய், தங்கவேலு, ரங்காராவ், ...
ணாம்பா, நம்பியார், ராஜசுலோசனா, ஏழுமலை, அங்கமுத்து, சரத்பாபு ஆகியோர் நடித்த 'எங்கள் வீ...
மகாலட்சுமி' படத்தின் மூலக்கதை சரத்சந்தரின் 'நிஷ்க்ருதி' என்ற வங்காள கதைக்கு திரைக்கதை ...
சார்யா ஆத்ரேயா, மதுசூதனன் ராவ், அதூர்த்தி சுப்பாராவ் ஆகியோர் அமைக்க அதூர்த்தி சுப்பாராவ் ...
செய்தார்.

கண்ணாம்பா ஆதங்கத்தோடு பரபரப்பாக உறங்கிக்கொண்டிருக்கும் ரங்காராவை எழுப்ப ...
மிகமிக இயல்பாக கண்களை திறக்காமலேயே முணுமுணுத்துக்கொண்டே பதிலளிக்கும் ஆழ்ந்த ...
கொஞ்சம் கலைந்த நடிப்பை அப்படியே பிரதிபலித்துவிட்டார். ரங்காராவ் கண்ணாம்பா அவர்களின் ...
பாங்கான நடிப்பைப் பார்த்து ரசித்தால்தான் அதன் மகிமையை அனுபவிக்க இயலும், அப்படி இய...
நிஜ குடும்ப சூழ்நிலையில் நம்மை லயிக்க செய்து உணர்ச்சிவசப்பட செய்யும் ரங்காராவ், கண்ண...
போன்றவர்களுடன் சாவித்திரி போன்றவர்களின் நடிப்பும் போட்டி போட வேண்டியிருந்தது. கண்டசா...
பி.சுசிலா பாடிய 'காத்தாடி காத்தாடி' பாடலுக்கு நாகேஸ்வரராவ், மாஸ்டர் குந்து, மாஸ்டர் கிருஷ்ண...
ஆகியோர் பட்டம் விட்டுக் கொண்டே பாடும் காட்சி. ராஜசுலோசனா தங்கவேலுவை மயக்கும் ...
ஆளுங்க மச்சான் எங்கே வந்தீங்க' என்ற பாடலை ஜிக்கி பாடினார். சாவித்திரி நாகேஸ்வரராவ் ...
வேலை செய்தபடி பாடும் பி.சுசிலா - கண்டசாலா குரல்களில் 'ஆடி பாடி வேலை செஞ்சா அலுப்பி...
காது' என்ற பாடலை கே.எஸ். கோபாலக்ருஷ்ணன் எழுதினார். டி.எம்.சௌந்தரராஜன் குழுவினர் ...
இருபக்க இசைதட்டான 'நாட்டுக்கு பொருத்தம் நாமே நடத்தும் கூட்டு பண்ணை விவசாயம்' ...
நாகேஸ்வரராவ் நடித்த பாடலை உடுமலை நாராயண கவி இயற்றினார். ஈ.வி.சரோஜா -ஏ.கே.சோப்ரா ...
'பட்டணம்தான் போகலாமடி பொம்பளே' என்ற பிரபலமாக இருபக்க பாடலை சீர்காழி கோவிந்த...
பி.சுசிலா பாட உடுமலை நாராயணகவியின் நையாண்டி. 'காலேஜு படிப்பு காபி ஆத்துதாம் பி.ஏ. ...
பெஞ்சு துடைக்குதாம்' என்றும், 'டவுனு பக்கம் போகாதீங்க மாப்பிள்ளே டவுனாகி போயிடு...
போன்ற வரிகள் உடுமலை கவியாரின் மெட்ராஸ் கிண்டல் போலும். மாதர்குல மாணிக்கத்தில் ...
'அறிவில்லாதவன் எவனோ அவனுக்கு அவனே வெரிவெரி டேஞ்சர்' என்று பல டேஞ்சர்களை பட்டிய...
உடுமலையார் இப்படத்தில் 'டவுன்பக்கம் போகாதீங்க மாப்பிள்ளே டவுனாகி போயிடுவீங்க' என்று மீண்...
இப்படத்தில் டேஞ்சர்களை தொடர்கிறார். 'தேவதாஸ்' படத்திற்கு 'உலகேமாயம்' என்று எழுதி உருக...
உடுமலையாரிடம் சமூகப்பார்வை பாடல்களாக நாகேஸ்வரராவ் வாங்கியிருக்கிறார். 'மண்ணை நம்பி ...
ருக்கேன் கண்ணே சஞ்சலா, உன்னை நம்பி நானிருக்கேன் ஷோக்கா கொஞ்சலாம்' பாடலை எஸ்.சி. ...
ணன் - ஜிக்கி ஆகியோர் தங்கவேலு, ராஜசுலோசனாவுக்காக பாடி இருந்தார்கள். 'காரிலே சவாரி ...
யும்' என்ற கண்டசாலா பாடலுக்கு நாகேஸ்வரராவ் நடித்தார்.

மாஸ்டர் வேணு இசையமைத்த 'எங்கள் வீட்டு மகாலக்ஷ்மி'யின் பெரும்பாலான பாடல்களை ...
தகாசியே இயற்றினார். வக்கீல் குடும்பம் நகரத்தில் இருக்க, கிராமத்தில் விவசாயம் நடக்க, நகரத்திலும் ...
மத்திலுமாக வாழும் பெரிய குடும்பத்தின் இந்த கதையில் ரூட் என்ற மதனபள்ளி நாயின் நடிப்பு மக்...
வெகுவாக கவர்ந்தது. ஆறறிவு ஜீவனாகவே தன் பணியை படத்தில் ரூட் என்ற அந்த நாய் செய்து ...
பெற்றது. (இதே ஆண்டு ரஷ்யா ஸ்பூட்னிக் 2ல் அனுப்பிய லைகா என்ற நாய் விண்கலம் புறப்பட்ட ...
மணி நேரத்திலேயே இறந்துபோனதுதான் பரிதாபம். 1960ல் வெல்கா, ஸ்ட்ரெல்கா என்ற நாய்...
விண்ணுக்கு அனுப்பிய அவற்றை மீண்டும் உயிரோடு தரைக்கு கொண்டுவந்து சாதனை படைத்தது. ...
அமெரிக்கா சிம்பென்ஸி குரங்குகளை அனுப்பி வெற்றிகண்டது). நகரத்தை நோக்கிய மோகத்தையும் ...
மத்தின் மேன்மையையும் மக்களின் மனதை தொடும் வண்ணம் வெளியாகி வெற்றிகண்ட படம். நகர ...
சென்டிமெண்டை நன்கு விதைத்த 'எங்கள் வீட்டு மகாலக்ஷ்மி'யின் பாணியில் பல படங்கள் வெளியாகி ...
நன்றாகவே வெற்றிபெற்றன.

## அன்பே தெய்வம்

தமிழ் தெலுங்கு, கன்னடம் மூன்று மொழிகளிலும் அன்பே தெய்வம், ப்ரேம தெய்வம், ப்ரேமத புத்ரி என்று ஆர்.என்.ஆர். பிக்சர்ஸ் தயாரிக்க ரங்காராவ், சந்தியா, எம்.கே.ராதா, ஸ்ரீரஞ்சனி, சாரங்கபாணி, பேபி உமா, வி.கோபாலகிருஷ்ணன், சூரியகலா, அங்கமுத்து பலர் நடித்தனர். 'அன்பே தெய்வம்' படத்தில் சந்தியாவின் நடிப்பு மிகவும் பாராட்டப்பட்டது. சுந்தரகண்ணன் பாடல்களுக்கு பத்மநாபசாஸ்திரி - விஜயபாஸ்கர் ஆகியோரின் இசை. ஆர்.நாகேந்திராவ் தயாரித்து இயக்கினார். 'அன்பே தெய்வம்' என்று மோதி பாடிய டைட்டில் பாடலை இலங்கை வானொலியில் கேட்டிருக்கிறேன். பி. சுசீலா பாடிய 'இன்பமெல்லாம் தந்தருளும் என் தயாஸாகரியே' என்ற பாடலும் அன்பே தெய்வம் படத்தில் ஓரளவு பிரபலமானதுதான்.

மைசூர் மகாராஜாவின் பிரத்யேக டாக்டராக பணிபுரிந்து கொண்டிருந்த திரு. ரங்காச்சாரி அவர்களின் பெரிய வீட்டின் ஒரு பகுதியில் குடியிருந்த நடிகர் நாகேந்திரராவின் குடும்பத்தினரில் அவரது மகன் கே.என்.வி. பிரஸாத் அவர்களிடம் டாக்டரும் அவரது மருமகளான பின்னாளைய நடிகை ஸந்தியாவும் மிகவும் பாசத்துடன் பழகி வந்தார்கள். பெங்களூரில் சினிமாட்டோகிராஃபி படித்த பிறகு தன் தந்தையின் இயக்கத்தில் 'அன்பே தெய்வம்' படத்திற்கு கேமிராமேனாக பணியாற்றினார். தொடர்ந்து ஏவி.எம்.மில் பயிற்சி பெற முயற்சித்து அது கைநழுவியபோது, கன்னட திரைப்பட பக்கம் வந்துவிட்டார்.

## பக்காத் திருடன்

சந்தமாமா பிலிம்சின் 'தோங்கல்லோ தொரா' என்ற தெலுங்கு படம் 'பக்கா திருட'னாக தமிழில் டப் ஆனது. ஜமுனா நடித்த இப்படத்தின் பாடல்கள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பானவை. ஜிக்கி பாடிய 'என் ஆசை மோகன் என்றே', 'நீயோரு பெண்பிள்ளை தானோ' போன்ற பாடல்கள் பிரபலம். 'வீணில் ஏனோ வேதனை மேன்மையில்லா போதனை' என்ற முகவை ராஜமாணிக்கம் பாடலை ஏ.எம்.ராஜா பாடினார். இப்படத்தில் கு.ம. பாலசுப்பிரமணியன் பாடல்களும் ஒலித்தன.

## பதியே தெய்வம்

ஸ்வராஜ் பிக்சர்ஸின் 'மங்கள கௌரி' (1956) 'சிவசக்தி' (1956) போன்ற டப்பிங் படங்களை தொடர்ந்து 'பதியே தெய்வம்' படத்தை 1957ல் வெளியிட்டார்கள். கு.சா.கிருஷ்ணமூர்த்தி இயற்றி ஏ.எம்.ராஜா பாடிய 'பெண்ணின் பெருமையே பெருமை' பாடல் மிக பிரபலம். எம். ரங்காராவ் இசை அமைத்த படம்.

## எங்குமே ஆனந்தம்

நரசு ஸ்டூடியோவின் 'பலே ராமுடு' தெலுங்கு படம் 'பலே ராமனாக' மொழி மாற்றம் செய்யப்பட்டு வெளியானது. நாகேஸ்வரராவ் சாவித்திரி நடித்த இப்படத்தில் கண்டசாலா, பி.லீலா தனி தனியே பாடிய 'எங்குமே ஆனந்தம், ஆனந்தமே ஜீவனின் மகரந்தம்' என்ற பாடலை இலங்கை வானொலியில் பலதடவை கேட்டதுண்டு. இந்த பாடலின் தெலுங்கு பதிப்பில் தெலுங்கு திரை இசையில் மிக பிரபலமான கண்டசாலா பாடல் 'அந்தமே ஆனந்தம்', மற்றவை அநேகமாக பி.லீலா - கண்டசாலா பாடியவைதான். டி.ஏ. கல்யாணம் இசையமைத்த கனகசுரபியின் மற்ற பாடல்கள் - காணேனே இன்னும் காணேனே, நந்தகோபாலா, சொக்குப்பொடி போட்டு (பி. லீலா), சலோ சலோ செங்கண்ணா (பி.ஸ்ரீனிவாஸ்), தாயே நின்னருள் (ஜிக்கி), வந்தாச்சே வந்தாச்சே (சரோஜினி) உழைப்பால் பிழைப்பதென்றால் (ஏ.எம்.ராஜா).

## பாக்யவதி

பத்தினி தெய்வம், பதியே தெய்வம் படங்களை போல 'பாக்யவதி' என்ற மற்றொரு படம் வெளியானது. 'பத்தினி தெய்வம்' படத்தில் சாவித்திரி, பாக்யவதி படத்தில் பத்மினி ஏ.ஸி.பிள்ளை தயாரித்த 'பாக்யவதி' படத்தின சினோரியோ இயக்கத்தை பிரசாத் செய்தார். சிவாஜி கணேசன், தங்கவேலு, கே.சாரங்கபாணி, பி.டி.சம்பந்தம், மாஸ்டர் கோபால், பத்மினி, ராகினி, எம்.என்.ராஜம், லட்சுமி பிரபா, கே.என்.கமலம், கே.அரங்கநாயகி பலர் நடிக்க பாக்யவதி கதை, வசனத்தை ரா.வே., எழுத இவருக்கு உதவியாளராக அவினாசிமணி பணியாற்றினார். 'வெண்ணிலாவின் ஒளிதனிலே தென்றல் வீசும் வழிதனிலே' என்ற ஏ.எம்.ராஜா, டி.வி. ரத்னம், எஸ்.ஸி.கிருஷ்ணன் பாடிய பாடலை சுப்பு ஆறுமுகம் எழுதினார்.

சிவாஜிகணேசன், எம்.என். ராஜம், தங்கவேலு ஆகியோர் நடித்த கலாட்டா பாடல். 'எந்தன் உள்ளம் உந்தன் அன்பின் சொந்தமே' என்று மறக்கமுடியாமல் இன்றும் நம் நினைவுகளில் உற்சாக இசை வெள்ளமாக ரீங்காரமிடும் அந்தப்பாடலுக்கு அன்றைய நடன இயக்குநர் வராததால் எல்.வி. பிரஸாத் அவர்களே இயல்பாக உல்லாசமாக ஆடி காண்பித்ததற்கேற்ப சிவாஜியும் ராஜமும் ஆடி நடித்தார்கள். சிவாஜிகணேசனுக்கு ஏ.எம்.ராஜாவின் குரல் குதூகலமாக ஒலித்தது. மற்ற பாடல்கள் அனைத்தும் மருதகாசி எழுதியவை. எஸ்.ஸி.கிருஷ்

ணன் பாடிய பாடல் தங்கவேலு நடித்தது. ராகினி நடனமாடும் 'அரும்பு மலர்ந்து அசைந்தாடும் பாரைய்யா' என்ற பாடலை சூலமங்கலம் ராஜலட்சுமிபாடினார். தங்கவேலு எம்.என். ராஜம் நடித்த ணாலே வெட்டாதே' காமெடி பாடலை டி.வி.ரத்னம், எஸ்.ஸி. க்ருஷ்ணன் பாடினார்.

'ஆசை கிளியே அழகு சிலையே அமுத நிலையே செல்வமே
வாசமலரே! பேசும் பிறையே வாழ்வின் நிதியே தூங்கடா!'

என்ற நீலாம்பரி ராக தாலாட்டை பி.லீலா பத்மினிக்கு பாட 'எல்லோரும் உன்னை நல்லவன் கொண்டாட வேண்டுமடா?' என்று பத்மினி நடித்த பாக்யவதியின் பிரபலமான பாடலை ஆர்.பால பாடினார். 'மங்கையர் திலகத்தில் (1955) 'நீல வண்ண கண்ணா' வைக் கொடுத்த தட்சிணாமூர்த்தி தி'யில் 'எல்லோரும் உன்னை நல்லவன் என்றே கொண்டாட வேண்டுமடா' என்ற அமைதியான பாலசரஸ்வதிக்கு கொடுத்தார். 'வாழ்வேது நல் வாழ்வேது' என்ற பின்னணி பாடலை சிதம்பரம் பாடினார். 'தினசரி என் வாழ்வில் திருநாளே தேவி மீனாட்சி அருளாலே', 'இல்லறம் என்றுமே கவே என்னருமை நாதன் திருந்தினார் அதனாலே இவ்வுலகில் நானே பாக்யவதி பாக்யவதி பாக்யவதி பாடல்களை பாலசரஸ்வதி பத்மினிக்கு பாடினார். பாக்யவதி தெலுங்கு படத்தில் என்.டி. ராமாராவ், நடித்திருந்தனர்.

## மலையே உன் நிலையே நீ பாராய்

'எதிர்பாராதது' படத்தை தொடர்ந்து சரவணபவா யூனிட்டின் இரண்டாவது தயாரிப்பாக காமுடி' வெளியானது. ஏ.கே.வேலன் கதை, வசனமெழுத பி.புல்லையா இயக்கனார். 'அமரதீபம்' தைத் தொடர்ந்து சிவாஜி, சாவித்திரி ஜோடி சேர்ந்த படம் 'வணங்காமுடி'. எம்.கே. ராதா, சாவித்தி தந்தையாக மகாராஜாவாக நடித்தார். வி.நாகையா, கண்ணாம்பா சிவாஜியின் தாய் தந்தையாக நடி தங்கவேலு எம்.சரோஜா காமெடி ஜோடி எம்.என். நம்பியார் வில்லனாகவும் ராஜசுலோசனா நர்த்தகியாகவும் நடித்தனர். கே.டி.சந்தானம், ஜெமினி பாலு, தங்கப்பன் பலர் நடித்த 'வணங் படத்திற்கு தஞ்சை ராமையாதாஸ் பாடல்கள் இயற்ற ஜி.ராமனாதன் மிக அருமையாக இசை பத்துப் பாடல்களும் ஹிட் ஆனவை.

சாவித்திரி, எம்.சரோஜா குழுவினர் படகில் பாடி கொண்டு போகும் 'ராஜயோகமே பாரீர் யோகம் காணவே வாரீர்' என்ற உல்லாச கோஷ்டி கானத்தை பி.சுசீலா குழுவினரோடு பாடி முடிக் ஆலாபனை பின்னணியில் ஒலிக்க ஜோன்புரியில் ''மலையே உன் நிலையே நீ பாராய்' என்று சிவா அதிரடியாக பாடுவார் சீர்காழி கோவிந்தராஜன். அந்த குரலைத் தொடர்ந்து மலை குகைக்கு வரும் ரசி சாவித்திரி, சிற்பி சிவாஜியை பார்த்ததும் காதல் வயப்பட ஆரம்பமாகிறது 'வணங்காமுடி' கதை சவையில் டி.எம்.சௌந்தரராஜன் நரம்பு புடைக்க'பாட்டும் பரதமும்' என்ற கீர்வாணி தொகைய முழங்கி 'ஓங்காரமாய் விளங்கும் நாதம் அந்த ரீங்காரமே இன்ப கீதம்' என்று பாடியது (தன் நண்பன் கவேலுவை சேனாதிபதி நம்பியார் அறைந்ததற்கு) சிவாஜியின் கண்டத்திலிருந்தே ப்ரவஹித்தது ரசிக்க வைத்த காட்சி. ஏழை பெண் போல கோயிலில் 'என்னை போல் பெண்ணல்லவோ' என்று யில் சாவித்திரி பாடுவதை பார்த்த கண்ணாம்பா மனமுருகிடுவார். தோடியை பளிச் பிசிறில்லாமல் உயர்தர குயிலிசையோடு கர்நாடக சங்கீத சுவையாக சுசிலாவின் கிளாசிகல் திற ஜி.ராமநாதன் நிரூபித்து விட்டார். சுசிலாவின் குரலில் கர்நாடக சங்கீதம் பாடல்கள் ஒலித்திருந்தால் பிருகா கமகத்தை வைத்துக் கொண்டு தப்பித்துக் கொண்டிருந்த குரலில்லாத கர்நாடக வித்வான்களின் என்னவோ. தோடி ராகத்தின் இளமை அழகு சுசிலாவின் குரலில் அமுதாக பொழிந்தது.

## வளர்மதியே வா கலை நிதியே வா

சுத்த தன்யாசி ராகத்தில் எம்.எல்.வசந்தகுமாரி பாடிய 'வா வா வா வளர்மதியே வா கலை வா வரமருள வா' என்ற பாடலை பாபநாசம் சிவன் கீர்த்தனைக்கிணையாக தஞ்சை ராமையாதாஸ் எழு என்று யாராவது நினைத்துப் பார்த்ததுண்டா.

சிரமதில் திகழ்வது ஜீவகசிந்தாமணி, செவிதனில் மிளிர்வது குண்டலகேசி,
திருவே நின் இடையணி மணிமேகலையாம் கரமதில் மின்னுவது வளையாபதியாம்
கால்தனில் ஒலிப்பது சிலப்பதிகாரம் கண்கண்ட ஐம்பெருங் காவிய திலகமே'

என்ற தொகையறாவுடன் பாடலையும் சுத்த தன்யாசியில் சுத்தமாக மெட்டமைத்திருந்தார் ஜி நாதன் அவர்கள். ராஜசுலோசனா ஆடும் நடனத்திற்கு எம்.எல்.வசந்தகுமாரி பாடிய அருமையான நா பாடல். 'அண்ணா, நாட்டியம் நன்றாக இருந்ததா' என்று சிவாஜியை அழைத்து ராஜசுலோசனா கேட்க, வலது இமையை உயர்த்தி கண்களால் கவனிக்கும் நம்பியாரின் trade mark அவருக்கே உரிய வில்லத் இதை போல் 'உத்தமபுத்திரன்' (1958) படத்தில் பல இடங்களில் கண்களை உயர்த்தி கைகளை பி

புனைவார் நம்பியார். இதே நம்பியார் தான் 'ரம்பையின் காதல்' (1956) படத்தில் ...வும், 'மக்களை பெற்ற மகராசி'யில் (1957) அமைதியான படித்த இளைஞனாகவும், 'பூலோக ரம்பை' ... 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' (1960) படங்களில் மிக சிறந்த குணச்சித்திர நடிகராகவும் மிளிர்ந்தார். ...' (1957) சகுனியும், 'ஹரிசந்திரா' விச்வாமித்ரரும் நம்பியாரின் ஆவியோடு ஒன்றி விட்டனர் ... 'தங்கமலை ரகசியத்தில்' எம்.வி. ராஜம்மாவின் கணவர் மன்னனாகவும், பின்னர் வீரப்பா ... நம்பியாராக இயல்பாக பிரமிப்பூட்டி விட்டார். இதெல்லாம் போதாதென்று 'அம்பிகாபதி'யில் ...த்தராக (மாயாபஜாரை போல) தங்கவேலுவைக் கட்டிக் கொண்டு மாரடிக்கும் பொல்லாத ... 1940களில் 'அபிமன்யூ', 'மோகினி', ராஜகுமாரி படங்களில் காமெடியாகவும், 'வேலைக்காரி', ...குமாரி', 'மர்மயோகி', 'சர்வாதிகாரி' படங்களின் மூன்றுவித பரிமாணங்களின் நடுவே 'திகம்பர ...ல்' குணசித்ர டைட்டில் வேடத்தில் நடித்த நம்பியார் 'அம்மா' (1952) 'பெற்ற தாய்', ...' (1953) போன்ற படங்களுக்குப் பின் 1955ல் இருந்து சக்கை போடு போடத் தொடங்கினார். ...ம்மா' (நகைச்சுவை வில்லன்-) 'கணவனே கண்கண்ட தெய்வம் ' (சேனாபதி வில்லன்), 'காவேரி' ...). 'குணசுந்தரி', 'நல்ல தங்கை' (கருணாநிதியோடு சேர்ந்து நகைச்சுவை) 'அமர தீபம்' (1956, வில்லன்) ... தொடர்ந்து வெற்றிநடை போட்டு 1959ல் 'கல்யாண பரிசில்' நாகேஸ்வரராவின் பண்பட்ட தந்தை ...திலும் 'பெண் குலத்தின் பொன்விளக்கில்' நகைச்சுவையும் செய்து 1950-கள் முடிய பலதரப்பட்ட ...திசயங்களை நடித்துக் கவர்ந்து விட்டார். 1950களில் சிவாஜிகணேசனின் ... கெட் அப்களுக்கு இணையாக பல விதமாக நம்பியார், ரங்காராவ் இருவருக்கே வாய்த்தது. ...ல் பெரும்பாலும் ஒரே மாதிரி நடித்து வந்தவருக்கு 1970களிலும் அதே கதைதான். ஆனால் ... பொறுத்தவரை கச்சிதமாக தன் வேலையை முடித்து வந்துவிடுவார். கடைசிவரை வள்மதி ...தியாகத்தான் திகழ்ந்தார்.

## கட்டழகு மாமா பொட்டழகு பூமா

1957ல் இரட்டை வேடங்களில் 'மாயா பஜார்' படத்தில் நடித்த சாவித்திரிக்கு போனசாக 'வணங்கா ... படத்திலும் அதே ஆண்டு இரட்டை வேடங்கள் யோகம் அடித்தது. குறத்தி வேடத்தில் பொருத்தமாக ... துமுக்கென்று அப்பாவி போல் பாடி ஆடும் பாடல், (எவ்வளவு வித்யாசத்தை காண்பிக்கிறார்!) ... சாவித்ரிக்கு 'கட்டழகு மாமா பொட்டழகு பூமா, விட்டு விட்டு ஓடாதே வெட்கங்கெட்ட டோமா! ... பாடலை பொருத்தமாக பி.லீலா குஷியாக பாடியிருக்கிறார். 'ஜாலிலோ ஜிம்கானா' எழுதிய தஞ்சை ...தாசுக்கு 'கட்டழகு மாமா' மற்றொரு relaxing contribution.

டி.எம்.சௌந்தரராஜன் - பி.சுசிலா இணைந்து 'பத்தினி தெய்வம்' படத்தில் 'மோகன புன்னகை ...' என்று ஜெமினி கணேசன் - சாவித்திரிக்கு மோகன ராகத்தில் விஸ்வநாதன் - ராமமூர்த்தி இசையில் ... 1957 ஆண்டிலேயே ஜி.ராமனாதன் இசையில் 'வணங்காமுடி' படத்தில் சிவாஜி - சாவித்ரிக்கு 'மோகன ...கை செய்திடும் நிலவே மேகத்தில் நீ மறையாதே' என்று இரவின் மடியில் நித்திரையின் சிந்தையில் ...தியாய் தவழும் பௌர்ணமி நிலவின் அமைதி சூழ்நிலைக்கேற்ப ...கேஸ்வரி ராகப் பாடலை மெட்டமைத்து ரசிகர்களையும் லயிக்கச் செய்து விட்டார் ஜி.ராமநாதன். ...த்தகும்மா கொய்யா பழம்போலே ஐயா வந்தாரே ஒய்யாரம் பாரேன்' என்ற ஜாலியான பாடலை ஜிக்கி ...தற்கேற்ப ஆடி மகிழ்வித்தார் ஹெலன். ஏ.எம்.ராஜா - பி.சுசிலா பாடிய 'வாழ்வினிலே வாழ்வினிலே ...தான் இனி வருமா, வசந்தமுடன் தென்றலுமே வாழ்ந்திடும் நாள் வருமா' என்ற பாடல் சிவாஜிகணே... சாவித்திரி நடித்த கனவு காட்சி. டி.எம்.சௌந்தரராஜன் பின்னணி பாடலாக 'ஆட்சியின் திமிராலே' ... ஒலித்தது. கடைசியில் தாயார் கண்ணாம்பா இறந்ததும் தொகையறாவாக 'ஈறைந்து மாதமே' ... உணர்ச்சிமிக்க உலுக்கும் குரலில் டி.எம்.எஸ் பாடுவார்.

## ஜெயமே அருள் லலிதா

1935ல் வெளியான டி.பி. ராஜலெக்ஷ்மி செல்லப்பா ஜோடி நடித்த ராயல் டாக்கீஸாரின் 'லலிதாங்கி' ... 1957ல் 'ராணிலலிதாங்கி'யாக வெளிவந்தது. 'நாட்டியதாரா' படத்திற்கு பின் (1955) தஞ்சை ராமையா ... கதை வசனம் பாடல்கள் எழுதி கல்யாண ராமஅய்யருடன் சேர்ந்து டி.என்.ஆர். (தஞ்சை என்.ராமையா ...) புரொடக்ஷன்ஸ் பேனரில் 'ராணி லலிதாங்கி' படத்தை தயாரித்து 1957ல் வெளியிட்டார். எம்.ஜி.ஆரை ...க்க வைத்து சரிபடாமல் போகவே சிவாஜியை நடிக்க வைத்து படத்தை முடித்தார்கள். டி.ஆர். ரகுநாத் ...கமும் ஜி. ராமநாதன் இசையும் 'ராணி லலிதாங்கி'யை தாங்க முடியவில்லை. அந்தக் காலகட்டத்தில் ...படம்' அலுவலகத்தின் அருகே தஞ்சை ராமையாதாஸ் மனை வாங்கி புதிய இல்லம் எழுப்பி புது ... புகுவிழாவில் எம்.கே.தியாகராஜ பாகவதரின் இன்னிசை கச்சேரி நடக்க பிரபல திரையுலக பிரமுகர் ... நாகிரெட்டி சக்ரபாணி, டி.ஆர்.மகாலிங்கம் போன்றோர் திரண்டிருந்தனராம். தென்னிந்திய திரைப்படக் ... வசனகர்த்தாக்களில் முதன் முதலாக Plymouth Car வாங்கிய பெருமைக்குரியவர் தஞ்சை ராமையா ... அவர்கள்தான். ப்ளைமௌத்தின் அன்றைய விலை ரூ.17000லிருந்து 18000க்குள்தான்.

சிவாஜியின் கால்ஷீட் உடனே கிடைத்ததால் ஊருக்குச் சென்ற ஆரூர்தாஸை விட்டு ஏற்கனவே கமான சக்ரவர்த்தி என்பவரை உதவியாளராக கொண்டு படத்தைத் தொடர்ந்தார். ஊரிலிருந்து வந்து அ யடைந்த ஆரூர்தாஸுக்கு 'அந்தமானவளே' தெலுங்கு பட மொழியாக்கத்திற்கு தமிழ் வசனமெழுதும் வே யைக் கொடுத்தார் ராமையாதாஸ். டப்பிங் டப்பாவில் அடைந்து கிடைப்பதை வெறுத்தாலும் பிற் தில் இந்த டப்பிங் foundation தான் ஆரூர்தாஸுக்கு கூடுதல் வருமானம் தந்தது. டப்பிங்கை ஆரூ சுலபமாக கையாள்வதை தஞ்சை ராமையாதாஸ் நன்கு கவனித்திருந்தார்.

'ராணி லலிதாங்கி' படத்தின் டைட்டில் பாடலை ஜி.ராமனாதன் உதவியாளர் டி.பி.ராமசந்திரனும் லாவும் பாடினார்கள். 'ஸ்ரீசரஸ்வதி மாதா ஜெய மருள் நித்யகலா வனிதா அருள் மாதா' என்று பல் தொடங்கி அனுபல்லவி வரை சரஸ்வதி ராகத்திலும் சரணத்தில் 'ஸ்ரீரஞ்சனி ஜெகமே புகழ் ரமணி' ஸ்ரீரஞ்சனி ராகத்தில் தொடங்கி 'ஜெயமே அருள் லலிதா' என்று லலிதா ராகத்தில் முடியும் இனிமை பக்தி பாடல். 'இன்பம் பேரின்பம் கடந்த ஞானியையும் தொடர்ந்து வினையாடும் இன்பம் பேரி என்று பானுமதி முனிவராக முறைப்பாக இருக்கும் சிவாஜியை நினைத்து பாடுவது. 'காதலுக்கு கண் இல் என்ற பின்னணி பாடலை சி.எஸ்.ஜெயராமன் பாடினார்.

டி.எம்.சௌந்தரராஜன் அமைதியாக 'எட்டடி புத்துக்குள்ளே நீ வசிக்க இடமும் இருக்குதய்யா' பாட சிவாஜியும் உருக்கமாக மிகை இல்லாமல் நடித்திருந்த தஞ்சை ராமையாதாஸின் கருத்துமிக்க பா ஆண்டவனே இல்லையே - தில்லை தாண்டவனே உன் போல் தாரணி மீதினிலே 'ஆண்டவன் இல்லை - என்ற மற்றொரு டி.எம்.சௌந்தரராஜன் பாடலிலும் 'நானே ராஜா' - 'ஆதி அந்தமில்லா அருள் ஜோதி பாடல் காட்சியில் கல்யாணியை பாவனை செய்தது போல சிவாஜி காம்போஜியை பாவத்தோடு வாய தார். தங்கவேலுவுக்கு முத்துலக்ஷ்மி, எம்.சரோஜா இருவருமே ஜோடிகள், நாடே கூட்டமாக வருவார்கள். இவர்களுக்கு 'புல் புல் ஜோடி மஜா' என்ற காமெடி பாடலை டி.வி.ரத்னம் எஸ் க்ருஷ்ணன் பாடினார்கள். 'ராணி லலிதாங்கி' படத்தில் பானுமதியின் வில்லேந்தி பாணமேற்றும் தோழி தேவிகா வருவார். டைட்டிலில் இவர் பெயர் ப்ரமீளா என்று வரும். அதுபோல் முத்துராமனும் சில கா களில் தோன்றுவார். இந்த இருவருமே இரண்டு வருடங்களில் ஜோடியாகவும் ஐந்து வருடங்களில் பி ஜோடியாகவும் வருவோம் என்று ராணி லலிதாங்கி நாட்களில் நினைத்திருக்க வாய்ப்பில்லை.

ஜமதக்னியாக தங்கவேலு, ரேணுகாதேவியாக முத்துலக்ஷ்மி, பரசுராமனாக எம்.சரோஜா நடி நாடகக் காட்சிப் பாடலில் திருச்சி லோகநாதன் ரத்னமாலா குரல்கள் ஒலிக்கின்றன. ஹாஸ்யம் பெயரில் மூன்று காமெடி நடிகர்களை வீணடித்துவிட்டார்கள். 'என்னங்க நிக்காதீங்க' என்ற பி. கோரஸ் பாடலுக்கு பாம்பாட்டி வேடத்திலிருக்கும் வில்லன் வீரப்பாவை மடக்கும் காட்சியில் தோழிய தேவிகா கிண்டல் செய்வார். இன்னும் ஏழு வருடங்களில் தான் தயாரிக்கப்போகும் இரு படங்களில் துணை நடிகை தேவிகா கதாநாயகியாக நடிப்பாறென்று வீரப்பா நினைத்திருக்க மாட்டார். 'கல்லென்ற கணவனாம்' என்ற பி. லீலா பாடலுக்கு ராஜசுலோசனா ஆடி சிவாஜியை கோபமூட்டி விடு இப்படத்தில் முதலில் எம்.ஜி.ஆர். நடித்த சில காட்சிகளில் அவருடன் ராஜசுலோசனா ஆடி சிவாஜி கோபமூட்டி விடுவார். இப்படத்தில் முதலில் எம்.ஜி.ஆர். நடித்த சிலகாட்சிகளில் அவரு ராஜசுலோசனா பங்கேற்றவைகளில் இந்தப்பாடலும் இருவரும் நடித்து படமாக்கப்பட்டிருந் 'என்னையறியாமல்', 'கனவு பலிக்குமோ' போன்ற பானுமதி பாடிய பாடல்களைவிட 'இன்பம் பேரி என்ற அவரது மற்றொரு பாடல்தான் பிரபலம். அந்தப்பாடல் காட்சியில் பானுமதி ஆடியத புல்லரித்துப்போய் ருத்ர தாண்டவம் போல் சிவாஜி காமெடியாக ஆடி படு சிரிப்பை வரவழைத்தது மிச்சம். நையாண்டிக்காரரான பானுமதி அந்தக் காட்சியை எப்படியெல்லாம் கிண்டலாக ரசித்தா 'பொருத்தமான வயசு' என்ற ஜிக்கிப் பாடலுக்கு ஆடிக்கொண்டே வீரப்பாவை மயக்க ஈ.வி. சரோஜாவு தயாரிப்பாளர் தஞ்சை ராமையாதாஸ் ஒரு நடன வாய்ப்பளித்து விட்டார். இந்த போரடிக்கும் படத்திலி எம்.ஜி.ஆர். விலகிக் கொண்ட காரணங்கள் நன்றாகவே விளங்குகிறது.

எஸ்.வி. சஹஸ்ரநாமத்தின் ஸேவா ஸ்டேஜ், வைரம் நாடக சபா, நாடகங்களில் முத்துராமன் தே நடித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் 'ரங்கோன் ராதா'வில் முத்துராமனுக்கு சிறு வேடம் கிடைத் பிறகு தேவிகாவுக்கு பானுமதி சிபாரிசால் 'மணமகள் தேவை' 'ராணி லலிதாங்கி' படங்களில் துணை ந வேடம் கிடைத்தது. அக்காலகட்டத்தில் சினிமாவில் பிரபலமான பிறகும் நாடகத்தில் தொடர்ந்து நடிக நடித்து வந்தனர். அந்த வகையில் சிவாஜி கணேசன் திரையில் நடித்த 'கண்கள்' நாடகத்தில் நடித்திருந்த தேவிகா அவர்களே தொலைக்காட்சி 'மலரும் நினைவுகள்' நிகழ்ச்சியில் சொல்லியிருக்கிறார்.

## உலகம் அறியாத புதுமை

முத்துராமன் ஒரே ஒரு காட்சியில் தோன்றிய மற்றொருபடம் 'ஹரிசந்திரா'. 1955-56ல் தொடங் படப்பிடிப்பு 10 வருடங்களில் அவ்வப்போது தொடர்ந்து, படத்தை 1968ல் வெளியிட்டார்கள். நடிகை ஜ

தயாரித்த 'ஹரிசந்திரா' படத்தை அவரது கணவர் கே.எஸ்.பிரகாஷ் ராவ் இயக்கினார். கடைசிக் காட் ஜி.வரலட்சுமி மிகவும் வெயிட் போட்டது போல் இருந்தார். அந்த சிலகாட்சிகள் வருடங்கள் கழித்து வை போல் இருந்தது. 1956ல் 'வாழ்விலே ஒரு நாள்', 'நான் பெற்ற செல்வம்' படங்களில் ஜோடி நடித்த சிவாஜி கணேசனும், ஜி.வரலட்சுமியும் ஹரிசந்திரா சந்திரமதியாக வாழ்ந்தது போலவே நடித்தார் பொறுமையாக மிக இயல்பாக ஹரிசந்திராவை சிவாஜி நம் கண் முன் நிழலாட வைத்து உருக வைத்து . படிப்பில்லாமல் சிறிய வயதிலிருந்து நாடகத்தில் நடித்து, வாழ்க்கை அனுபவங்கள், மற்றவர்களை து, ஹிந்தி, ஆங்கில படங்கள் பலவற்றின் பாதிப்பில் தன்னைத்தானே வளர்த்துக் கொண்டு காண் வியக்கும்படி நடிப்பை வழங்கிக கொண்டிருந்த சிவாஜிக்கு மட்டும் எங்கிருந்துதான் இத்தனை பரிமா ளும் காண்பிக்கத் தெரிகின்றன. அதுவும் 1952ல் 'பராசக்தி' படத்தில் நடித்து ஆறு வருடங்களுக்குள் ரை சிவாஜி கணேசன் நடித்த படங்கள் அனைத்துமே இயல்பாக பாத்திரத்தின் தன்மையை மிகைபடுத் பிரமிப்பாக நடித்த காலகட்டம். சிவாஜிகணேசன் நடிப்பை ரசிக்க வேண்டுமென்றால் 1952-58 வரை நடித்த படங்களை அனைத்தையும் கண்டிப்பாக பார்த்தால் விளங்கும். இந்தக் கால கட்டத்திலேயே நடிப்பில் நவரசங்களையும் பல முகங்களையும் காட்டி முடித்து விட்டார்.

சந்திரசேகரா மூவீஸ் சார்பாக பிரமோதா நிறுவனம் மூலம் ஜி.வரலட்சுமி தயாரித்த 'ஹரிசந்திரா' குல மன்னனின் கதை, ஆதவனுக்கு பூபாளத்தில் அர்க்யம் விடும் முனிவரின் காட்சியோடு படம் கும். 'பொன்னோடு பொருள் நிறைந்து மன்னன் வாழ்கவே' என்று டி.எம்.சௌந்தரராஜன் குழுவி பாடும் டைட்டில் பாடலில் 'நாடு செழிக்கணும் நல்ல மழை பெய்யணும், நாளும் மகராஜன் ணும்' என்ற கோரஸ் நடன பாடலை தொடர்ந்து ஹரிசந்திரா ஜாவாக சிவாஜி கணேசன் சூரிய பகவானுக்கு பூஜை செய்யும் காட்சி. 'நீதிதேவன் உலகில் நீ அல் . இன்ப நிலையெல்லாம் உந்தன் செயலல்லவோ' என்ற லதாங்கி ராகத்தில் டி.எம்.சௌந்தரராஜன் சிவாஜி கணேசன் - ஜி.வரலட்சுமிக்கு சூரிய துதிக்காக பாடியது. இந்த பாடலின் முடிவில் தொகை 'பாவலரும் நாவலரும் பாமாலை பாடவே பக்த கோடிகள் மகிழ்ந்து பூமாலை சூடவே தேவாதி நல்லாசி கூறவே திரிசங்கு செல்வனே வாழ்கவே நீ வாழ்கவே' என்று டி.எம்.எஸ்.சௌந்தரராஜன் வரிகளை முத்துராமன் முனிவர் வேடத்தில் பாடுவார். தாடியோடு சட்டென்று அவரை அடையாளம் து.

ஏ.கே.வேலன் - உதயகுமார் இருவரின் கதை, வசனம், தஞ்சை ராமையாதாஸ் - உதயகுமார் இருவ பாடல்களுக்கு கே.வி.மகாதேவனின் இசையில் உயர்ந்த வேதாந்த தத்துவங்கள் நிறைந்த பாடல்களை சௌந்தரராஜன் குரலில் கேட்ட காலங்கள் உண்மையிலேயே dedicated decade என்று சொல்லலாம். தேவன் இசையில் முதன் முதலாக 'கூண்டுகிளி'யில் (1954) பாடிய சௌந்தரராஜனுக்கு 'ஹரிசந்திரா' பாடல்கள் ஒரு வரபிரசாதம். யாருக்குமே கிடைக்காத பாக்யமாக அவருடைய குரலுக்காகவே மகா மெட்டமைத்தது போல இருந்தன. சொர்க்க லோகத்தில் நடப்பதாக ஷ்ணா சசி இருவரின் ரதி மன்மத நடனம் இடம் பெறுகிறது.

விஸ்வாமித்ர முனிவராக நம்பியாரின் மற்றொரு வில்லங்க முகம். 'மந்திர குமாரி', 'மர்மயோகி', கரி', 'காவேரி' படங்களின் முகங்களையும் மிஞ்சி புராண கால விஸ்வாமித்திரராகவே மாறி விட் என்று அஞ்சக்கூடிய அளவு நடிப்பை வழங்கினார். பொறுமையான ஹரிசந்திராவை சோதனைகளின் க்கே தள்ளிசென்று சிவாஜி கணேசனுக்கு நிகராக த்ன் இயற்கையான நடிப்பு திறனைக் காண்பித்தார். ரோஜா குசலகுமாரி இருவரையும் ஏவிவிட்டு சோதிக்கும் கட்டத்தில் மிக அமைதி காத்து கூச்சமாக ஆட்டத்தை அணுகி கண்ணியமாக நடந்து கொள்ளும் சிவாஜி அவர்களின் நடிப்பு மறக்க முடியா கே.ராணி, சரோஜினி பாடிய 'ஆடும் மயில் வேணுமா பாடும் குயில் வேணுமா அழகான அன்ன வேணுமா' பாடலுக்கு ஈ.வி.சரோஜா குசலகுமாரி இருவரின் நடனம். விசுவாச மந்திரியாக பாத்திரத்தின் அறிந்து நடித்தார் முஸ்தஃபா. குரு விஸ்வாமித்திரருக்கு சகுந்தலை பிறந்த கதையான 'இங்கே அங்கேருக்கு' என்ற எஸ்.ஸி. கிருஷ்ணன் பாடலுக்கு சிஷ்யர்கள் ஆடலில் தங்கவேலு மேனகா வேடம் விஸ்வாமித்திரர் ராமராவ் அவர்களை மயக்கி கிண்டல் செய்யும் காட்சி. விஸ்வாமித்ரருக்கு நாட் தன் சகலத்தையும் தாரை வார்க்கும் காட்சியில் 'அந்தணரும் அமரரும் இன்புறும், அருட்செல்வமே து. நிந்தனை செயலின்றி நிலைத்திடும் நிதியாவும் நின் பாதமலர் சேரவே என்னையே வாய்மையின் யை காணவே யாவையும் தத்தம் செய்தேன் நின் தயையை கவரும் குரு பக்தியே முக்தியின் வித் வேணும் ஸ்வாமி' என்று சாரங்கா ராகத்தில் டி.எம்.சௌந்தரராஜன் சிவாஜிக்கு பாடிய அருமையான விருத்

'காசியில் வாழும் கருணைகடலே' என்று சிந்துபைரவி ராக பாடலை மனமுருக பாடி சிவாஜிக ன் நடிப்புக்கு பன்மடங்கு மெருகூட்டினார் டி.எம்.சௌந்தரராஜன். 'உலகம் அறியாத புதுமை' என்ற

பிம்ளாஸ் ராகத்தின் சோகத்தை பிழிந்தெடுக்கும் பாடலை மீண்டும் டி.எம்.சௌந்தரராஜனின் துயரத்தில் நிலைத்து நின்று நடித்தார். ஹரிசந்திரா விலை போகும் காட்சியில் பலர் வாங்க நடிகர் உசிலைமணி பலரில் ஒருவராக அங்கே வந்து சிரித்து விட்டு போவார். காசி வாழ் அந்த களாக வி.கே.ராமசாமி - முத்துலட்சுமி இருவரும் சந்திரமதி - லோகிதாசனை விலைக்கு வாங்கி வேலை வாங்கும் கட்டங்கள் ஒரு பக்கம், வெட்டியானான பாலையாவிடம் ஹரிசந்திரா வி சுடுகாட்டில் காவல் இருக்கும் கட்டங்கள் மறு பக்கம். 'பிறந்தது மண் மேலே' என்ற தொ தொடர்ந்து 'யார் போய் சொல்வார் இந்த ஏழை வருந்தும் வேளை ஹரனிடம் யார் போய் சொ என்ற கனரக பைரவிராக பாடலை டி.எம்.சௌந்தரராஜன் குரலில் கேட்கும்போதே நெஞ்சம் கனக் சியை பார்த்தால் சிவாஜியின் நடிப்பும் பாவங்களும் ரசிகர்களை மெய் மறக்க செய்திருக்கும் என் மையே.

## நரனையும் நஞ்சையும் நீ படைத்தாய்

விஸ்வாமித்திரர் ஏவலால் பாம்பு கடித்து இறந்து போகும் லோகிதாசனை காட்டில் காண செல்லும் காட்சியில் பின்னணியாக பாலசர்ஸ்வதியை சரியான தேர்வாக பாட வைத்தார் கே.வி.ம 'நரனையும் நீ படைத்தாய், அவனை பலியாக்க நஞ்சையும் நீ படைத்தாய் விதியின் நாடகத்தின் வி டில் மனித ஜென்மத்தை ஏன் படைத்தாய்' என்ற தொகையறாவை தொடர்ந்து 'மாளிகை வாழ்வும் உன் மணிமுடி வாழ்வும் எங்கே மரண தேவதையின் மடியினில் உன் மகன் உறங்குகிறான் என்ற வரிகள் பாலசரஸ்வதி குரலில் கண்ணீரை வரவழைக்கும். இந்த நீண்ட பாடலின் மறு பகுதி மாதம் உடலது தளரும்' என்ற பத்து மாத பந்தத்தை விருத்தமாக கறைய வைப்பார் பாலசரஸ்வதி. லும் பறையனல்ல, ஜாதியிலும் பறையனல்ல, நீதியிலும் பறையனல்லவே, நானே பாதியிலே னானேனே!' என்ற டி.எம்.சௌந்தரராஜன் பாடலுக்கு சிவாஜியின் உருக்கமான நடிப்பு. கடைசியி சந்திரா' சத்யசோதனையில் வெற்றிபெற்று, சுடுகாடே யாக குண்டம் என்றும் அவனை தேவர்கள் வந்தவர்கள் என்றும் பரமசிவன் விளக்க, 'விண்ணவர் கதியே போற்றி' என்ற டி.எம்.சௌந்தரராஜன் சிவதுதி விருத்தம்பாடி சிவாஜி கணேசன் - வரலக்ஷ்மி வணங்கும் காட்சியோடு படம் முடிவடைகிற

பொய்யும் புரட்டும் கேளிக்கையின் மாய உலகின் ஜொலிப்புக்கு தேவையான பிறகு உண் பேசும் 'ஹரிசந்திரா' படத்தை பொறுமையாக பார்ப்பவர்கள் குறைவாகத்தான் இருப்பார்கள். அதுவும் கடந்து 1968ல் வெளியாவதற்குள் 'ஹரிசந்திரா'வின் த்ரேதாயுக சோதனைகள் போல வரலக்ஷ்மி கே. காஷ்ராவ் இருவரும் கலியுக சோதனைகளை அனுபவித்திருக்கிறார்கள் போலிருக்கிறது. எப்படியோ யத்திற்கு அழிவில்லை. உண்மை வெளியாகும் என்பது போல் ஜி.வரலட்சுமியின் 'ஹரிசந்திரா' ணேசன் அவர்களின் நடிப்பை ரசிகர்கள் கண்டு உருக 12 வருடங்களுக்கு பிறகு வெளியாயிற் வாக்கில் 'திருவிளையாடல்' வெற்றிக்குப் பிறகு ஏ.பி.நாகராஜன் சிவாஜி கணேசனை வைத்து தொ புராண படங்கள் வெளியிட்டு வந்த நேரத்தில் 'ஹரிசந்திரா'வுக்கு அடித்தது யோகம். ஆனால், தொடர்ந்து கவி காளிதாஸ்' *(1966)* 'திருவருட்செல்வர்' *(1967)* 'திருமால் பெருமை' *(1968)* பட சுமாராக ஓடிய நிலையில் 'ஹரிசந்திரா'வும் அந்த கதியைதான் அடைந்தது. ஏதோ படம் வெளியானதி கர்களாகிய நாம் பார்க்கக் கொடுத்து வைத்திருந்தோம்.

## பொன்னி மணக்க புகழ் மணக்க

*1952*ல் 'பராசக்தி'யின் வெற்றிக்குப் பிறகு பல தயாரிப்பாளர்கள் டைரக்டர்கள் சிவாஜியை பல சரித்திர சமூக வேடங்களில் நடிக்க வைக்க போட்டி போட்டுக் கொண்டு படங்கள் தயாரிக்க தொட கள். அந்த வரிசையில் ஏ.எல்.எஸ். பேனரின் முதல் படத்தில் 'அம்பிகாபதி'யாக சிவாஜிகணேசன், தியாக பானுமதி நடித்தனர். *1957*ல் எம்.கே.தியாகராஜபாகவதர், சந்தான்லட்சுமி நடித்த 'அம்பிகாபதி வருடங்களுக்கு பிறகு *1957*ல் சிவாஜிகணேசன் - பானுமதி நடித்த 'அம்பிகாபதி' சரியான காலகட்டத்தில் ரித்து ஏ.எல்.ஸ்ரீனிவாசன் அவர்கள் பெருமையை சேர்த்துக் கொண்டார். முதல் அம்பிகாபதியை அ ரான எல்லீஸ் ஆர்.டங்கன் டைரக்ட் செய்து எடிட்டிங்கும் செய்து நமக்கு பெருமையாகும். அம்பிகாபதியை இப்படத்தில் ஒப்பந்தமானவர்களுக்கு திரையிட்டு காண்பித்தபோது அதிலும் நடித்தி என்.எஸ்.கே. மதுரமும் ரசித்துக் கொண்டிருக்கையில், கார் விபத்தில் அப்போது மரணமடைந்தி சந்தானலெக்ஷ்மியை நினைத்து ஆழ ஆரம்பித்த மதுரத்தை சமாதானம் செய்தாராம் என்.எஸ்.க்ருஷ்ணன்.

*1957*ல் 'அம்பிகாபதி' திரைக்கதையை சக்தி கிருஷ்ணசாமி, சின்ன அண்ணாமலை, லக்ஷ்மணன் மூவர் அமைக்க, வசனத்தை பா.நீலகண்டனும் லக்ஷ்மணனும் எழுதினர். பா. நீலகண்டன் இயக்கிய பிகாபதி' படத்திற்கு தஞ்சை ராமையாதாஸ், கண்ணதாசன், கே.டி.சந்தானம், கு.மா.பாலசுப்பிரமணியம், டுக்கோட்டை கல்யாணசுந்தரம், ஆதிமூலம், கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் ஆகிய ஸப்த கவிகளின் ப

ஜி.ராமனாதனின் பொருத்தமான இசையமுத வெள்ளம்தான். 'மூங்கில் இலைமேலே ......' ஒரு வழிப்போக்கன் பாடுவதை கண்டு கம்பர் வியந்ததாக சொல்லப்படுவதை நாகையா - சிவாஜி விவாதிக்கும் கவிதை காட்சியில் அமராவதியின் 'மூங்கில் இலை.........' யின் வரிகளுக்கு 'மூங்கில் இலைமேலே தூங்கும் பனிநீரே .........' என்று வார்த்தைகளாக இயற்றுவதாக வசனம் எழுதியிருக்கிறார். (1965ல் வெளியான 'காட்டுராணி' படத்தின் பாடல் பல்லவிக்கு கண்ணதாசன் இந்த வரிகளை தழுவிக்கொண்டார்).

வி.நாகைய்யா - சோழ நாட்டு ராஜா ராணியாக ருஷ்யேந்திரமணி, அவர்கள் மகள் அமராவதியாக கம்பராக எம்.கே.ராதா, அவர் மகன் அம்பிகாபதியாக சிவாஜிகணேசன், ஒட்டக்கூத்தர் - நம் வேங்கை நாட்டு இளவரசன் குலசேகரனாக தங்கவேலு, அவரது நண்பர் 'வெங்காயம்'ஆக ஏ.க அம்பிகாபதியை ஒரு தலையாக காதலிக்கும் முறைப்பெண்ணாக ராஜசுலோசனா மற்றும் என்.எஸ்.கிருஷ்ணன், டி.ஏ.மதுரம் பலர் நடித்தனர். கம்பராக நடிக்க எம்.கே.டி. அவர்களை போது தான் நடித்த 'அம்பிகாபதி' மக்களின் மலரும் நினைவாக மலர்ந்து கொண்டிருந்தபோது, விட கூடுதலாக சம்பளம் வழங்கிய போதும் வேண்டாம் என்று மறுத்து விட்டாராம். வேறெதா சிவாஜி அவர்களுக்கு தந்தையாக நடிக்க சம்மதம் தெரிவித்தாராம். ஆனால், அதுதான் நடக்கா போய்விட்டது. கம்பர்வேடத்தில் கச்சிதமாக செய்திருந்த செருகளத்தூர் சாமாவின் இடத்தில் நினைத்து பார்க்க முடியாத எஸ்.வி. சுப்பையா நிராகரித்து விட்டதால் எம்.கே. ராதா கம்பராக

'உந்தி கொடுப்பவன் உத்தமனானவன் உழைத்து உண்பவன் உயர்ந்தவனாவான்
கண்டதும் கற்றவர் பண்டிதனாவான் காதால் கேட்டவன் மேதையாய் போவான்'

என்ற வரிகளை கேட்டதும் வியக்கும் கம்பர் மறுபடி பாட சொல்லும்போது 'அதுதானாய் வருவது, பாட முடியாது' என்று தன்னை செண்பக தீவின் பாடகன் என்று அறிமுகப்படுத்தி கம்பரை காண இவர்தான் அவர் என்று தெரிந்ததும் என்.எஸ்.கிருஷ்ணன் தன்னுடைய வழக்கமான நடுக்கத்தை நடிப் இப்படி என். எஸ். க்ருஷ்ணனின் அறிமுகமே தமாஷ்தான்.

அரசரிடமிருந்து கம்பருக்கு ஓலை கொண்டு வரும் மதுரம் என்.எஸ்.கிருஷ்ணனை 'ஓ வம்பரா' என்று செய்வார். உள்ளிருந்து கடங்களை எடுத்துக் கொண்டு தரையில் வைத்து 'கலை' என்று சொல்வதற் பானைகளை கலைத்து விடுவார். அதற்கு 'கலை என்றால் கலையும் ஆகும், கலைத்தலும் ஆகும்' சிலை என்று அனைத்துக்கும் இரு அர்த்தங்கள் கூறி மதுரத்தை மயக்குவார். பிறகு பானையை கொண்டு 'கண்ணே உன்னால் நானடையும் கவலை கொஞ்சமா' என்று பாட மதுரம் 'ஏய் கண்ணே, என்னை தானே அழைச்சே' என்று கேட்க, தன் தூக்கமில்லா கண்ணை சொன்னதாக சமாளிப்பார். உன் தயவை என்றுதான் பெறுவேனோ' என்று பாடியதற்கு பித்தளை, வெள்ளி வரை காசு வந்தி தங்க காசு என்று வருமோ என்று ஏங்குவதாக சமாளிப்பார். 'தேனே உன்னை தேடி தேடி நான் அலைந் என்று பாட பஸ்பத்திற்கு தேனை தேடுவதாக சமாளிக்க, 'எதிரிலிருந்தும் தொட பயந்தேனே என்று என்ன அர்த்தமாம் ஆஹா ஆஹா' என்று சிரித்துக் கொண்டே சென்று விடுவார் மதுரம். மதுரத்தை செய்து கொள்ளும் தன் ஆசையை கரியால் சுவரில் வெட்கத்தோடு என்.எஸ். க்ருஷ்ணன் எழுத ஆமோதித்து 'ஆனால்' என்று எழுதுவார். 'இந்த ஆனால் இருக்கே அது ஆபத்தான வார்த்தை', அழகா இல்லையே' 'அழகு முகத்திலே இல்லை, அகத்திலே தான் இருக்கு. நெஞ்சத்தழகே அழகென்று இருக்காங்க' என்று இருவரும் 'சந்திர சூர்யர்போல்' (அம்பிகாபதியில் தியாகராய பாகவதர் பாடியது) பாடலை மீண்டும் பாடுவர். 'கண்ட கனவும் இன்று பலித்ததே' என்று ராக பாடலை ராஜசுலோசனாவுக்கு என்.எல்.கானசரஸ்வதி பாடினார்.

'பொன்னி மணக்க புகழ் மணக்க' என்று வி.என்.சுந்தரம் கம்பருக்கும் (எம்.கே.ராதா) சீர்காழி கோவிந் ஒட்டக்கூத்தருக்கும் (நம்பியார்) 'வரும் பகைவர் படை கண்டு' என்று டி.எம்.சௌந்தரராஜன் திக்கும் (சிவாஜி) விருத்தமாக பாடுவர். 'என்னரும் நலத்தினாள்' என்று கம்பராமாயண வரிகளை எம்.கே.ராதா) பாட, 'அண்ணலும் நோக்கினாள் அவளும் நோக்கினாள்' என்று வரிகள் வரும்போது அம்பிகாபதி இருவரின் கண்கள் கலக்க அதை நம்பியார் நோக்கும் விதமே தனி. 'அமராவதியே ழுதே' என்ற தொகையறாவோடு 'அந்தமேவுமரவிந்த மாமரில் வந்த வேதவல்லியோ' என்றொரு 'அம்புலியை குழம்பாக்கி அரவிந்த ரசயோடு' என்று மற்றொரு விருத்தத்தையும் டி.எம்.சௌந் பாடினார். அந்தக் காட்சியில் சிவாஜி விட்டு வைத்த ஓலையை வாசித்து அதை ரசம் வைக்கும் என்று ஒன்றும் விளங்காமல் தங்கவேலுவும் ஏ.கருணாநிதியும் நம்பியாரிடம் கொடுக்க, படத்திற்கு ந்தாக திருப்பத்தை உண்டாக்குவார்.

கண்ணதாசன் எழுதிய 'கண்ணிலே இருப்பதென்ன கன்னி இளமானே' என்ற பாடலில் 'பானுமதி வரும் கானகத்தின் மேலே' என்ற வரிகளுக்கு பானுமதி விளக்கம் கேட்க, கவிஞர் அதற்கு சூரியனும்

(பானு) சந்திரனும் (மதி) சேர்ந்தது என்ற பானுமதி என்ற சொல்லுக்கு விளக்கமளித்து வியக்க வைத்தா பானுமதியின் கால்ஷீட் கிடைக்காததால் பானுமதி பாடுவதையும், ராஜசுலோசனா ஆடுவ தனித்தனியாக படமாக்கி பாடல் காட்சியை ஒன்றுசேர்த்தார்களாம். பி.சுசீலா பாடிய 'ஆடட்டுமா பாடட்டுமா உங்கள் அழகான வதனமதில் ஆனந்தம் உண்டாக நான் ஆடட்டுமா' என்ற ஒரே பாடலை தமாக இருக்கும் சிவாஜிக்கு ராஜசுலோசனா ஆடும் நடனம்.அமராவதி கிடைக்காத விரக்தியில் பாடும் வேலுவுக்கு சீர்காழி கோவிந்தராஜன் 'காவிதுணிகளை நான் கட்டிப்புட்டேன். காமக் குரோதங்களை டுப்புட்டேன்' என்று பாடலை பாடுவார். 'கோனா இககனனா பொய்காலு குதிரையை சொன்னா' காழி கோவிந்தராஜன் பாடலுக்கு தங்கவேலு - ஏ.கருணாநிதி ஆகியோரின் பொய்கால் குதிரை ஆட்ட

தோட்டக்காரனாக கள்ளப்பார்ட் நடராஜன், என்.எஸ்.கிருஷ்ணனுடன் வாக்குவாதம் செய்யும் பானையை தலையில் தவைத்து கரகாட்டம் ஆடுவதாக சொல்லி பானையை உடைத்து வெறுப்பேற்றுவார் என்.எஸ்.கே. பிறகு செண்பகத் தீவுக்கே செல்வதாக என்.எஸ்.கிருஷ்ணன் - மதுரம் அம்பிகாபதியிடம் விடை பெற்று செல்லும். சரியாக இதற்கு பிறகு என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின் 'அம்பிகாபதி' படத்தின் தொடர்ச்சியை பாதிக்கவில்லை.'செண்பகத்தீவுக்கு போகிறேன்' என்று விடைபெ சொர்க்கத்திற்கே செல்வதாக திரையில் ரசிகர்களுக்கு விடை கொடுத்து விட்டார். 1957ல் கலை மறைவுக்குப் பின் சிலபடங்களில் மட்டுமே நடித்தார் மதுரம். 'அபலை அஞ்சுகம்', 'கண்திறந்தது' 'அரசிளங்குமரி' (1961), 'காஞ்சித்தலைவன்' (1963) போன்று சில படங்களில் மட்டுமே அவரை காண மு அவரை நடிப்பதை நிறுத்தச்சொல்லி குடும்ப படிப்புத் திருமணச் செலவுகளை எல்லாம் தான் மதுரத்திற்கு ஆதரவாக இருந்தார் எம்.ஜி.ஆர். அதோடு கலைவாணரின் நாகர்கோவில் வீட்டை ஏலத்தி எம்.ஜி.ஆர். மீட்டுத்தந்தாராம் இதில் ஒற்றுமை என்னவென்றால், என்.எஸ். க்ருஷ்ணன் காலமான 1957ல் தான் உலகப்புகழ் காமெடி இரட்டையர்களான லாரல்-ஹார்டியில் ஒருவரான ஆலிவர் ஹா காலமானார். தானும் என்.எஸ்.கே.யும் கருத்து வேற்றுமையாக இரு துருவங்களாக இருந்தாலும் பூதஉடலை ஊர்வலமாக கொண்டு செல்ல தனது நாடக வேனை எம்.ஆர்.ராதா கொடுத்தனுப்பி தனது ந்த பண்பை நிரூபித்துவிட்டார்.

## தமிழ் மாலை தனை சூடுவான்

'இட்ட அடி நோக எடுத்த அடி கொப்பளிக்க' என்று அம்பிகாபதி அமராவதியை பார்த்து 'கொட்டி கிழங்கோ கிழங்கென்று' என்று கம்பர் சமாளித்து முடிக்க, அன்று கலைவாணிதான் அவனை டிக்கிழங்கு விற்பவள் ரூபத்தில் காத்திருக்கிறாள் என்று கே.டி.சந்தானம். சிவாஜியை எச்சரிப்பர். பின் பிகாபதி நாடு கடத்தப்பட புயலில் சிக்கி செண்பகத் தீவில் கலைவாணர் அர்ஜுனன் தெய்வமானதை கண் கலங்கி அவருடைய சிலை முன் பெருமையை கூற, திரையில் நிகழ்ந்தது போலவே நிஜத் விடைபெற்ற என்.எஸ்.கிருஷ்ணனுக்கு திரையிலேயே அஞ்சலி செலுத்தும் கட்டத்தையும் காண்பித்து டார்கள். கப்பலில் புறப்பட்டு செல்லும்போது 'கண்ணிலே இருப்பதென்ன கன்னி இளமானே' பாட டி.எம்.சௌந்தரராஜன் சிவாஜிக்கு சோகமாகப்பாடுவார். 'அம்பிகாபதி' படத்திற்காக கதை வசனம் வரவழைக்கப்பட்டு சரிபடாமல் பாரதிதாசன் விலகிக்கொண்டதால், ஏ.எல்.எஸ். அவர்கள் நீலகண்டனிடமே அந்தப் பொறுப்பையும் கொடுத்தார். பாரதிதாசன் ஒதுங்கிய பிறகு அந்த வாய்ப்பு த கொடுக்கப்படாமல், நீலகண்டனுக்கு சென்றதில் தன் அண்ணன் மீது கோபம் கொண்டு கண்ண ஆபிஸில் சத்தம் போட்டுவிட்டு சென்றுவிட்டார். ஆனால் படத்தில் அவரது ஒரே பாடலான 'கண் இருப்பதென்ன கன்னியிளமானே' மிகச் சிறப்பாகவே அமைந்தது.

டி.எம்.சௌந்தரராஜன் பானுமதி பாடிய 'மாசில்லா நிலவே' மாண்ட் ராகத்தில் தொடங்கி ' மிங்கே பூமி இங்கே' என்று புன்னாகவராளியில் முடியும். டி.எம்.சௌந்தரராஜன், பானுமதி பாடிய ' மலரே தமிழ் தேனே' என்ற பாடலை முகாரியில் மெட்டமைத்து காதல் என்பதே இன்பத்தில் துன்பம் பின் வரும் துன்பத்துக்கு அறிகுறியாக அந்த இன்பப் பாடலை இசை அமைத்தார் போலும்.

சிற்றின்பம் கலக்காமல் நூறு பாடல்கள் பாடினால் அமராவதியை மணக்கலாம் என்ற நிபந்தனை 'அம்பிகாபதி' பாடும் காட்சிக்கு டி.எம்.சௌந்தரராஜனின் இரு சூப்பர் ஹிட் பாடல்கள். ஜி.ராமநாதன் ளின் உச்சகட்ட இசை விருந்தை 1957-58 பாடல்களில் அனுபவிக்கலாம். அதில் 'அம்பிகாபதி'யில் இடம் இந்த இரண்டு பாடல்களும் டி.எம்.சௌந்தரராஜனின் குரலின் பொக்கிஷங்கள், கல்யாணி ராகத்தில் தனை செய் மனமே' என்று தொடங்கி ராகமாலிகையாக 'வடிவேலும் மயிலும் துணை' என்றும் இரு தான பாடல்களுக்கு சிவாஜி அவர்களின் நடிப்பு உயிர் கொடுத்து சிரஞ்ஜிவித்வம் பெற்று விட்டது. 'வடி லும் மயிலும் துணை' என்று High Pitchலேயே தொடங்கி முடிவில் 'சற்றே சரிந்த குழலே' என்ற வரி உச்சகட்டத்திற்கே செல்ல வைத்து ஜி.ராமநாதனால் சௌந்தராஜனின் திறமை பளிச்சிட் இனிமேல் யார் அப்படி பாடி வியக்க வைக்கப் போகிறார்கள். இப்பாடலின் கடைசி சந்தத்தில் மூச்சுவிட

...டே 'தமிழ்மாலை தனை சூடுவான்' வரிகளில்தான் டி.எம்.எஸ். மூச்சுவிட்டதாக தெரிகிறது. கடவுள் ...யும் ஒரு பாடலாக சேர்த்து நூறு பாடல்கள் முடிந்ததென்று பானுமதி வெளியில் வரவும், சிவா ... 'சற்றே சரிந்த குழலே' என்று சிற்றின்ப வரிகளை பாடி மாட்டிக் கொள்வார். 'வெற்றி சிகரத்தை எட் ...யில் உன் வேல் விழியை காட்டி விட்டாய் முடிக்குமுன் உன் முழுமதி முகத்தைக் காட்டி சிற் ... பாட வைத்தாய்' என்று நம்பியாரே கடைசியில் உருகுவார். 'வணங்காமுடி'யில் அரசனாக மகள் ... சிவாஜியை மணக்க நாகையாவை ஆட்டிப் படைத்த எம்.கே.ராதாவுக்கு 'அம்பிகாபதி'யில் ... முதலுமாக பானுமதியின் தந்தையாக அரசன் நாகையா சிவாஜியின் (அம்பிகாபதி) தந்தையான எம்.கே.ராதாவை சோதனைக்குள்ளாக்கியது போலாயிற்று.

## ...ணம் போட்டதெல்லாம் அடங்கியதா

ஆணாதிக்கத்தால் நிறைவேறாத 'அம்பிகாபதி அமராவதி' காதலை போல பெண்ணாதிக்கத்தால் சோத...ான ஒரு காதல் கதைதான் 'ஆரவல்லி'. ஆரவல்லி, சூரவல்லி என்கிற இரு சகோதரிகளின் அகம் ... அல்லி ராஜ்யமாக 'ஆரவல்லி'யின் ராஜ்யத்தில் வீட்டில் ஆண்களும், வெளியில் பெண்களுமாக ... நாட்டு நடப்பில் மற்ற நாட்டு அரசர்களை போட்டிகளில் கபடமாக வென்று அவர்களை அடிமை ... சிறை படுத்துகிறார்கள். அவர்களை மீட்க வரும் அல்லிமுத்துவை பார்த்ததும் காதல் வயப்பட்டு ஆர... மகள் அவனை போட்டிகளில் ஜெயிக்க வைத்து அவனை மணந்ததும் இதில் ...லாத 'ஆரவல்லி' மாப்பிள்ளைக்கே விஷம் வைத்து கொன்றுவிட, அவனோ தன் மனைவியை ...டு இறக்கிறான். பிணமாகக் கிடக்கும் அல்லிமுத்துவை பிழைத்து எழவிடாமல் 'ஆரவல்லி' ... சூழ்ச்சிகளெல்லாம் தவிடு பொடியாகி இறுதியில் ஆரவல்லி சூரவல்லி சிறைபட்டு பெண்களின் ... முடிவுக்கு வருவதுதான் கதை. 'குலேபகாவலி'யில் *(1955)*யில் முன் பாதியில் டி.ஆர். ராஜகுமாரி ... அடிமைப்படுத்த, பின் பாதியில் ஜி.வரலக்ஷ்மியின் ஆதிக்கம். இவையெல்லாம் போதாதென்று ...' படத்தில் முழு நீள ஆதிக்கம்தான். முதல் கணவராக பிரபல பயில்வான் அஜித்சிங்கை ..., அதிகார தோரணையாக 'குலேபகாவலி', 'ஆரவல்லி', 'திருடர்கள் ஜாக்கிரதை' படங்களில் ...ாகவே நடித்த ஜி. வரலக்ஷ்மி 'ஹரிசந்திரா' போன்ற படங்களிலும் மிக உருக்கமாக நடித்திருப்பதும் ...தான்.

ஆரவல்லி சூரவல்லியாக ஜி. வரலக்ஷ்மி, மோகனா நடிக்க, ஈஸ்வர், மைனாவதி கதாநாயகன், கதாநா...ும், காகா ராதாகிருஷ்ணனை, ஏ.கருணாநிதி, வி.கோபாலகிருஷ்ணன், டி.பி. முத்துலக்ஷ்மி, திரெள... ...ராஜன், பக்கிரிசாமி பலர் நடித்த 'ஆரவல்லி ' படத்திற்கு பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், மருத... ...புத்தன் பாடல்களுக்கு ஜி.ராமனாதன் இசை அமைத்தார். 'ஆரவல்லி' என்று திருச்சி லோகநாதன் ...ட்டிலில் ஒலிக்க படம் துவங்கும். துள்ளி வரும் இளமை இசையோடு ஒலிக்கும் 'துடிக்கும் ... மிடுக்காய் வந்ததே, பறக்கும் சிட்டு போல பறந்தே வாழ்விலே' என்ற ... குழுவினர் பாட மைனாவதி தோழியர் அழகாய் நடனம் ஆடுவர். 'அடிமை ஆவதா அடங்கி போவதா' ...வரிகளை ஆரவல்லியின் மகளுக்கேற்றார் போல் கவிஞர் எழுதியிருப்பார். இந்த பாடலின் கோர... ...ஆர்.ஈஸ்வரியின் குரல் தனித்தன்மையோடு ஒலிப்பதைக் கேட்கலாம்.

சின்ன பெண்ணான போதிலே அன்னையிடம் நான் ஒரு நாளிலே
எண்ணம்போல் வாழ்விலே ஈடேறுமா அம்மா நீ சொல் என்றேன்

வெண்ணிலா நிலா என் கண்ணல்லவா கலா உன் எண்ணம் போல் வாழ்விலே இன்பம் தானென் ...று ஏ.எம்.ராஜா ஜிக்கி பாடியது when I was young my father said என்ற ஆங்கிலப்பாடலை மெட்டோடு ... தழுவியது. ஈஸ்வர், மைனாவதி பாடும் கனவு டூயட் காட்சி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ... மெட்டுக்கேற்ப வார்த்தைகளை போட்ட ரொமான்டிக் பாடல். 'க்ரஹப்ரவேசம்' *(1946)* தெலுங்கு ... இந்த ஆங்கில பாடலையே பானுமதி பாடியிருப்பார்.

அன்பே எந்தன் முன்னாலே ஆசை பொங்கும் கண்ணாலே' என்ற ஈஸ்வர் - மைனாவதி நடித்த டூயட் ... எம்.ராஜா - ஜிக்கிகுரல்களில் 'துடிக்கும் யௌவனம்' பாடலை போலவே ரிதமிக்காக அமைந்தி... ...ணவனே கண்கண்ட தெய்வம், மாயாபஜார், போன்ற ராஜாராணி, புராணங்களுக்கேற்ற Personality ... எம்.ஜி. ஈஸ்வருக்கு ஆரவல்லியோடு கதாநாயக வாய்ப்பு நின்றுபோனதுபோலிருக்கிறது. பிறகு ... ...டங்கள் பாடல்காட்சிகள் தான் அமைந்தன.

...ம்மாளம் போட்டதெல்லாம் அடங்கியதா உங்கள் கொட்டமெல்லாம் தன்னாலே ஒடுங்கியதா' என்று ...நிதி, நடராஜன் சிறைபட்டதும் முத்துலட்சுமி, எம்.சரோஜா ஆடி பாடி மகிழ டி.வி.ரத்னம், ஏ.ரத்ன... ...ஆகியோரின் நகைச்சுவை குரல்களில் ஒலித்தது. மீண்டும் முத்துலட்சுமி - எம்.சரோஜா இருவரும் அல்லி ... அடங்கி மாட்டிக் கொள்ளும் போது ஏ.கருணாநிதிக்கும், நடராஜனுக்கும் திருச்சி லோகநாதனும்

சீர்காழி கோவிந்தராஜனும் 'கும்மாளம் போட்டதெல்லாம் அடங்கியதா உங்க கொட்டமெல்லாம் தன்னாலே ஒடுங்கியதா!' என்று பாடுவார்கள். 'மானமெல்லாம போன பின்னே' என்று மற்றொரு பாடலை சட்டாம் பிள்ளை வெங்கட்ராமன் சிவதாணு இருவரும் புலம்பிக் கொண்டே பாடும் காட்சி. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் கருத்து புலமைக்கு எல்லை இல்லாதது போல் கீழ்கண்ட பாடலை எவ்வளவு தடவை கேட்டாலும் ஏதோ ஒரு கருத்து கிடைப்பது போல் தோன்றும் - 'பழக்கமில்லாத கழுதைகிட்டே பால் கறக்கணும் பாலே - அது பட்டுண்ணு தூக்கி புடும் காலே அப்ப பல்லு போகுமோ மூக்கு போகுமோ சொல்ல முடியாது அதனாலே' என்ற அந்தப் பாடலை திருச்சி லோகநாதன், சீர்காழி கோவிந்தராஜன் இணையாக பாட, ஆனந்தன் சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன், பக்கிரிசாமி கோரஸ் நடித்தது. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதிய மற்றொரு பாடலையும் திருச்சி லோகநாதனும், சீர்காழி கோவிந்தராஜனும் பாட ஏ.கருணாநிதி, நடராஜன் குழுவினர் ஆடி களித்தனர். 'சின்ன குட்டி நாத்தனா சில்லறையை மாத்தினா' என்ற பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் அந்த பாடல் இன்றும் பிரபலமாக ஒலித்துக் கொண்டிருக்கிறது.

'மஞ்சள் பூசி வரும்' மற்றும் 'திரும்பிப்பாரு' பாடல்களை திருச்சி லோகநாதன், சீர்காழி கோவிந்தராஜனும் ஈஸ்வர், காகா ராதாகிருஷ்ணனுக்காக பாடினர். 'பெண்ணை ஜெயிக்க ஆண்களினால் முடியாதே' என்ற டி.வி.ரத்னம், ஜமுனாராணி பாடியதற்கு ரீடா - சரோஜா ஆகியோரின் நடனம். 'நயாதௌர்' இந்திப் படத்தில் ஆஷா போன்ஸ்லே, முகமது ரஃபி பாடி ஓ.பி.நய்யாரின் இசையில் uden jab jab julphen ... என்ற பஞ்சாபி ஃபோக் பாடல் மெட்டை தழுவி ஜி.ராமனாதன் இசைத்த பாடல்தான் 'பெண்ணை ஜெயிக்க ஆண்களினால் முடியாதே'.

## செங்கம்மா அங்கம்மா ஜில் ஜில் மங்கம்மா

'ஆரவல்லி ' படத்தில் என்னை மிகவும் கவர்ந்து, எப்போதும் நினைவுக்கு வந்தாலும் சிரிப்பை வரவழைக்கும் பாடலை ஏ.ரத்னமாலாவின் குரலில் டி.பி.முத்துலக்ஷ்மி காமெடியாக மூன்று சிலைகளை காட்டி ஆடும் பாடல் -

'இது செங்கம்மா இது அங்கம்மா இது ஜில் ஜில் மங்கம்மா இதையும் அதையும் பாத்து பாத்து ஏமாறாதே சும்மா' என்று பாடி போட்டி வைக்கும் பாடலை ஏ.ரத்னமாலா பாட சீர்காழி கோவிந்தராஜனும், திருச்சி லோகநாதனும், 'சரிதாம்மா சரிதாம்மா சரிதாம்மா' என்று பாடுவர். ஏ.கருணாநிதியும் காகா ராதாகிருஷ்ணனையும் முத்துலட்சுமி வெறுப்பேற்றி பாடும் 'செங்கம்மா அங்கம்மா ஜில் ஜில் மங்கம்மா' மறக்க முடியாத காட்சி. முத்துலக்ஷ்மியும் மிக ஒய்யாரமாக ஆடுவார்.. 1957ல் நூதன் தேவானந்த் நடித்த 'பாரிஷ்' ஹிந்திப் படத்தில் ஹெலன் ஆடலுக்கு சி. ராமசந்திரா இசையில் ஆஷா போஸ்லே பாடிய 'மிஸ்டர் ஜான்' பாடலின் மெட்டை தழுவிய (டி.ஆர். சுந்தரம் சொல்லித்தானே) ஜி. ராமநாதன் அப்பாடலில் ya qurbaan, ya qurbaan, ya qurbaan என்று 3 முறை வருவதைப்போலவே 'சரிதாம்மா சரிதாம்மா சரிதாம்மா' என்று முழங்கவிட்டார். 'உயிரோடு போராடும் வேளை' என்ற பின்னணி பாடலை சி.எஸ்.ஜெயராமன் பாடினார். 'ஆரவல்லி' பாடல்களின் பதிவின் போது மாடர்ன் ஸ்டுடியோவில் ஜி.ராமநாதன் இசை குழுவினரோடு ஜிக்கி, சீர்காழி கோவிந்தராஜன், திருச்சி லோகநாதன், ரத்னமாலா, ரத்தினம் ஆகியோர் சந்தோஷமாக பாடிகளித்த இன்ப நாட்கள் அவை. இப்படத்தின் இசையமைப்பில் ஜி.ராமனாதனுக்கு வெஸ்டர்ன் மியூசிக் பின்னணிக்கு ஆர்.பார்த்தசாரதி உதவினாராம்.

## தேன் மதுவை வண்டினம் தேடி வரும்

'மர்மவீரன்' தயாராகிக் கொண்டிருந்தபோதே 'புதுமைப்பித்தன்' தொடங்கிய ராமண்ணாவுக்கு தங்க முகமூடி கதையை எடுப்பது பிறகுதான் தெரிந்தது. ஆனால், எப்படியோ 'மர்மவீரன்' தோல்வியுற்றாலும் 'புதுமைபித்தன்' ராமண்ணாவை ஓரளவுக்கு காப்பாற்றியது. தஞ்சை ராமையாதாஸ் பாடல்களுக்கு ஜி.ராமனாதன் இசையில் அனைத்துமே ஜனரஞ்சகமாக இப்போது கேட்டாலும் குதூகலமான வகைதான். எம்.ஜி.ஆர், டி.ஆர்.ராஜகுமாரி, பி.எஸ்.சரோஜா, ஈ.வி.சரோஜா, சந்திரபாபு, பாலையா, ஈ.ஆர்.சகாதேவன், சி.எஸ்.பாண்டியன் பலரோடு சாந்தா, ரீடா, ஜெயந்தி,கமலா, சந்திரா என்று 15க்கும் மேற்பட்ட நடனமணிகளின் பெயர்களும் டைட்டிலில் வருகின்றன.

'தில்லானா பாட்டுபாடி குள்ளதாரா குல்லா நீ போடாதே குள்ளதாரா வில்லாதி வில்லரெல்லாம் வம்புதாரா விழியாலே பலியாவார் வம்புதாரா' என்ற காமெடிபாடலை சந்திரபாபு ஜிக்கி பாடினர். கப்பலில் சந்திரபாபு போடும் ஆட்டமே அலாதிதான். எம்.ஜி.ஆருக்கு பாலையா விஷம் வைத்து வழங்கும் விருந்தில் ஈ.வி.சரோஜா ஆடும் பி.சுசீலாவின் தேனமுத குரலில் ஜி.ராமனாதன் போட்ட சிரஞ்சீவி மெட்டுக்கு தஞ்சை ராமையாதாஸின் கருத்துள்ள வரிகள் - பல்லவி - தேன் மதுவை வண்டினம் தேடி வரும் இன்பமாய் காண மதியை வண்ணமுகில் நாடி வரும். அனுபல்லவி -காணாத இன்பம் கண்டாலே துன்பம் வாழ்நாளும் இனி

[illegible] என்ற இப்பாடலின் தொடக்கத்திலும் நடுவிலும் சுசிலாவின் ஹம்மிங் கேட்க மிக [illegible]

## [illegible] யாருக்கு வேணும் இந்த மின்னல் வெட்டு

பாருங்க பாருங்க பலேஜோருங்க ஜோருங்க ஆடும் மயிலினம் நாங்க
வாடாத ரோஜா, நான்தானே ராஜா நாடாளும் ராணி நான் தான் ஐயா,
வான் மேவும் தாரா வந்தாளே நேரா, அய்யய்ய யாருக்கு வேணும் இந்த மின்னல்வெட்டு
அய்யய்யா யாருக்கு வேணும் இந்த வண்ண பொட்டு பாருங்க புல் புல்சிட்டு பாடிடும் ஜில்ஜில் மெட்டு
வாருங்க ஆசை பட்டு பிள்ளை போல கொஞ்சும் பெண்ணை பாருங்க

[illegible] மிக ஜாலியான ஜிப்ஸி மெட்டு பாடலில் நடனமணிகளின் கோரஸ் கேட்டு 'இதென்ன [illegible]' என்று பாலையா கத்துவது தமாஷ்தான். டி.ஆர்.ராஜகுமாரி சங்கிலிருந்து வெளியே வந்து [illegible] 'பாருங்க பாருங்க பலே ஜோருங்க ஜோருங்க' என்று பாடி ஆடி வர அவருடைய நடனக்குழு [illegible] யாருக்கு வேணும் இந்த மின்னல்வெட்டு' என்று பாடி ஆடுவார்கள், பி.லீலா குழுவினரோடு [illegible] பாடல். 'பூமியிலே புதுமை பாருங்கடி' என்ற ரத்னமாலா குழுவினர் வரிகளுக்கு ரீடா [illegible] சிவகாமி போன்றோர் ஆடிவர 'கனவா நினைவா' என்று ஜிக்கி குரலுக்கு பி.எஸ். [illegible] ஆடும் நடன பாடலின் இசையில் ராமநாதனின் உற்சாகம் தெரிந்தது.

[illegible] பித்தன்' படத்திலிருந்து பாடல்களில் ஏதாவது புதுமை செய்ய ஆரம்பித்தார் ராமண்ணா, சங் [illegible] டி.ஆர்.ராஜகுமாரி வெளிவந்து நடனமாடியது போதாது என்று சனி கிரகத்தின் வளையத்தில் [illegible] பி.எஸ்.சரோஜாவை 'உள்ளம் ரெண்டும் ஒன்று, நம் உருவம் தானே ரெண்டு' என்று சி.எஸ்.ஜெய [illegible] ஜிக்கி பாடலை பாடவைத்து படமாக்கினார். கனவு காட்சி செட்டாக சனி கிரகத்தை தேர்ந்தெடுத்த [illegible] துணிச்சல்காரர்தான். இலங்கை வானொலி திரை தந்த இசை நிகழ்ச்சிகளில் கல்யாணி ராகத்தின் [illegible] அலையாக 'உள்ளம் ரெண்டும் ஒன்று' பாடல் அடிக்கடி ஒலிபரப்பாகும்.

'அழகை பார் என் அழகைபார் எனதன்பே என் அழகைபார் ஆடி ஓடி பாடி ஆடும் வானம்பாடி பார்' [illegible] ரத்னமாலாவை மீண்டும் 'ஆரவல்லி' படத்தின் 'செங்கம்மா, அங்கம்மா, ஜில்ஜில் மங்கம்மா' மெட் [illegible] பாட விட்டார் ஜி.ராமனாதன். ஈ.வி.சரோஜா நடனமாடி கொண்டே பாட (ஆரவல்லியில் [illegible] கிருஷ்ணன், ஏ.கருணாநிதி 'சரிதாம்மா, சரிதாம்மா, சரிதாம்மா' என்று சொன்னது போல்) எம்.ஜி.ஆ [illegible] சந்திரபாபுவும் 'வரலாமா, வரலாமா, வரலாமா' என்று நடுவில் புகுந்து பாலையாவை பயமுறுத்துவர். [illegible] தொடர்ந்து ஈ.வி.சரோஜாவின் நடனத்திற்கு ஜிக்கி பாடிய பாடலை 'ஜாலிலோ ஜிம்கானா' டைப் [illegible] தஞ்சை ராமையாதாஸ் வழங்கியிருந்தார் - 'குத்தம் கொந்தளிக்கும் கும்பலை கண்டா குபாய்க்கும், [illegible] சூரபுலி டபாய்க்கும் ராஜா, கூட வந்த சூர புலி டபாய்க்கும்', 'அய்யய்ய யாருக்கு வேணும் [illegible] மின்னல் வெட்டு'. 'குத்தம் கொந்தளிக்கும்', 'தில்லானா பாட்டு பாடி குள்ளதாரா' போன்ற பாடல் [illegible] தஞ்சை ராமையாதாஸ் ஒருவரால்தான் படைக்க முடியும். அவர் போடும் தமாஷ் பறக்கும் விநோத [illegible] அப்பாடல்களை கேளிக்கைக் காவியமாக்கி விட்டன. 'மேளம் கொட்டி தாலி கட்டி' என்று [illegible] பைத்தியமாக பாடும் பாடலை சி.எஸ். ஜெயராமன் பாடினார். பாலையாவை மயக்கி டி.ஆர்.ரா [illegible] ஆடும் பாடலை பி.லீலா பாடினார் - 'மனமோகனா மறந்து போவேனா, கண்ணாளனே உன்னா [illegible] எந்நாளும் நான்' என்ற வரிகளை பார்த்து உடனே ராமனாதன் அவர்களுக்கு சிந்துபைரவியில் மனோ [illegible] மெட்டமைந்தது போலும். டி.ஆர்.ராஜகுமாரி, பாலையா, சந்திரபாபு இவர்களோடு நம்பியார், [illegible] இல்லாதது 'புதுமைப்பித்தன்' டல்தான் அடித்தது.

## [illegible] மனோரமா

[illegible] ரின் தங்கையை அப்பா மணம் செய்து கொள்ள தஞ்சை ராஜமன்னார்குடியிலிருந்து செட்டிநாடு [illegible] க்கு கைக்குழந்தை கோபிசாந்தாவுடன் குடிபெயர்ந்தார் அம்மா. சினிமா நிறைய பார்த்து அப்ப [illegible] பாடல்களை பாடி எல்லோரையும் மயங்க செய்த கோபிசாந்தா கோயில்களிலும், நாடகங்களில் பெண் [illegible] போடும் ஆண்களுக்கும் பாடிக் கொண்டிருந்தாள். பள்ளியில் சுதந்திர தினத்தன்று 'மீரா' படத்தின் [illegible] வரும் கீதம்' பாடலின் மெட்டிலேயே 'பாருக்குள்ளே நல்ல நாடு' என்ற பாரதியார் பாடலை [illegible] அசத்தினாராம். 'பாப்பா' என்ற பெயரில் நாடகத்தில் குறத்தி நடனங்களும்,பின் பாத்திரங்களில் நடிக் [illegible] தொடங்கிய கோபிசாந்தா தி.மு.க. பிரச்சார நாடகங்களிலும் நடிக்க [illegible] ஒருநாடக இயக்குனரும் நடிகரும் சேர்ந்து கலந்து பேசி 'பாப்பா' என்ற கோபிசந்தாவின் பெயர் [illegible] வாக மாறியது. அதற்கு பின் நல்ல காலம்தான். தி.மு.கழக பிரசார நாடகங்களில் பாடல்களை [illegible] மனோரமா கருணாநிதியின் 'மணிமகுடம்' நாடகத்தில் அல்லி என்ற வேடத்தில் கதாநாயகி

யாக நடித்தார். இந்த நாடகத்தை நடத்தி வந்தவர் எஸ்.எஸ்.ராஜேந்திரன். இதன்பின்னர் எஸ்.எஸ். ராஜேந்திரன், தேவிகா, மனோரமா மூவரையும் ஒப்பந்தம் செய்த தயாரிப்பாளரின் படம் வளராமல் நின்றது நிகழ்ந்தது. மணிமகுடம் நாடகத்துக்கு தலைமை தாங்கிய அண்ணாதுரை 'மனோரமா மாதிரி மையாக பேச கூடியவர்கள் கழகத்துக்குவர வேண்டும்' என்று பாராட்டினாராம். அந்த 'மணிமகுட' நாடகத்தில் நடிக்க 1955ல் சென்னைக்கு வந்த மனோரமா எல்டாம்ஸ் ரோடு முருகன் கோவில் அருகே சிறிய தெருவில் வசிக்க ஆரம்பித்தாராம். அதற்கு பின்னர் ஆயிரம் தடவைக்குமேல் நாடகங்களுக்காக மேடைகள் ஏறிய மனோரமா அண்ணாதுரையுடன் 'சிவாஜி கண்ட இந்துசாம்ராஜ்யம்' தொடர்ந்து கருணாநிதியுடன் 'உதயசூரியன்', 'தூக்குமேடை' போன்ற நாடகங்களில் நடித்தார். எழுதிய 'விடை கொடு தாயே' நாடகத்திலும் நடித்த மனோரமாவை கவிஞர் கண்ணதாசன்தான் தயாரித்துக் கொண்டிருந்த 'மாலையிட்ட மங்கை' படத்தில் நகைச்சுவை பாத்திரத்தில் நடிக்க செய்தார். வைரம் நாடக சபாவிலும் முத்துராமன், அவர் மனைவி சுலோசனா போன்றோருடனும் நடித்திருக்கிறார். எஸ்.எஸ்.ராஜேந்திரன் மனோரமா நடித்த கருணாநிதியின் 'மணிமகுடம்' நாடகம்தான் ராமண்ணாவின் 'புதுமைப்பித்தனாக' வெளிவந்ததாம்.

## காதலென்னும் சோலையிலே

'புதுமைபித்தன்' படத்தில் எம்.ஜி.ஆரும் பி.எஸ். சரோஜாவும் காதலிக்கையில் டி.ஆர்.ராஜகுமாரி ஒருதலையாக எம்.ஜி.ஆரை விரும்பிஅடைய முடியாமல் அவரை காட்டிக்கொடுத்து பின் காப்பாற்றியும் விடுவார். ஆனால், 'தங்கமலை ரகசிய'த்தில் விளையாட்டாக பணிப்பெண்ணை இளவரசியாக அலங்கரித்து நம்பியார் கண்களில் படவைத்து பணிப்பெண்ணான எம்.வி.ராஜம்மா மீது அவர் காதல் வயப்பட, முகூர்த்த நாளன்று டி.ஆர். ராஜகுமாரியை விட்டு எம்.வி.ராஜம்மாவுக்கு மாலையிட்டு தன் நாட்டிற்கு ராணியாக்கி விடுவார். விளையாட்டு விபரீதமாகி பொறாமை தீயில் விழும் டி.ஆர்.ராஜகுமாரி மந்திரவாதி பி.எஸ். வீரப்பாவின் மந்திர சக்தியால் நம்பியாரையும் எம்.வி.ராஜம்மாவையும் பிரித்து அவர்கள் உருவத்தில் ராஜா ராணியாக மாறி நாட்டை ஆண்டு அனுபவிக்க, எம்.வி.ராஜம்மாவுக்கு பிறந்த சிவாஜி காட்டில் அலைந்து கொண்டிருக்க, இளவரசி ஜமுனாவால் பேச முடிந்து இருவரும் காதலர்களாகி எம்.வி.ராஜம்மா நம்பியாரை மீட்க சிவாஜி படும் இன்னல்களை பொழுது போக்காக ரசிகர்களை கட்டிப் போட்டது 'தங்கமலை ரகசியம்'. 'கற்புக்கரசி' படத்திலும் மோகனா மந்திரவாதியின் உதவியால் ஜி. வரலட்சுமியாக மாறி அரசி எம்.கே.ராதாவை ஏமாற்றி இளவரசன் ஜெமினி கணேசனின் இடத்தில் தன் பிள்ளை நம்பியாரை நாடாள சதி செய்வார். 'தங்கமலை ரகசியம்' 'கற்புகரசி' படங்களில் வில்லிகள் உருவத்தினை மாற்றிக் கொண்டார்கள். ஆனால், 'சக்ரவர்த்தி திருமகளில்' எஸ். வரலக்ஷ்மி அவ்வளவு சங்கடப்படவில்லை. அஞ்சலிதேவியை மயக்கமடைய வைத்து பி.எஸ். வீரப்பாவிடம் ஒப்படைத்து விட்டு எம்.ஜி.ஆர். தாலி கட்டிய மனைவியாக அவர் நாட்டிற்கே சென்று கடைசியில் பி.எஸ்.வீரப்பா - வரலக்ஷ்மி சூழ்ச்சி அறிந்து அஞ்சலிதேவியும் எம்.ஜி.ஆரும் ஒன்று சேருவர்.

இப்படி சிநேகிதிபோன்று பழகி எஸ்.வரலக்ஷ்மி அஞ்சலிதேவியை ஏமாற்றியது 'சக்ரவர்த்தி திருமகளில்'. ஆனால் இருநாட்டு இளவரசிகளான சாவித்ரியும் எம்.என்.ராஜமும் உண்மை உயிர் தோழிகளாக நடித்து 'மகாதேவி' படத்தில் ரசிகர்களை கவர்ந்தனர். 'மகாதேவி'யான சாவித்ரியை எப்படியும் அடைந்தே தீருவது என்று அலையும் பி.எஸ்.வீரப்பாவை காதலித்த குற்றத்திற்காக (மகாதேவியை தான் விரும்புகிறார் என்று தெரிந்தும்) அவரை மணந்தும் எம்.என். ராஜம், வீரப்பாவின் சூழ்ச்சிகளுக்கெல்லாம் பரிகாரமாக தன் குழந்தையை கொல்ல வைத்து சாவித்ரியின் குழந்தையை காப்பாற்றுவார். கடைசியில் கணவனை காப்பாற்ற தன் உயிரை கொடுத்து எம்.ஜி.ஆரையும் சாவித்திரியையும் சேர்த்து வைத்து அவர்களிடம் குழந்தையையும் ஒப்படைப்பார். 'ராஜராஜன்' படத்தில் எம்.ஜி.ஆரை லலிதா, பத்மினி இருவரும் காதலிப்பர். ஆனால், எம்.ஜி.ஆர். பத்மினியைத்தான் காதலிப்பார். இப்படி 1957ல் வெளியான ராஜாராணி படங்களின் தோழிகளின் கதைகளில் 'மகாதேவி' படத்தில்தான் உயிர் தோழியான துணை கதாநாயகி கடைசியில் தியாக சிலையாக வழிபடும் குணசித்திர சிகரமாக உயர்ந்து நின்றார்.

1949ல் 'நல்லதம்பி' படத்தை என்.எஸ்.கிருஷ்ணனுடன் தயாரித்த உமா பிக்சர்ஸ் 1953ல் எம்.ஜி.ஆர். டி..ஆர்.ராஜகுமாரி நடித்த 'பணக்காரி'யை வெளியிட்டு தோல்வி கண்ட பிறகும் 'சக்ரவர்த்தி திருமகள்' படத்தை தயாரித்து 1957ல் வெளியிட்டனர். படத் தயாரிப்பையும், ஸ்டூடியோ நிர்வாகத்தையும் ஒரே நேரத்தில் கவனிக்க முடியாமல் 1954 வாக்கில் நியூடோன் ஸ்டூடியோவில் இருந்து பிரிந்த ராமநாதன் செட்டியாரின் உமா பிக்சர்ஸ் தயாரித்த சக்ரவர்த்தி திருமகள் ஒன்றுதான் வெற்றிபெற்றது. ஆனால் படத்தின் உரிமைகளை ஏற்கனவே விற்றுவிட்டதால், அதன் லாபத்தின் பங்கும் ராமநாதன் செட்டியாருக்கு கிட்டாதது பரிதாபம்தான். ஏ.கு...ரின் கதை, இளங்கோவன் வசனம், ப.நீலகண்டனின் இயக்கம், இவைகளுக்கு ஜி.ராமநாதனின் இசை உறுதுணையானது. தஞ்சை ராமையாதாஸ், கு.மா. பாலசுப்ரமணியம், கு.சா.கிருஷ்ணமூர்த்தி, கிளவுன் சுந்தரம்

...டை கல்யாணசுந்தரம், கே.டி.சந்தானம், பாரதியார் ஆகியோரின் பாடல்கள் ஜி.ராமநாதனின் இசை ...இன்றும் பிரபலம். தேர்தல் நேரமும் நெருங்கிக் கொண்டிருக்க 'சக்ரவர்த்தி திருமகள்' படத்தில் ...ஆர் பெயர் உதயசூரியனாக இருந்தது. எம்.ஜி.ஆர். அஞ்சலிதேவி, எஸ்.வரலட்சுமி, பி.எஸ்.வீரப்பா, ...பிரபா, ஈ.ஆர்.சகாதேவன் ஆகியரோடு என்.எஸ்.கிருஷ்ணன், டி.ஏ.மதுரம், தங்கவேலு, டி.பி.முத்து ...ஜோடிகளின் காமெடி காட்சிகள் சிரிப்பு வெடிக்க ரசிக்கவைப்பவை. 'சக்ரவர்த்தி திருமகள்' படத் ...நகைச்சுவை காட்சிகளை இன்றும் நினைவில் நிற்பவை.

...வேடத்தில் தங்கவேலு தோன்றும் முதல் காட்சியில் தொடங்கி முத்துலக்ஷ்மியை போட்டி ...வெல்லும் வழிகளை என்.எஸ். க்ருஷ்ணனும் தெரிந்து கொண்டு இருவரும் முத்துலக்ஷ்மியிடம் ...போது அவர் போட்டிகளை மாற்றி என்.எஸ். க்ருஷ்ணனின் உதவியால் தங்கவேலு வென்று ... இதில் வேடிக்கை என்னவென்றால் கேட்ட கேள்விகளுக்கு என்.எஸ். க்ருஷ்ணன் அவர்கள் பதில் ... 'அவருக்கே மாலை சூடுவேன்' என்று முத்துலட்சுமி அடம் பிடித்து தங்கவேலுவை பயமுறுத் ...அவரை மணப்பார். மற்றொரு பக்கம் டி.ஏ.மதுரம் வில்லும் அம்புமாக என்.எஸ். ...ஜோடியாக நகைச்சுவை வழங்குவார். எம்.ஜி.ஆரும் என்.எஸ். க்ருஷ்ணனும் பாடும் 'சீர் மேவும் ...' கேள்வி பதில் போட்டியாக சீர்காழி கோவிந்தராஜன், என்.எஸ். க்ருஷ்ணன் பாடியது. ...' (மதுரைவீரன்) பாணியில் 'ஆட வாங்க அண்ணாத்தே, அஞ்சாதீங்க அண்ணாத்தே, அங்கே ...பாக்குறது என்னாத்தே' என்று மிக பிரபல ஜனரஞ்சகப் பாடலை (கு.மா. பாலசுப்பிரமணியம்) ...ஜிக்கியோடு சீர்காழி கோவிந்தராஜன் பாட, ஈ.வி.சரோஜா - ஜி. சகுந்தலா கிண்டலடித்து ஆட, ...அவர்களை வெறுப்பேற்றுவார். 'சொல்லாலே விளக்க தெரியலே, ...இருக்க முடியலே' என்று அஞ்சலி தேவி மகிழ்ந்ததை பி.லீலா பாடினார். ராகினி குழுவின ...வீரப்பாவுக்காக ஆடும் 'கண்ணாளரே வாருங்க கண்ணால் கொஞ்சம் பாருங்க' பாடல் ஜிக்கி குழுவி ...யது.

## ...வோம் அன்பினால்

...போல பல்லவியை கல்யாணியில் தொடங்கி சரணத்தை கானடாவில் முடிக்கும் ஜி.ராமனா ...பாடல் வரிசையில், 'எல்லையில்லா இன்பத்தினால் நாம் இணைந்தோம் இந்த நாளே' என்று ...சுப்ரமணியம்) கல்யாணியில் ஆரம்பித்து, 'ஆடிடுவோம் அன்பினால்' வரிகளில் இருந்து கானடா ...டூயட்டை சீர்காழி கோவிந்தராஜன் - பி.லீலா எம்.ஜி.ஆர் - அஞ்சலிதேவிக்காக பாடினர். கு.கா. ...மூர்த்தி இயற்றிய 'எண்ணமெல்லாம் இன்ப கதை பேசுதே' என்ற பாடலை பி.லீலா அஞ்சலி ... பாடினார். குறிஞ்சி, கானடா, சாருகேசி போன்றவை ஜி.ராமனாதனின் ...ராகங்கள் போலும். 'ஏமாற்றம்தானா என் வாழ்விலே, இன்பம் வீசாதோ இனிமேலே' என்று ...ட்சுமி பாடும் பாடலை குறிஞ்சியில் அமைத்திருந்தார்.

...வேலு, முத்துலட்சுமி நகைச்சுவையாக ஆடும் 'அத்தானும் நான் தானே' பாடலை என்.எஸ்.கிருஷ் ...டி.வி.ரத்னம் பாடினர். சிந்துபைரவியில் துரோகத்தை பாடி ஆடி தன்னிடத்தில் அமர்ந்திருக்கும் ...முகத்திரையை கிழிக்கும் அஞ்சலிதேவிக்கு 'எந்தன் உள்ளம் கொள்ளை கொள்ள வந்த நீ யாரோ' ...சிந்துபைரவி ராக பாடலை எம்.எல்.வசந்தகுமாரி பாடினார். தன்னை ஏமாற்றிய தோழி ராணியாக வீற் ...எதிரே முகத்திரையோடு மறைமுகமாக தாக்கி பாட சிந்துபைரவி ஏற்ற ராகம்தான்.

...க்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதிய 'பொறக்கும் போது பொறந்த குணம் போக போக மாறுது, ...இருக்கும் போது பிரிந்த குணம் இறக்கும்போது சேருது' பாடலை சீர்காழி கோவிந்தராஜன் எம்.ஜி.ஆ ...பாடினார். மிகவும் கருத்தாழமிக்க இந்த பாடலின் தொகையறாவில் மனிதனின் பலவித மிருக குணங் ...குறிப்பிடுகிறார் -

...உறங்கையிலே பானைகளை உருட்டுவது பூனை குணம் காண்பதற்கே உருப்படியாய்
இருப்பதையும் கெடுப்பதுவே குரங்கு குணம்
ஆற்றில் இறங்குவோரை கொன்ற இரையாக்கல் முதலை குணம் இத்தனையும் மனிதரிடம் மொத்தமாய் வாழுதடா.

'...ராணி' (1956) படத்தில் சிவாஜி - பத்மினி நடிக்கும் 'திரைபோட்டு நாமே மறைத்தாலும் ...' (ஏ.எம்.ராஜா - ஜிக்கி) பாடலை கடைசி காட்சியாக்கி வணக்கம் காண்பித்தது போல் 'சக்ரவர்த்தி ...' படத்திலும் சீர்காழி கோவிந்தராஜன் பாடிய 'காதலெனும் சோலையிலே ராதே ராதே நான் கண் ...பொன் மலரே ராதே ராதே' பாடலுக்கு எம்.ஜி.ஆர். - அஞ்சலிதேவி நடிக்க நிறைவு பெறும். ...தேகி ஸ்ரீராதே ராதே' என்ற பாரதியாரின் மணிப்ரவாள கமாஸ் ராகப்பாடலின் சரணத்தில் தமிழ் ...பகுதியில் 'காதலெனும் சோலையிலே ராதேராதே' என்ற வரியை பல்லவியாக்கி பாடலை ...வில் உருவாக்கி விட்டார்கள்.

டி.எம்.சௌந்தரராஜனின் குரல் எம்.ஜி.ஆர். - சிவாஜிக்கென்று பிரத்யேகமாக பொருந்த ஆரம்பித்த
நிலையிலும் ஜி.ராமனாதனின் கணிப்பு மட்டும் தவறியதில்லை. 'கோமதியின் காதலன்' (1955) 'கோ
(1956) படங்களில் சீர்காழி கோவிந்தராஜனுக்கென்று பாடல்களைக் கொடுத்த ஜி.ராமனாதன் தயக்க
'சக்ரவர்த்தி திருமகள்' படத்தில் எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்தாலும் சீர்காழி கோவிந்தராஜனையே
பாடல்களைப் பாட வைத்து, தன்னால் நட்சத்திர அந்தஸ்து பெற்ற டி.எம்.சௌந்தரராஜனுக்கு சீர்காழி
தவரல்ல என்றும், எம்.ஜி.ஆர். போன்றவர்களுக்கு தான் தஞ்சமில்லை என்பதையும் திரை இசை
செல்வாக்கையும் நிரூபித்தார். 40களில் ஜி.ராமனாதன் இசை அமைத்த படங்களில் ஒரு சில காட்சிகளில்
போனவர்தானே எம்.ஜி.ஆர். அவர்கள். 50களில் பெரிய நட்சத்திரமான பின்பும் ஜி.ராமனாதன் போ
ளின் பணிக்கு குறுக்கே நிற்க மாட்டார். மாடர்ன் தியேட்டர்ஸில் டி.ஆர்.சுந்தரம் அவர்களுக்கு இணை
வும் மெட்டுகளை போட்டாலும் தன் மெட்டுகளாலும் தனித்தன்மையாலும் நிரூபிக்கத் தவறியதில்லை
மனாதன் அவர்கள். ஆனால், உமா பிக்சர்ஸாரின் சக்ரவர்த்தி திருமகள் (1957), சித்தூர் ராணி பத்மினி
இரண்டிலும் சீர்காழி கோவிந்தராஜனே பாடியதால் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப கூட ஜி.ரா
சீர்காழிகோவிந்தராஜனை பாட வைத்திருக்க வாய்ப்பிருக்கிறது. 1940-50களில் திரை இசை சக்ரவர்த்தி
திகழ்ந்த ஜி.ராமனாதன், நடிகர்களுக்காக என்றும் அடி பணிந்ததாக தெரியவில்லை. எம்.கே.தியாகராஜ
வதர் அவர்களே ராமனாத அய்யர் போட்டால் சரியாகத்தானே இருக்கும் என்று விட்டு விடுவாராம்.

1957ல் பணமுடையால் தேர்தலில் தோற்றபோது அண்ணா அவர்களிடம் தான் பணம் வா
அவருக்கு நடித்து தருவதாக எம்.ஜி.ஆர். கூறியபோது அருகிலிருந்த கண்ணதாசனும் எழுத உதவி செ
சொன்னாலும் பிறகு இரண்டாண்டுகளில் கட்சியில் சில மாறுதல்களெல்லாம் நடந்துகொண்டிருக்க
அப்படி நடக்க இயலாமல் போய்விட்டது. ஆனால் அண்ணா அவர்கள் எழுதிய 'தாய் மகளுக்கு க
தாலி' (1959), 'நல்லவன் வாழ்வான்' (1961) படங்களில் எம்.ஜி.ஆர். நடித்தார்.

## புது வாழ்வு

எம்.கே. தியாகராஜ பாகவதர் உயிருடன் இருக்கையில் அவர் நடித்து 1957ல் வெளியான அவரது
படமான 'புது வாழ்வு' படத்திற்கு ஜி.ராமனாதன் இசையமைத்தார். ஆனால் பாகவதர் அவர்களுக்கு
வாழ்வு' கிடைக்கவில்லை. ஏனென்றால் 1948க்கு பிறகு குறிப்பாக 1950க்குப் பிறகு படவுலகின் க
போக்கே மாறி பின்னணி குரல்களும் தோன்றி திரை இசையில் மெல்லிசையும் ஹிந்திப் படப் பா
ளின் தழுவலும் ஆர்க்கெஸ்ட்ராவை விரிவடையச் செய்து விட்டிருந்தன. அதனால் 'ராஜமுக்தி' (1948),
கவி ' (1952), 'சியாமளா' (1952), 'புதுவாழ்வு' (1957) என்று வரிசையாக தோல்வியைத்தான் த
எம்.கே.தியாகராய பாகவதர் அவர்கள். பாகவதரே கதை தயாரிக்க, இளங்கோவன்,
வேலன், இரைமுடிமணி, சுரதா என்று நான்கு கதை, வசனகர்த்தாக்களின் கலவைக்கு அவரே இ
இத்தனை கதை, வசனகர்த்தாக்கள் போதாதென்று பாரதியார், பாபநாசம் சிவன், தஞ்சை ராமையா
மருதகாசி, நடராஜ சுந்தரம், சரவணநந்தா என்.எஸ்.க்ருஷ்ணன், ராமலிங்க சுவாமிகள், மெஞ்ஞான
என்ற நீளமான பாடலாசிரியர்கள் பட்டியல். ஜி.ராமனாதன், சி.என். பாண்டுரங்கன் ஆகியோர் இ
பங்கு போட்டுக் கொண்டனர். இத்தனை பேருடைய பணியாற்றலிலும் நிலை நிறுத்திக்கொள்ள
மல் புதுவாழ்வு பெற முடியாமலேயே இருந்ததையும் இழந்ததுதான்
லலிதாவுக்கு பாகவதரோடு நடிக்க ஒரு வாய்ப்பு. பாலையா, என்.எஸ். க்ருஷ்ணன், டி.ஏ.மதுரம்
வர்களும்நடித்திருந்தனர். பாகவதர் இருக்கும்போது அவர் நடித்து வெளியான இந்த 'புது வாழ்விலும்'
எஸ். க்ருஷ்ணன் மதுரம் தம்பதிகள் நடித்ததோடில்லாமல் என்.எஸ்.க்ருஷ்ணன் காலமான வருடமும்
தான் என்பது குறிப்பிடத்தக்கது. எல்லாம் ஒரு முடிவுக்கு வந்து புதுமைக்கு முழுமையாக வழி
தது போல் ஆயிற்று.

## சிங்கார புன்னகை கண்ணாற கண்டாலே...

'அடைந்தால் மகாதேவி இல்லையேல் மரண தேவி' என்று ரசிகர்களின் மனதில் அ
சிரிப்போடு பதிந்துவிட்ட பி.எஸ்.வீரப்பாவின் வில்லன் பிராண்ட் நடிப்பும், அவரது மனைவியாக
தியாகம் செய்யும் எம்.என்.ராஜம், வீரப்பாவை எதிர்த்து உறுதியோடு சோதனைகளை கடக்கும் சா
மூவரின் திறமையான நடிப்பும் இன்றும் 'மகாதேவி' படத்தை பார்க்க தூண்டுவதில் ஆச்சர்யமி
எம்.ஜி.ஆர். - சாவித்ரி முதன் முதல் ஜோடி சேர்ந்த 'மகாதேவி' படத்தின் திரைக்கதை வசனத்தை
கண்ணதாசன் எழுதினார். சுந்தர்ராவ் நட்கர்னி, பி.ராதாகிருஷ்ணன் ஆகி
தயாரித்த மகாதேவியை சுந்தர்ராவ் நட்கர்னி இயக்கினார். காலஞ்சென்ற நட்கர்னியின் 'புண்ய பிரபாவ்'
கதைக்கு கண்ணதாசன், மருதகாசி, தஞ்சை ராமையாதாஸ், பட்டுக்கோட்டைகல்யாண சுந்தரம் ஆகி
பாடல்கள் எழுத விஸ்வநாதன் ராமமூர்த்தி இன்னிசையில் 'மகாதேவி' படத்தில் காதல், சோகம், கரு
தியாகம், வீரம், நகைச்சுவை என்று பலவித பாடல்கள் கதையோடு பின்னி கேட்கும் போதே கதை

பல கட்டங்கள் ஒரே நேரத்தில் மனக்கண்களில் நிழலாடும். இலங்கை வானொலியில் எல்லா வகையான நிகழ்ச்சிகளிலும் 'மகாதேவி ' படத்தின் பாடல்கள் ஒலித்திருக்கின்றன. 'சிங்கார புன்னகை', 'காமுகர் நெஞ்சினில்', 'மானம் ஒன்றே பெரிதென கொண்டு' 'கண் மூடும்' 'காகா காகா மை கொண்டா' மற்றும் சந்திரபாபு பாடியவை எல்லாமே பிரபலம்தான்.

பி.எஸ். வீரப்பாவை பார்த்தால் ஹாலிவுட்டில் கொடிகட்டிப்பறந்த எகிப்திய நடிகர் ஓமர் ஷெரிப்பின் ஞாபகம்தான் வரும். கம்பீர வில்லனாக 1957ல் உச்சத்தை அடைந்தார். பி.எஸ்.வீரப்பா 'மகாதேவி' படத்தில் பி.எஸ்.வீரப்பா - சாவித்ரி மோதும் கட்டங்கள், எம்.என். ராஜத்தை மணம் புரிந்த பின் தூக்கத்தில் 'மகாதேவி' என்று புலம்ப, எம்.என்.ராஜம் அதிர்ச்சி அடையும் கட்டம், சிறையில் சாவித்ரியை வீரப்பா 'மகா தேவி இணங்கி விடு' என்று கூறும் கட்டங்களிலும், கண்ணதாசனின் வசனங்கள் பி.எஸ்.வீரப்பாவின் குரலில் ஏற்றம் பெற்றன. மிகை இல்லாமல் ஏற்ற இறக்கத்தோடு பாவங்களை சட்டென்று மாறி மாறிகாட்டி ஓ.ஏ.கே. தேவர், எம்.ஜி.ஆர்., சாவித்ரி, எம்.என்.ராஜம் என்று ஒவ்வொருவரிடமும் பி.எஸ்.வீரப்பா, தன் தனிப்பட்ட நடிப்பால் சமாளிப்பார்.

'ஏறு பூட்டுவோம் - நாளை சோறு ஊட்டுவோம், ஏழைகள் நாங்கள் ஒன்றாய் சேர்ந்து கொடியை நாட்டுவோம்' - என்ற கோஷ்டி கானத்தில் எம்.சௌந்தர்ராஜனோடு பிரதானமாக ஒலிக்கும் குரல் டி.எல்.ராஜேஸ்வரி என்கிற எல்.ஆர்.ஈஸ்வரியுடையது. சாவித்ரி - எம்.ஜி.ஆரை ஒன்றாக சேர்த்து வண்ணங்களை வீசி அடிக்கும் பாடலின் கட்டத்தில் 'மனசும் மனசும் ஒண்ணு சேர்ந்தா மறக்க முடியுமா, ரெண்டு வயசுக்கேத்த முடிச்சை யாரும் பிரிக்க முடியுமா, தந்தாலக்கடி தந்தாலக்கடி தந்தான குயிலே, உங்க சரக்கு நல்ல சிக்கிலி சம்பா தந்தான குயிலே' என்று எல்.ஆர்.ஈஸ்வரிக்கு ஆறுழு வரிகள் பாட விஸ்வநாதன் - ராமமூர்த்தி வாய்ப்பளித்தார். எம்.ஜி.ஆர். - சாவித்ரி முதலிரவு காட்சியின் குறிஞ்சி ராக பாடலான 'சேவை செய்வதே ஆனந்தம்' டி.எம்.சௌந்தரராஜன் - எம்.எஸ். ராஜேஸ்வரி இணைந்து பாடியது.

'முதல் தேதி' (1955) படத்தில் துணை பாத்திரத்தில் நடித்த சுசீலா நகைச்சுவை நடிகை ஆகிவிட்டார் போலும். முத்துலட்சுமி - கருணாநிதி ஜோடியோடு மற்றொரு காமெடி ஜோடியாக சந்திரபாபு - சுசீலா ஜோடி நடித்தது. 'தந்தானா பாட்டு பாடணும்' பாடலுக்கு சந்திரபாபு ரத்னமாலாவோடு பாடி சுசீலாவோடு நடித்தார். இவர்கள் நடித்த மற்றொரு நகைச்சுவை பாடலையும் சந்திரபாபு ரத்னமாலாவோடு பாடினார். ச - உன் திருமுகத்தை ஒரு முகமா திருப்பு உனக்கென்ன வந்தாலும் நானே பொறுப்பு இந்த பக்கமா திருப்பு, ஏம்மா வெறுப்பு. ர - மறைமுகமா பேசுவதும் சரியா.

'குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும் குருட்டு உலகமடா -இது கொள்ளையடிப்பதில் வல்லமை காட்டும் திருட்டு உலகமடா - -தம்பி தெரிந்து நடந்து கொள்ளடா' - என்ற பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் கருத்துமிக்க பாடலை டி.எம்.சௌந்தர்ராஜன் தெள்ளத் தெளிவாக உச்சரிப்பும் உணர்ச்சியுமாக பாடினார். குருடராக எம்.ஜி.ஆர் மாஸ்டர் முரளியோடு தெருவில் பாடிக் கொண்டு போகும் கட்டத்தில் பாடும் இப்பாடலை கேட்கும் போதெல்லாம் வெளி உலகை நினைத்தாலே அஞ்சவைக்கும் கருத்துக்கள் மனதை சூழும். மாஸ்டர் முரளியை சாப்பிட வைக்க சாவித்ரி பாடி ஆடும் 'காகா காகா மை கொண்டா காடை குருவி மலர்கொண்டா, பசுவே பசுவே பால் கொண்டா பச்சை கிளியே பழம் கொண்டா' - பாடலை எம்.எஸ். ராஜேஸ்வரிக்கு பாடக் கொடுத்து விஸ்வநாதன் ராமமூர்த்தி புண்ணியம் சேர்த்துக்கொண்டனர். 'டவுன் பஸ்' (1955) படத்தில் கே.வி.மகாதேவன் இசையில் 'சிட்டுக்குருவி, சிட்டுக்குருவி சேதி தெரியுமா?' வெற்றி பெற்றதன்பலன்தான் ராஜேஸ்வரிக்கு 'காகா காகா மை கொண்டா' பாடலின் வாய்ப்பு போலும். ஏதோ இதாவது ராஜேஸ்வரிக்கு கிடைத்ததே பெரும் விஷயம்தான். கவிஞர் கண்ணதாசன் எழுதிய பாடல்கள் அனைத்துமே சிறப்பானவை. எம்.எஸ். ராஜேஸ்வரி பாலசரஸ்வதி, சாவித்ரி, எம்.என்.ராஜம் ஆகியோருக்கு பாடிய தாலாட்டு பாடல்தான் 'மகாதேவி ' படத்தின் ஹைலைட் பாடல் காட்சி.

சிங்கார புன்னகை கண்ணார கண்டாலே சங்கீத வீணையும் ஏதுக்கம்மா
மங்காத கண்களில் மையிட்டு பார்த்தாலே தங்கமும் வைரமும் ஏதுக்கம்மா
தன்மான செல்வங்களை வாழ்கின்ற பூமியில் வில்லேந்தும் வீரன் போலவே
மகனே நீ வந்தாய் மழிலை சொல் தந்தாய் வாழ்நாளில் வேறென்ன வேண்டுமம்மா.

இலங்கை வானொலியில் நீங்கள் கேட்டவை (பழையன), கோஷ்டி கானம், இருவர் பாடியது, என் விருப்பம். என்று அநேக நிகழ்ச்சிகளில் பிரபலமான பாடல் இது. இந்த கோரஸ் ஆடல் காட்சியில் சுகுமாரியை நன்றாக அடையாளம் காணலாம்.

## காமுகர் நெஞ்சினில் நீதி இல்லை

1955ல் 'கதாநாயகி', 'குலேபகாவலி' படங்களில் ஜமுனாராணிக்கு கவர்ச்சி பாடல்கள் கொடுத்த கண்ணதாசன் ' மகாதேவி ' படத்தில் சாவித்திரி சிறையில் பாடும் சோக பாடலுக்கு ஜமுனாராணியை சிபா

ரிசு செய்தார். அவருக்கு ஒரு Image Change கொடுக்க நினைத்த கண்ணதாசனின் அபிப்ராயத்தை தன் - ராமமூர்த்தி ஏற்க மறுத்தனர். கவர்ச்சி பாடல்களைத் தான் ஜமுனாராணி பாட லாயக்கு என்ற களது கூற்றை ஏற்றுக் கொள்ளாமல் அந்த வாய்ப்பை ஜமுனாராணிக்கே கொடுக்க வைத்து வெற்றியும் றார். 'காமுகர் நெஞ்சினில் நீதி இல்லை அவர்க்கு தாரம் என்றும் தாயென்றும் பேதமில்லை' - என்ற கமான பாடலை ஜமுனாராணி சாவித்ரிக்கு பாடினார். அவர் குரலில் கவர்ச்சி நிறைந்த அளவு நிறைய முடியும் என்று ஜமுனாராணி நிரூபித்தார்.

'நானின்றி யார் வருவார்' என்ற பாடலைக்கேட்டு எம்.ஜி.ஆர். மிகவும் மெதுவாக இருப் குறிப்பிட்டு விறுவிறுப்பான பாடலாக எழுதச் சொன்னார். அதற்கு கண்ணதாசன் எழுதிய 'கண் வேளையிலும் கலை என் கலையே கண்ணே உன் பேரழகின் விலை இந்த உலகே' என்ற பா ஏ.எம்.ராஜா - பி.சுசிலா மிக இனிமையாக பாடினர். எம்.ஜி.ஆர். கணிப்பை போலவே பாடலும் எம்.ஜி - சாவித்திரி நடிப்பிற்கேற்ப துள்ளலுடன் மெட்டமைந்தது. 'அமர தீபம்' (1956) படத்தில் ஏ.எம்.ராஜா - பாடிய 'தேன் உண்ணும் வண்டு' பாடலின் பாதிப்பில் அமைந்த பாடல்களில் இதுவும் ஒன்று. 'நான் யார் வருவார்' பாடலை எப்படியும் பயன்படுத்த எண்ணிய கவிஞர் கண்ணதாசன் தான் தயாரித் கொண்டிருந்த 'மாலையிட்ட மங்கை'யில் சேர்த்து விட்டார்.

## தன்மான செல்வங்கள் வாழ்கின்ற பூமியில்

கண்ணதாசன் எழுதிய மிக சோகமான பாடல்கள் வரிசையில் முதல் பத்து பாடல்களில் 'மகாதே படத்தில் டி.எஸ்.பகவதி எம்.என்.ராஜத்துக்கு பாடிய பாடலுக்கு நிச்சயம் இடமுண்டு. 'மானம் ஒன்றே தென கொண்டு வாழ்வது நமது சமுதாயமே மரண பயங்கரம் சூழ்ந்து வுந்தாலும் மாறிவிடாது ஒரு நா - என்ற அந்த பாடலின் நடுவில் பி.எஸ். வீரப்பாவின் அட்டகாச சிரிப்பும் அவரும் சாவித்தி பேசும் வசனங்களும் கேட்கும். மகாபாரதத்தில் அபிமன்யுவின் கதையை பாடிக் கொண்டே மகாதே யின் குழந்தையை காப்பாற்றி அந்த இடத்தில் தன் குழந்தையை பலி கொடு விடுவார் மங்கம்மாவான ராஜம். தன் மகன் வீரமரணம் அடைந்தான், சோக கீதம் வேண்டாம் என 'மகாதேவி' ஆணையிட, 'தன்மான செல்வங்கள் வாழுகின்ற பூமியில் வில்லேந்தும் வீரன போல மகனே நீ வந்தாய் மழலை சொல் தந்தாய் வாழ்நாளில் வேறென்ன வேண்டுமம்மா' என்ற வரிக பாடுவார் மங்கம்மா. பர்தாவில் இருக்கும் மங்கம்மாவாக எம்.என். ராஜம் பாடுவதாக வரும் இ இசைதட்டு பாடல். சுதர்சனம் அவர்களால் சோக பாடல்களின் ப்ரத்யே வாய்ப்புகள் பெற்ற டி.எஸ். பகவதிக்கு இப்போது விஸ்வநாதன் ராமமூர்த்தி கிடைத்து விட்டனர். காதேவி ' படத்திற்கு பிறகு அவர்கள் இசை அமைக்கும் படங்களில் மிக சோகமான பாடல் டி.எஸ். பகவதிக்கே கொடுத்தனர்.

## அமுதை பொழியும் நிலவே

*1954ல்* 'கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி', *1955ல்* 'முதல் தேதி' படங்களைத் தொடர்ந்து மினி பிக்சர்ஸின் மூன்றாவது தமிழ் படத் தயாரிப்பாக 'தங்கமலை ரகசியத்தை' *1957ல்* வழங்கினார் பி.ஆ துலு. படத்தின் டைட்டில் பாடலாக 'அருள் புரியாயோ ஜகன்நாதா அனுதினம் உன்னை பணிந்திடும் எ நீ' - என்ற சூலமங்கலம் ராஜலட்சுமி பாடியது, சங்கராபரண ராகத்தில் தொடங்கி ராகமாலிகையாக கும். டி.ஆர்.ராஜகுமாரியை எம்.வி.ராஜம்மா வாழ்த்தி மகிழ்விக்கும் 'ஆனந்தம் புது ஆனந்தம்' பா சூலமங்கலம் ராஜலக்ஷ்மி ஜிக்கி பாடினர். பெண் பார்க்க வந்த மன்னர் நம்பியாரை வரவேற்க கே.ரா ரத்னமாலா குழுவினர் பாடும் 'வரவேணும், வரவேணும்' பாடல் காட்சியில் நாணமிகு நங்கை பாவ்லா செய்யும் டி.ஆர்.ராஜகுமாரியின் சேட்டை அவருக்கே உரிய வில்லித்தனம். கு.மா.பாலசுப்பிர யம் அவர்களின் சிரஞ்சீவி பாடலான 'அமுதை பொழியும் நிலவே, நீ அருகில் வராததேனோ' ஜமுனா தமிழ் ரசிகர்களின் நினைவில் என்றும் மலர்ந்திருக்க செய்துவிட்டது. 'தங்கமலை ரகசியம்' பட ஹிந்தியில் டப் செய்த போது ஆஷா போன்ஸ்லே மிகவும் விரும்பி அதே மெட்டில் பாடினா படத்தில் இரு தடவைகள் 'அமுதை பொழிய வைத்தது' இந்த பாடல்.

'இகலோகமே இனிதாகுமே இசையோடு காவியம் போலே உள்ளம் இணைந்தாடும் பேரன்பினிலே' என்று பி.லீலாவின் குரலுக்கென்று உருவான கல்யாணி ராக பாடலையும் இயற்றியது கு.மா. பாலசுப்பிர ணியம். திரை இசையில் கல்யாணி ராகத்தில் பல பாடல்களை பாடி இருப்பவர் பி.லீலா, ஒவ்வொரு பா லிலும் பி.லீலாவின் குரலில் கல்யாணியின் குழைவைக் கேட்டு அனுபவிப்பதே தனி சுகம்தான். 'இகலோ பாடலின் நடுவில் சரணத்தை ஜோன்புரியில் 'வானவர் காணாத வனராணியே' என்று டி.எம்.சௌந்தரா காட்டு ராஜாவாக திரியும் சிவாஜி கனேசனுக்கேற்றாற்போல் பாடுவார். அவருக்கு 'இகலோகமே' பாட றுக் கொடுப்பார் ஜமுனா. 'ஓடி வா' என்று கே.ராணி குழுவினர் பாட, ஜமுனாவை சுற்றி தோழியர் ஆ

மற்றொரு பாடல் காட்சி. 'காட்டு ராஜா காட்டு ராஜா' என்று ஜெமினி சந்திரா குழுவினர் சிவாஜி சுற்றி கிண்டல் செய்து ஆடும் பாடலில் ரத்னமாலா குழுவினரில் டி.எல்.ராஜேஸ்வரி ஸ்வரி) குரலும் ஒலிக்கிறது. சிவாஜிகணேசன் - ஜமுனா நடித்த மற்றொரு டூயட்டான 'கல் வைபோகம் கொண்டாடுவோம் உல்லாச சிங்கார பண்பாடுவோம்' பிருந்தாவன சாரங்கா ராகத்தில் அமைக்கப்பட்ட இனிமையான பாடல்.

கிருஷ்ணன், ரத்னமாலா பாடிய பாடலான 'தன்தனத்தான் தமுக்கடிச்சான், வீராதி வீரர் சூர்' பாடலுக்கு ஆனந்தன் குழுவினரோடு ஆட, நடுவில் தனம் பாடி வருவார். 'பாசவலை', 'ஆர மல்லிகா' போன்ற படங்களில் தொடர்ந்து ஆனந்தனுக்கு நடனமாட வாய்ப்பு. பி.சரோஜா தேவி பவழமலை கந்தர்வ கன்னிகளாக 'யௌனமே யௌவனமே' என்று ஏ.பி. கோமளா - ஜிக்கி ஆடிப்பாடி சிவாஜி கணேசனிடம் யௌவனத்தைப் பெற்று தங்கமலைக்கு வழி காட்டுவர்.

சிவாஜி கணேசன், ஜமுனா, நம்பியார், டி.ஆர். ராஜகுமாரி, எம்.வி. ராஜம்மா, பி.எஸ்.வீரப்பா, ராமச்சந்திரன், கே.சாரங்கபாணி, தனம் பலர் நடித்த 'தங்கமலை ரகசியம்' படத்திற்கு பத்மினி பிக்சர்ஸின் இசையமைப்பாளர் டி.ஜி.லிங்கப்பா இசை அமைத்தார். மோகன ராகத்தில் ஹிந்துஸ்தானி சாய அமுதை பொழியும் நிலவை' வழங்கி அமுதை பொழிந்து விட்டார். தான் யாருக்கும் சளைத்தவனல்ல ஒவ்வொரு படத்திலும் தன் இசை புலமையை நிரூபித்துக் கொண்டிருந்தார் லிங்கப்பா. 'இகலோகமே', வைபோகம்' என்று பல வகை பாடல்களை வழங்கி 'தங்கமலை ரகசியம்' படத்தை நீங்காத நினை விட்டார். 'ராஜா' காது தொன்ன காது' என்ற டி.ஆர். ராமசந்திரனின் நகைச்சுவை ரசிகர்கள் மறக்க ரகசியத்தை பாதுகாக்க முடியாமல் எங்கேயாவது உளறத் துடிக்கும் வேடிக்கையான

தங்கமலை ரகசியத்தில்' சுமார் எட்டு கோரஸ் நடன காட்சிகள். சித்ரா க்ருஷ்ணசாமியின் மூலக்க சின்ன அண்ணாமலை, லக்ஷ்மணன் ஆகியோரின் திரைக்கதை, கு.மா.பாலசுப்ரமணியம், கு.சா.கி மூர்த்தி இருவரின் பாடல்கள். யானைகளுடன் வனவிலங்கு காட்சிகளும், மந்திர தந்திர மாய ஜாலங் செவிக்கினிய பாடல்களுடன் நம்பியார் டி.ஆர்.ராஜகுமாரி, பி.எஸ்.வீரப்பா, டி.ஆர்.ராமச்சந்திரன், சாரங் ஆகியோரின் தேர்ந்த நடிப்பில் 'தங்கமலை ரகசியத்தை' என்றும் ரசித்து களிக்கக் கூடிய படமாக படைத்து விட்டார் பி.ஆர்.பந்துலு. பணிப்பெண் ராஜம்மாவை இளவரசியாக அலங்கரித்து ஜோசி டம் விளையாட, அதை காணும் நம்பியார் ராஜம்மா மீதே காதல் கொண்டு தன் தலையில் தானே மண்ணள்ளிப் போட்டு கொண்டு ராஜம்மாவை டி.ஆர்.ராஜகுமாரி பழி தான் கதை. தங்கமலை ரகசியம் படத்தில் சில வண்ணக்காட்சிகள் எடுக்கவேண்டியிருந்ததால் சென்னையில் தங்கியிருந்த மாடர்ன் தியேட்டர்ஸ் கேமிராமேன் W.R.சுப்பாராவ் அவர்களைக் தந்திரக் காட்சிகளை இப்படத்திற்கு 'படமாக்கிக்கொண்டிருந்தபோது, அவரது உதவிக்காக திரு. அவ்வப்போது பணியாற்றக் கேட்டுக்கொண்டாராம்.

## அறியாத பிள்ளை போலே ஆத்திரப்படலாமா?

மனோகரா' படத்தில் மிச்சம் மீதி வைக்காமல் சென்றார் என்று பார்த்தால் 'தங்கமலை ரகசியத்தில்' சதி வேலை செய்கிறார் ராஜகுமாரி. 'ஆரவல்லி ' படத்தில் ஜி.வரலக்ஷ்மியோடு ஆண்களை ஓட்டி அடித்த மோகனா 'கற்புக்கரசி' படத்தில் ஜி.வரலட்சுமியின் கணவர் எம்.கே.ராதாவையே 'தங்கமலை ரகசியத்தில்' அண்ணன் பி.எஸ்.வீரப்பாவை ராஜகுமாரியிடம் அறிமுகப்படுத்தி சதியை தனம். ஒட்டுக் கேட்கும் டி.ஆர்.ராமச்சந்திரனின் காதுகளுக்கு பூட்டு மாட்டி அண்ணன் நம்பி அனுப்பும் டி.ஆர்.ராஜகுமாரி சிறை பிடிக்கப்பட்டதும், மனம் மாறுவது போல் அவருக்கே உரித் வாங்கும் படலத்தை நம்பியாரின் நாட்டிலே துவக்கி விடுவார். டி.ஆர்.ராமசந்திரனை காத போல் டி.ஆர்.ராஜகுமாரி அவரை மயக்கும் காமெடி பாடல்தான் 'அறியாத பிள்ளை போலே ஆத் (ஜிக்கி). பிறகு வீரப்பாவோடு சல்லாபமாக 'என்னை பாராய், என் கண்ணை பாராய், ஏங்கி பார்க்கும் இந்த பெண்ணை பாராய்' (ஜிக்கி) என்று மயக்குவார் ராஜகுமாரி. 'இதயகீதம்' (1950) கதாநாயகியான டி.ஆர்.ராஜகுமாரியின் இதயத்தை மீட்ட முடியாமல் தோல்வியுற்ற பி.எஸ்.வீ தங்கமலை ரகசியத்தில்' மந்திர குழிகளால் தன்வயப்படுத்தி விடுவார். அதிலும் தன் டிமிக்கி காட்ட தயங்க மாட்டார் ராஜகுமாரி. மந்திரவாதி வீரப்பா தரும் மந்திர குழிகளால் நம்பியாரை வும், ராஜம்மாவை பிச்சைக்காரியாகவும் மாற்றி (ஏற்கனவே குழந்தையை கடத்தி காட்டில் விட்டு அதுதான் சிவாஜி) வீரப்பாவை நம்பியாராக மாற்றி, தான் மட்டும் மந்திர குழி சாப்பிடாமல் சதி கச்சிதமாக முடித்து போலி நம்பியாரின் காந்தர்வ ராணியாக நாட்டை ஆண்டுகொண்டு செய்வார் ராஜகுமாரி.

'சாரங்கன் சொன்னது சரியா பேச்சு' என்று வசனம் பேசிக் கொண்டே ராஜகுமாரியின் சதிகளை நிந்து தனத்தை கையில் போட்டுக் கொள்வார் சாரங்கபாணி. டி.ஆர். ராமசந்திரனை கரடி வேஷம் வைத்து தனத்தை நடுங்க வைத்து விஷயங்களை கறந்து விட, மறுபக்கம் அசல் கரடி ஒன்று அங்கு வர னிடம் சாரங்கபாணி மாட்டிக் கொள்ள ஒரே தமாஷ்தான். தன்னைக் காப்பாற்றிய காட்டு ராஜா சிவாஜியை நாட்டுக்கு அழைத்து வந்த மகள் ஜமுனாவை கண்டிக்க, அதனை ரசிக்கும் ராஜகுமாரி 'அருமையான கம், இனிமையான காட்சி உன் பெண்ணை தேடி எந்த நாட்டு ராஜகுமாரன் வருவான்' என்று சந்தோஷ மாக ஏளனம் செய்ய 'என்னை இழிவு படுத்துவதே உன் பொழுது போக்காகி விட்டது. உன் சதியை அம்பலப்படுத்துவேன்' என்று நம்பியார் (வீரப்பா) மிரட்ட, உஷாராகும் ராஜகுமாரி மறைத்து வைத்திருக் கும் மந்திர குழியை பாலில் கலந்து சமரசமாக நம்பியாருக்கு தந்து வீரப்பாவாக மாற்ற உரைக்கும் வரை அவர் மாற மாட்டார். ஏற்கனவே மந்திர குழியை எடுத்து அதனிடத்தில் சக்கரகட்டியை நம்பியார் வைத்தி ருப்பார். எல்லாம் கட்டிலின் கீழே இருந்து ஒட்டு கேட்கும் சாரங்கபாணி கீழே தவறிவிழுந்து விட்ட மந்திரகுழியை இழுத்தெடுத்து நம்பியாருக்கு பாலில் கலந்து கொடுத்து அவரை வீரப்பாவாக்கி விடுவார். இதற்கு பின் டி.ஆர். ராமசந்திரனுக்கும் வீரப்பாவுக்கும் கத்திசண்டை காமெடிதான்.

இதற்கு மேல் டி.ஆர். ராஜகுமாரியோடும் கத்தி சண்டை வேறு, இருவரையும் சிறையில் தள்ளும் நம் பியார்-ராஜம்மா - சிவாஜியை தேட மந்திரியை அனுப்பும் டி.ஆர்.ராமசந்திரன் மிச்சமிருக்கும் மந்திர குழி கலந்த பாலை பருகி 'ஒட்டு கேட்க காதுகள் பெரிதாக வேணும்' என்று சொல்லி விட, காதுகள் பெரிய தாகி 'தொன்ன காது ராஜாவாக' அவஸ்தைபடுவது மறக்க முடியாத நகைச்சுவை. இதனால் காதுகளை மறைத்து கொண்டு தாடியை வளர்த்து கொள்ளும் டி.ஆர்.ராமசந்திரனை பார்த்த நாட்டு மக்களும் தாடி வளர்க்க, சவர தொழிலாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க, தாடி எடுக்க சம்மதிக்கும் டி.ஆர்.ராமசந்தி ரனை பார்த்ததும் மயங்கி விழ பிறகு சவரம் செய்து பொற்காசுகள் வாங்கிச் செல்வார். அவரது மனைவி அங்கமுத்துவுக்கு விஷயம் தெரியாவிட்டால் தலையை வெடிக்கும் நிலையில் அவருக்கு மட்டும் சொல்லி விடுவார். இதை வெளியே சொல்ல முடியாமல் வயிறு வலி தாங்காமல் காட்டில் சென்று ஒரு பள்ளத் துக்குள் 'ராஜா காது தொன்ன காது' என்று மூன்று தடவை சொல்லி நிம்மதி அடைவார் அங்கமுத்து. அந்த இடத்தில் ஒரு பெரிய மரம் தோன்ற, அந்த மரத்தில் ஒருவர் மிருதங்கம் செய்ய, அதை அரண்மனை யில் ஒரு வித்வான் வாசிக்க, அதிலிருந்து 'ராஜா காது தொன்ன காது' என்று வார்த்தைகள் முழங்க, கோபத் துடன் டி.ஆர்.ராமசந்திரன் அதைப் போட்டு உடைக்க, 'ராஜா காது கழுதை காது' என்று தூள் தூளாக எதிரொலிக்க, தன் தலைப்பாகை அவிழ்த்து மக்களிடம் உண்மையை சொல்லி 'தன் ஒட்டு கேட்கும் கெட்ட பழக்கத்திற்கு கிடைத்த தண்டனை' என்று சொல்லி தன்னை திருத்திக் கொள்வார். King Midas & donkey ears என்ற கிரேக்க கதையையும் விட்டு வைக்காமல் சின்ன அண்ணாமலை, வி. லக்ஷ்மணன் கதையமைக்க சித்ரா கிருஷ்ணசாமியின் திரைக்கதைக்கு ப. நீலகண்டன் வசனங்களை வழங்கினார். 'தங்க மலை ரகசியம்' அறிந்து ராஜம்மா நம்பியாரை மீட்டபின், பி.எஸ்.வீரப்பா, டி.ஆர்.ராஜகுமாரி ஆகியோர் கிளிகளாக மாற சாபம் பெற்று பிற்காலத்தில் ஜமுனாவை தேடி வர, அவரது குழந்தைகளுக்கு அந்த பாட்டி தாத்தா கிளிகளை பற்றி சொல்லும் நீண்ட கதையாக தங்கமலை ரகசியம் படம் தொடங்குகிறது.

## ஆடும் அழகே அழகு

'நிலவோடு வான்முகில் விளையாடுதே அந்த நிலை கண்டு எனதுள்ளம் உனை தேடுதே' என்று நினைவுக்கு அடிக் கடி வந்து எவரையும் முணுமுணுக்கும் பாடலை சீர்காழி கோவிந்தராஜனும், ஏ.பி.கோமளாவும் எம்.ஜி.ஆர் - பத்மினிக்காக பாடி மிக பிரபலமானது. இன்றும் 'ராஜராஜன்' படத்தை ஞாபகப்படுத்தும் பாடலாக 'நில வோடு வான்முகில்' நிலைத்து நிற்கிறது. மெரிலாண்ட் சுப்பிரமணியம் தன்னுடைய நீலா புரொடக்ஷன்ஸ் சார் பில் தயாரித்த 'ராஜராஜன்' படத்தில் எம்.ஜி.ஆர், நம்பியார், பி.எஸ்.வீரப்பா, சக்ரபாணி, பத்மினி, லலிதா, எஸ்.டி. சுப்புலக்ஷ்மி பலர் நடித்திருந்தனர். சீர்காழி கோவிந்தராஜன், ஏ.பி.கோமளா பாடிய 'இதயம் உன் னையே' என்ற மற்றொரு டூயட்டும் எம்.ஜி.ஆர். - பத்மினி நடித்தது. 'கலையாத ஆசை கனவே எந்தன் கருத்தை விட்ட கலா நினைவே' என்று பாலசரஸ்வதி லலிதாவுக்கு இன்பமாகவும் துன்பமாகவும் பாடியது 'ராஜராஜன்' படத்தில் தனித்தன்மையோடு விளங்கியது. 'தேவதாஸ்' படத்தைப் போலவே ஒரு தலைக் காதலி மாக எம்.ஜி.ஆரை காதலிக்கும் லலிதாவுக்கு மீண்டும் பாலசரஸ்வதியின் குரலும் பாடலுக்கேற்ப தென்ற லாகவே பொருந்தியது.

லலிதா - பத்மினி ஆடும் அருமையான நாட்டிய பாடலான 'ஆடும் அழகே அழகு' புகழேந்தி அவர் கள் இயற்றியது, ஆச்சர்யம்தான். கே.வி.மகாதேவனின் நிழலாகவே நிலைத்து விட்ட புகழேந்திக்கு புகழேந்த மனமில்லை போலும். பெயரிலேயே அதை ஏந்தி நின்றவர் 'ஆடும் அழகே அழகு' பாடலை இயற்றி இன்ப அதிர்ச்சி கொடுத்து விட்டார். இன்னும் நிறைய எழுதக்கூடியவருக்கு இசை உதவியாள ராகவே பணியாற்ற நேரம் போதவில்லை. கே.வி. மகாதேவனின் வலது கரமாக கடைசி வரை அவர

விலகாமல் இருந்த பண்பட்ட மனிதர். பி.லீலா - சூலமங்கலம் ராஜலட்சுமி குரல்களில் ஒலித்த 'ஆடும் அழகே அழகு' இலங்கை வானொலியில் 'நாட்டிய பாடல்கள்' நிகழ்ச்சிகளில் கேட்டு மகிழ்ந்திருக்கின்றேன்.

இளங்கோவன் கதை, வசனம் எழுத டி.வி. சுந்தரம் இயக்கிய 'ராஜராஜன்' படப்பாடல்கள் மருத ...ந்துக்கிருஷ்ணன், லட்சுமணதாஸ், கு.சா. கிருஷ்ணமூர்த்தி, புகழேந்தி, பாரதியார் ஆகியோர் வழங்கி கே.வி.மகாதேவன் இசையில் 'நிலவோடு வான்முகில்', 'கலையாத ஆசை கனவே' இரண்டுமே மிக அவசரமாக கு.சா. கிருஷ்ணமூர்த்தியிடம் எழுதி வாங்கி சென்னையில் கோமளா, கோவிந்தராஜன் பாடி ஒலிப்பதிவு செய்து ஒரே நாளில் திருவனந்தபுரத்திற்கு 'நிலவோடு வான்முகில்' பாடலை எடுக்க அனுப்பினாராம். 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்ற பி.லீலாகோரஸ் பாடலுக்கு ரீடா ஆடும் நடனத்தோடு படம் தொடங்கும். இதற்குப்பிறகு மூன்றுகோரஸ் பாடல்களில் கிருஷ்ணனின் குரல் ஒலித்தது. 'ராஜா ராணி' (1956) படத்தில் சிவாஜிக்குப் பாட வாய்ப்புக் கிட்டிய ...க்கு (பூனை கண்ணை) 'ராஜராஜன்' படத்தில் பூசாரியாக 'ஆயி மகமாயி மலைக்கன்னி' என்ற எம்.ஜி.ஆருக்கு அரிதாகப் பாட முடிந்தது. 'பயிரை நம்பி உயிர் இருக்குது' என்ற மற்றொரு ...ம் உண்டு. மருதகாசி இயக்கிய 'மூதேவி மகராஜா மூளை கெட்டுப்போன ராஜா' பாடலை ...வுக்காக டி.வி.ரத்னம் பாடினார். மருதகாசி இயற்றிய 'சாமி சாமி என்ற ஊரை ஏயக்கின்ற ஆசாமி இந்த நாட்டிலே' என்ற பாடலை சென்சாரில் வெட்டி விட்டதாக மருதகாசியின் சகோதரர் திரு.முத் ...எழுதியிருக்கிறார்.

## ...து சென்ற வெண்புறா

...வீடு' (1956), 'அலாவுதீனும் அற்புத விளக்கும்' (1957) படங்களுக்கு பின் எம்.எல்.பதி தயா ...வெளியிட்ட 'மகதல நாட்டு மேரி' படத்தில் ஸ்ரீராம், குமாரி தங்கம், சுசிலா, ஜி.சகுந்தலா, சகாதே ...ரதவீர் பலர் நடித்திருந்தனர். கம்பதாசன், எம்.பி. சிவன், நாவரசு இயற்றிய பாடல்களை ஆர். ...ாதி என்பவர் இசை அமைத்தார்.

...சைவாக்கம் முத்தையா செட்டியார் பள்ளி நண்பர்களான பாலாஜி (நடிகர்), மணியன் (இதயம் பேசு எழுத்தாளர்), கார் சுந்தர், மாரா ஆகியரோடு 'வளர்பிறை நாடக குழுவில் பல நாடகங்களை மேடை ...வந்த ரங்கசாமி பார்த்தசாரதியை 1956ல் மாடர்ன் தியேட்டர்ஸ் டி.ஆர். சுந்தரம் அவர்கள் அழைத் ...அப்போது 'ஆரவல்லி' தயாரிப்பில் இருந்ததால் சீர்காழி கோவிந்தராஜன், திருச்சி லோகநாதன் பாடிய ...பாடல்களுக்கு இசை அமைத்தார். ஆனால், அந்த பாடல்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இருந் ...ஜி.ராமநாதன் இசை அமைத்த பாடல்களுக்கு பின்னணி இசை அமைக்கக்கேட்டுக் கொள்ளப்பட் ...அவரது பணியினைப் பாராட்டி விட்டு அவரது இசையில் வெஸ்டர்ன் பாணியை குறைத்துக் ...சொல்லி அறிவுரை கூறி அனுப்பி வைத்தாராம் ஜி.ராமனாதன்.

...கல்லூரியில் சேர்ந்த போது தன்ராஜ் அவர்களிடம் மேற்கத்திய இசையை நான்காண்டுகள் பயின்ற ...பார்த்தசாரதியின் அந்த திறமைதான் டி.ஆர்.சுந்தரம் அவர்களைக் கவர்ந்தது. 'ஆரவல்லி ' படத் ...'சின்ன பெண்ணான போதிலே' மற்றும் சில பாடல்களின் பின்னணி இசை இவரது கை வண்ணம் ...விளங்குகிறது. நாடகங்களில் இவரை பார்த்து தன் வீட்டிற்கழைத்து பாடல்களை பாடி கேட்டு ... பாலையா எம்.எல். பதியோடு தான் அடுத்து தயாரிக்கும் ...நாட்டு மேரி' படத்திற்கு இசை அமைக்க அறிமுகமானார்.

...அக்காவை பார்த்து தானாகவே பாட கற்றுக் கொண்டு வந்த ஜானகிக்கு பைடிசாமி இசை பயிற்சி அளித் (இவர்தான் ஏ.பி.கோமளாவுக்கும் கற்றுக் கொடுத்தவர்). ஆனால் ஒரு வருடத்தில் அவர் காலமாகி விட் ...அதை வைத்தே வானொலி போட்டிகளில் பரிசு பெற்ற ஜானகியின் முன்னேற்றத்தில் அவரது மாம ...பெரும் பங்கு வகித்தார். ஏ.வி.எம். ஸ்டூடியோவுக்கு கடிதமெழுதி சென்னைக்கு மாமனாருடன் வந்து ...மாஸ்டரிடம் 'சோரி சோரி' படப் பாடலான 'ரஸிக்கு பலமா' என்று நர்கீஸுக்கு லதா மங்கேஷ் ...பாடிய ஷுத்கல்யாண் ராக பாடலை பாடி காண்பித்து சில ஆண்டுகளுக்கு ஒப்பந்தமானார். இதற்கி ...வில் சலபதி ராவ் ஆதரவு கிடைக்க, அவர் இசை அமைத்துக் கொண்டிருந்த 'விதியின் விளையாட்டு' ...இல் இரு சோகப் பாடல்களை பாடினார். சுசிலாவை போலவே தமிழை தெலுங்கில் எழுதி வைத்து ...அனைவரையும் வியக்க வைத்தாராம். ஆனால், படம் வெளியாகாதது விதியின் விளையாட்டு ...ம் தெலுங்கில் வெளியான 'விதியின் விளையாட்டு' படத்தில் கண்டசாலாவோடு பாடி இருந் ...எஸ்.ஜானகி. ஏ.வி.எம்.மில் சேர்ந்த பின் பல மொழிகளில் பாட வாய்ப்பு கிடைத்தது.

## ...ணுக்கு நேரே மின்னிடும் தாரை

ஜானகி தமிழில் பாடி வெளிவந்த முதல் படம் 'மகதல நாட்டு மேரி'. பி.பி.ஸ்ரீனிவாஸ் அவர்களுடன் ...டூயட் பாடிய அந்த பாடல் 'கண்ணுக்கு நேரே மின்னிடும் தாரை', எம்.பி. சிவன் இயற்றியது.

ஏசுநாதர் மீது நாட்டம் கொண்டு திருந்திய ஒரு கணிகையின் கதையை அடிப்படையாகக் கொண்ட 'மகதலநாட்டு மேரி' படத்திற்கு ரங்கசாமி பார்த்தசாரதி தன்ராஜிடம் கற்ற மேற்கத்திய இசை மிக உதவியாயிருந்தது. படத்திற்கு ஏற்ப கிருஸ்துவ பாடல் பாணியில் அமைந்த பாடல்களை டார் பார்த்தசாரதி. 'ஏனோதான் கர்வம் நெஞ்சே' என்றொரு பாடலை கம்பதாசன் எழுதி 'நெஞ்சம் குமுறுதே' என்ற படத்தின் உச்சகட்ட பாடலை கண்டசாலாவை பாட வைத்த பார்த்தசா அவர் மனதார பாராட்டினாராம். சுபபந்துவராளியில் அமைந்த மெட்டிற்கு திலங்கில் பின்னணி அமைத்து ஒரு புதிய முன்னோடியை அமைத்த பார்த்தசாரதியை 'நீங்கள் ஒரு காலத்தில் வெ சென்று இசை அமைப்பீர்கள்' என்று அசரீரி வாக்காக கண்டசாலா வாழ்த்தியது பிற்காலத்தில் நிஜ பிறகு நிரந்தர அமெரிக்க குடிமகனாக மாறி விட்டார் பார்த்தசாரதி. சில நிமிடங்களில் பார்த்தசாரதியின் மையை வியந்த கண்டசாலா, இவருக்கு நம் நாடுஒத்து வராது என்று கணித்து விட்டார் போலும். கூற்று பலித்தது. 'மகதல நாட்டு மேரியும் ஓட 1952லிருந்து 1969க்குள் மொத்தம் 5 படங்களே இசை அமைத்திருந்த பார்த்தசாரதிக்கு கடல் கடந்த அழைத்து அரவணைத்தது. 'மகதல நாட்டு மேரி' படத்தில் எனக்கு மனப்பாடமான இரு பாட பி.சுசிலா பாடியிருந்தார்.

பல்லவி : பறந்து சென்ற பெண் புறாவும் விரைந்து வருகுதே மறைந்த நிலவு முன்னில் தோன்றி மகிழ்ச்சி தருகுதே.

அனுபல்லவி : வருந்தி அழுத மழையின் பின்பு வானவில் தோன்றுமே வண்ண வண்ண கன அலைகள் வாழ்வில் காணுமே.

என்றொரு சுசிலா பாடலை இலங்கை வானொலி பாட்டும் பதமும், இசை இன்பம், நீங்கள் டவை பழையன, இசைஅமைப்பாளர் மற்றும் பல நிகழ்ச்சிகளில் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். 'ஆசை டேன் உன் மீதிலே மோசமும் செய்வாயோ மோகனா' - என்ற மற்றொரு பி.சுசிலா பாடிய பாட இசை அமைப்பாளர் நிகழ்ச்சியில ஒலிப்புவார்கள். கண்ணும் கண்ணும் என்ற பாடலை கே. ராணி பாடி

## பம்பர கண்ணாலே...

அந்தக்காலகட்டத்தில் சக்கைப்போடு போட்ட படு தமாஷ் படமான Fabulous Senorita ஆங்கிலப்படத்தை தழுவி டைட்டில் வேடத்தில் பானுமதி நடித்து தமிழில் 'மணமகன் தேவை' யாக தெலுங்கில் 'வருது காவாலி' யாகவும், தயாரானது. ரங்கசாமி பார்த்தசாரதிக்கு அறிவுரை செ லும், ஜி.ராமனாதனுக்கு மேற்கத்திய இசை பாணியிலேயே பல பாடல்கள் மெட்டு போட 'மண தேவை' படம் வாய்த்து விட்டது. பரணி பிக்சர்ஸ் சார்பில் பானுமதி அவர்கள் தயாரித்த காமெ மான 'மணமகன் தேவை' படத்தில் அநேக பாடல்கள் மேற்கத்திய மெட்டில் இசை அமைத்தவை பாபு பாடிய 'பம்பர கண்ணாலே' பாடல்தான் தமிழ் திரை இசையின் முதல் பாய்லா பாடலாக பலரது எண்ணம். ஆனால், 'பம்பர கண்ணாலே' பாடலின் இடையில் வரும் இசை 1956ல் வெள 'மர்ம வீரனில்' வேதா இசையமைத்து பாலசரஸ்வதி பாடிய 'துடிக்கும் வாலிபமே' பாடலின் நடு ஒலிக்கும் இசையின் மெட்டும் ஒரே மாதிரி கேட்கும். 'துடிக்கும் வாலிபமே' பாடலும் இலங்கை மெட்டான பாய்லாவின் பிரதிபலிப்புதான். வேதா 15 சிங்கள படங்களுக்கு இசை அமைத்த பிறகு வீரன்' படத்திற்கு இசையமைத்தார். அதன் பாதிப்பில் தான் 'மர்ம வீரன்' படத்தில் 'துடிக்கும் பமே', 'பவழ நாட்டு எல்லையிலே' போன்ற பாடல்களில் பாய்லா Effect தெரிந்தது. வேதா அவர் இசையில் 'மர்ம வீரன்' (1956) படப்பாடலான 'துடிக்கும் வாலிபமே' பாடல்தான் முதல் பாய்லா, பாபு பாடிய 'பம்பர கண்ணாலே' பிறகுதான் வந்தது. சந்திரபாபு பாடியதாலேயே அவரது நகைச் பாடல்களில் முதல் அடையாளமாக இன்றும் மெல்லிசை மேடைகளில் பெருமையாக பாடப் கொண்டாடி மகிழ்கிறார்கள். 'மணமகன் தேவை' படத்தில் ரசிகர்களுக்கு தெரிந்த பிரபல ஒரே பாடலு பர கண்ணாலே' பாடல்தான். அதன் மூலம் தேவிகாவின் புகழும் நிலைத்து விட்டது. தேவிகாவின் டோவைப் பார்த்துதான் 'பம்பர கணணாலே காதல் சங்கதி சொன் தங்கசிலை போல வந்து மனதை தவிக்க விட்டாளே' - என்று சந்திரபாபு பாய்லா மெட்டில் பாடி மேற் நடனம் ஆடி ரசிகர்கள் மறக்காமல் செய்து விட்டார்.

ஏற்கனவே ' கள்வனின் காதலி ' (1955) படத்தில் 'வெயிலுக்கேற்ற நிழலுண்டு', 'மனதில் உறுதி டும்' பாடல்களில் பானுமதி பாடுவதை காமெடியாக ரசித்துக்கொண்டு சிரிப்பை அடக்க முடியாமல் ருக்கு ஈடுகொடுத்து இயல்பாக நடித்த சிவாஜி கணேசன் அவர்களுக்கு 'மணமகன் தேவை' பட முழுசாக நையாண்டி பானுமதிதான். 'வணங்காமுடி', 'பாக்யவதி', 'ஹரிசந்திரா' போன்ற பல பாத் ளுக்கிடையே 'மணமகன் தேவை' படத்தில் ரிலாக்ஷ்டாக ஜாலியாக நடித்து களித்திருப்பார் சிவாஜி. களோடு சந்திரபாபு, டி.ஆர்.ராமசந்திரன், ஏ.கருணாநிதி என்று நகைச்சுவை வரிசையே நடித்தது.

சோமநாதன் வசனமெழுத பானுமதி கணவர் ராமகிருஷ்ணா டைரக்டர் செய்தார். மருதகாசி, சந்தானம், தஞ்சை ராமையாதாஸ் ஆகியோரின் பாடல்களுக்கு ஜி.ராமனாதன் இசையமைத்தார்.

ஏங்கோ குலுக்கு தளுக்கு தேவலையா அலுக்கு குலுக்கு தளுக்கு மிஸ்டர் தேவலையா' - என்ற தியின் உச்சக்கட்ட நகைச்சுவை பாடலைக் கேட்க ஆரம்பிக்கும்போதே சிரிப்பை அடக்காமல் முடியாது. படத்தின் பல கட்டங்கள் படு நகைச்சுவை நிறைந்தவை. பானுமதிக்கு தனித்தன்மை அந்த காமெடி குரலே, ரசிக்க தெரிந்தவர்களுக்கு, ரசனை உள்ளவர்களுக்கு, இணையற்ற என்டர்டெ தான். அவர் அழுதால் கூட அதிலும் அனைவரையும் அறியாமல் காமெடி கொஞ்சம் தலை தூக் ஆனால், ரசிகர்களை உண்மையிலேயே பானுமதி அழ வைத்தது 'ரங்கோன் ராதா' (1956) படத்தில் மிகவும் நயமான நடிப்பு. 'ரங்கோன் ராதா' படத்தில் அவரை அழ வைத்த சிவாஜி கணேசனை பல படுத்தி சிரிக்க வைத்து விட்டார்.

## ஏங்கோ குலுக்கு தளுக்கு தேவலையா

வதானுவின் பெண்களான பானுமதி, தேவிகா இருவரையும் மணக்க முடியாமலேயே ஏமாந்து விடு சந்திரபாபு. தந்தை கே.டி.சந்தானத்தோடு பானுமதியை பெண் பார்க்க வரும்போது, 'வேலவரே உமை ஒரு மடந்தை விஷயம்முழுதும் காத்திருக்கிற வகை என்ன' - என்ற பைரவி ராக பாடலை நையாண் பாடிக் கொண்டே நிரவலில் 'நீ சரி மாமா, சரி சரிமாமா' என்று சந்திரபாபுவை படுத்தி எடுக்க, பின் திய பாணியில்

> 'ஏங்கோ குலுக்கு தளுக்கு தேவலையா, அலுக்கு குலுக்கு தளுக்கு மிஸ்டர் தேவலையா
> என்னை பார் என் கண்ணை பார், அங்கும் இங்கும் பார்க்காதே, நாகரிகம் போதுமா'

- என்று பானுமதி அட்டகாசமாக பயமுறுத்த, அவரது தங்கை தேவிகாவை மணமுடிக்க விரும்பிடு ஆனால், ஏ.கருணாநிதியை காதலிக்கும் தேவிகாவும் சந்திரபாபுவுக்கு எட்டாக்கனியாகி விடுவார். தந்தை னுவின் எதிர்ப்பால் சந்திரபாபுவை மணப்பதாக தேவிகா பொய் சொல்லி விட்டு பானுமதியின் கருணாநிதியுடன் ஓடிச் சென்று மணம் செய்து கொள்வார். இதற்கிடையே சிவாஜி, பானு சந்தித்து மோதும் நகைச்சுவை கட்டங்கள். இன்னொரு பக்கம் டி.ஆர். ராமச்சந்திரனும் பானுமதியை ஒரே அமர்க்களம்தான்.

கண்டசாலா குரலில் 'வெண்ணிலா ஜோதியாய் வீசுதே மண்ணிலே வெண்முலாம் பூசுதே என் இன்பமே காணுதே' என்ற பாடலை கிட..:ை, மீட்டி சிவாஜி, ஒருபக்கம் பாட, அவரை ந்து அந்தப் பக்கம் சமாளித்து விட்டு, மற்றொரு பக்கமாக கிடாருடன் அலையும் டி.ஆர்.ரா னையும் ஒரு வழி ஆக்கி விடுவார் பானுமதி. டி.ஆர்.ராமச்சந்திரனை பார்த்து 'திண்டாடுதே என் ஒ வாமனா எனை பாராய் இந்நாளிலே உன் வாழ்விலே நீ மாப்பிள்ளையாக போகிறாய் ' - என்று அவ கிண்டல் செய்வார் பானுமதி.

கல்யாண கச்சேரியாக ராகினி ஆடும் 'கல்யாணமே செய்த பாப்பா, அவரை காணாமல் போடாதே என்ற பாடலை பி.லீலா பாடுவார். ' இல்லற ஜோதி ' படத்தில் 'கல்யாண வைபோக நாளே' என்று தோழியர் பாடுவதாக ஜிக்கி பாடிய பாடலின் மெட்டையே மீண்டும் ஜி.ராமனாதன் போட்டிருக் ஹிந்தி படமான 'தாக்' படத்தில் லதாமங்கேஷ்கர் பாடலின் (ஷங்கர் ஜெய்கிஷன்) மெட்டின் மீது னுக்கு அப்படியொரு மோகம் போலும்: 'இல்லற ஜோதி'யில் எனக்கும் உறவு காட்டி' பாடலின் மெட்டை மதுரை வீரன் படத்தில் 'அவர்க்கும் எனக்கும் உறவு காட்டி' க்கும் திருநீலகண்டர் படப்பாடலின் (தீன கருணாகரனே)' மெட்டை மதுரை வீரன் படத்தின் 'ஏச்சு தும்' பாடலுக்கும் என இருமுறைகள் பயன்படுத்தினார் ராமனாதன். மராட்டி நாட்டியமாட, அந்த உடை அணிந்து ராகினியோடு சுகமாரியும் கூட ஆடுவது 'கல்யாணமே செய்த பாப்பா'. ஹிந்தி படத்திலும் (1952) உஷா கிரண் அப்படித்தான் ஆடியிருப்பார். ' ஆசை மகன் ' படப் பாடலிலும் தக்ஷிணாமூர்த்தி இசையில் இதே மெட்டில் பி.லீலாவின் குரலில் பத்மினி நடனமாடியிருப்பார். மூன்று ஒரே மெட்டில் பாடியவை. எம்.எல்.வசந்தகுமாரி பாடிய 'வந்தால் வரட்டும் போடி வண்ணகுமரன், தங்கும் குமரேசன் என்னை தேடி' என்று சுத்த தன்யாஸியில் சுத்தமாக ஒலிக்க, ராகினி நடனமாடு

ஏ.எம்.ராஜா - ஜிக்கி பாடிய 'ஊஹூம் உள்ளே வரமாட்டேன்' என்ற பாடல் 'கோடையிலே காத்து என்ற தோகையறாவோடு தொடங்கும். தமிழ் திரையில் தேவிகாவின் முதல் ஜோடி ஏ.கருணா என்றால், தேவிகாவின் கடும் முயற்சிகள் சிறுக சிறுகத்தான் பலன் அளித்திருக்கின்றன என்று பாவமன்னிப்பு (1961) நெஞ்சில் ஓர் ஆலயம் (1962) வரும் வரை, 1957லிருந்து மிகவும் போரா தார் தேவிகா. 'மணமகன் தேவை' 'ராணி லலிதாங்கி' படங்களில் பானுமதியோடு வந்த தேவி

காவுக்கு உடனே 'முதலாளி' படத்தில் கதாநாயகி வேடம். ஆனால், மீண்டும் டல் அடிக்க 1961க்கு பிறகு நட்சத்திரமாக ஜொலிக்க ஆரம்பித்தார். இலங்கை வானொலியில் 'திரை தந்த இசை யில் 'வேலவரே' மற்றும் 'வந்தால் வரட்டும் போடி' பாடல்கள் ஒலிபரப்பாகும். பல 'மணமகன்' தேவை பாடல்கள் ஒலிபரப்பானாலும் 'ஒருபடப் பாடல்கள்' நிகழ்ச்சியில் படத்தின் பாடல்களையும் கேட்பதில் தனி இன்பம்தான். நீங்கள் கேட்டவை (பழையன) நிகழ்ச்சியில் தேவை' படத்தின் ப்ரத்யேக பாடல் 'பம்பர கண்ணாலே' பாடல்தான்.

## உனக்காக எல்லாம் உனக்காக

'மாமன் மகள்' (1955) படத்தில் சாவித்திரி ஃபோட்டோவை பார்த்து 'மல்கோவா என்றும், 'மணமகன் தேவை' (1957) படத்தில் தேவிகா ஃபோட்டோவை பார்த்து 'பம்பர கண்ணா சங்கதி சொன்னாளே' என்றும் பாடி ஆடி இன்பம் கண்ட சந்திரபாபு 'புதையல்' படத்தில் ஃபோட்டோவை வைத்துக்கொண்டு 'உனக்காக எல்லாம் உனக்காக இந்த உடலும் உயிரும் ஒட்டி உனக்காக' - என்று நகைச்சுவையின் எல்லைக்கே போய்விடுவார். பாடலின் முதல் ஷாட்டில் அவர்களின் ஷூ போட்ட கால்கள் ஆடும் டேப் டான்ஸ் இசையிலிருந்து திடீரென்று 'ஏய்' என் பாபுவின் குரலோடு அவர் ஆடுவதற்கேற்ப அருமையாக 'உனக்காக' பாடலை இசை இன்பத்தோ டமைத்து தங்கள் மெல்லிசை திறமையை நிரூபித்து விட்டனர் விஸ்வநாதன் - ராமமூர்த்தி ஆகியோர். பதிவின் போது ஒரு இடத்தில் நிற்காமல் ஆடி மகிழும் சந்திரபாபுவின் சேட்டையை பாடலை போதே உணர்ந்து சிரிக்கலாம். வெயிட்டான கருத்துள்ள பாடல்கள் நடுவில் மிக ரசிக்கும்படி சரள னக்காக எல்லாம் உனக்காக' என்று எழுதி அசத்தி விட்டார் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம். வல்லி', 'கற்புக்கரசி' படத்தின் ஹாஸ்ய பாடல்கள் ஒரு ரகம் என்றால், 'உனக்காக எல்லாம் பாடலை விஸ்வநாதன் - ராமமூர்த்தி மெல்லிசை ஜோடியின் மேற்கத்திய மெட்டிற்கு ஏற்ப கோட்டை கல்யாணசுந்தரம் வழங்கிய ராகமே ரசிகர்களை ஆட் கொண்டது. 'உனக்காக எல்லாம் காக' பாடலின் பின்னணி இசையே இன்று கேட்கும் போதும் பிரமிப்பாக புதுமையாக ரசிக் ஒலிப்பது மெல்லிசை மன்னர்களின் இசை வண்ணம்தான்.

## சின்ன சின்ன இழை

கமால் பிரதர்ஸின் ' புதையல் ' படத்தில் பாடல்கள் எல்லாமே சூப்பர் ஹிட்தான். எதுவும் போகாதவை. பாரதியார், தஞ்சை ராமையாதாஸ், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், மருதகாசி யவை. படத்தின் தொடக்கமே பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் 'சின்ன சின்ன இழை பின்னி வரும் சித்திர கைத்தறி சேலையடி நம்ம தென்னாட்டில் எந்நாளும் கொண்டாடும் வேலையடி' என்ற தறி தொழிலின் புகழ் பாடும் அருமையான பாடல் தான். பி.சுசிலா குழுவினர் பாட பத்மினி யர் ஆடும் பாடலில் 'என்னடி கண்ணம்மா இன்றும் சொல்ல வேணுமா' என்ற வரிகள் வரும் இளம் சுகுமாரியிடம் இப்படி பாடுவார் பத்மினி. 'சிந்தனை சிற்பிகள் தேசத்தறிஞர்கள் செந்தமிழ் யில் பூத்த கலைஞர்கள் மங்கல மாநிலம் காக்கும் மறவர் யாவரும் புவி வாழ்வை உயர்த்தும் எல்லோரும் வாங்கி மகிழும் பொன்னாடையடி ஒற்றுமையோடு அத்தனை நூலும் ஒழுங்கா வந்தால் இதில் ஒரு நூலறுந்தால் குளரும் - இதை ஓட்டும் ஏழை கூட்டுறவாலே உலகில் தொழில்வளம் ரும்' போன்ற அருமையான வரிகள் நிறைந்த பாடல். சரியான நேரத்தில் திரை இசையில் துண்டுகளாக பாடல்களை அள்ளிக்கொண்டு போய்க்கொண்டிருந்தார் பி.சுசிலா. மெட்டுக்கு பாட் பிடிக்காத பட்டுக்கோட்டையாருக்கு இந்த மெட்டை கொடுத்து எம்.எஸ். விஸ்வநாதன் எப்படியோ வாங்கிவிட்டார்.

## தங்க மோகன தாமரையே

கதாநாயகிகளுக்கு பெரும்பான்மையாக சுசிலாவே பாட தொடங்கியது 1956-57 கால கட்டங்களில் ஆத்மநாதன் எழுதிய 'தங்க மோர்கன தாமரையே' என்று பி.சுசிலா குழுவினர் பாடியதற்கு பத்மினி நடிகைகளோடு தாமரை குளத்தில் ஆடும் காட்சி அழகான அவுட்டோர் விருந்து. குழுவினரில் ஜமுனாராணியின் குரல்கள் தனியாக ஒலிப்பதும் தெரியும். 'சின்னச் சின்ன இழை தங்க மோகன இரண்டு பாடல்களும் இலங்கை வானொலி கோஷ்டி கானத்தில் அடிக்கடி ஒலித்த பாடல்கள்.

துக்காராமாக சந்திரபாபு எழுதிஅனுப்பும் காதல் கடிதங்களை கையில் கிடைத்ததும் கிழித்து பத்மினியை போஸ்ட்மேன் சிவாஜி விவரம் கேட்க, கடிதத்தை அவரையே படிக்கச் சொல்லி, படிக்கும் அழகிலேயே பத்மினி மனதை பறிகொடுக்க இருவரும் காதலர்களாக மாறுவது இயல்பான பம் தான். கருணாநிதி அவர்களின் கதை, வசனத்தால் 'புதையல்' படத்தின் பல கட்டங்களின் திரு ளுக்கு வார்த்தைகளே காரணமாகி விடும். தாமரை நிலவு இரண்டையும் பத்மினியின் முகத்தில் பார்

வர்ணிப்பதை கருணாநிதி சுவையாக எழுதியிருப்பார். 'தங்கத்தை இங்குதான் ...தேன்' என்று தன் தங்கையை பற்றி சிவாஜி பத்மினியிடம் சொல்வதை உலோக தங்கமென்று ஒட்டுக் ... பாலையா நினைக்க, அவர்கள் இருவரையும் கடைசி வரை படாத பாடு படுத்தி ஒன்று சேர விடா ...க்கும் நகைச்சுவை விருந்து.

பத்மினி விட்டுப் போயிருந்த சந்திரபாபுவின் கடிதத்தை கைப்பற்றி சந்திரபாபு வீட்டிற்கு சென்று அவ ... இல்லத்தின் வாசலில் ஆறு மணிக்கு நகர்வலம் என்று பாலையா படித்து பார்க்கும் கட்டமும் ... சென்ற உடன் பரிமளம் என்ற பாலையா ஒரு வார்த்தை சொல்ல, 'பேசாதே என்ன சொன்னே' ... சந்திரபாபு துள்ளி குதிப்பதும் சரியான நகைச்சுவை. படத்தில் பத்மினியின் பெயர் பரிமளம். வார்த்தை ...களை அள்ளித்தெளித்து 'புதையலை' சுவைக்கச் செய்து விட்டார் கருணாநிதி. 'வெள்ளிக் கிழமை ... வெட்டப்பட வேண்டும்' என்ற எம்.கே.ராதாவின் டைரி குறிப்பை வைத்து அவரது மனைவி ... வெள்ளைக்காரனின் பலாத்காரத்தால் அறிவாள் கொண்டு தற்கொலை செய்து கொண்டதை ... கொலைகாரரென்று சதியாக உறுதி ஆகி சிறையாகி விடுவார். எம்.கே.ராதா குறித்திருந்தது ... கிழங்கை.

ஒன்றுமில்லாத புதையல் விஷயத்தில் பாலையாவை பள்ளம் தோண்ட செய்து, எம்.கே.ராதா உள்ளே ...யத்தை சுருட்டிப் போட அதை கண்டு பாலையா தடயம் என்று எண்ணி இரவுபூஜைக்கு பிறகு மூன்று ... மேல் திறந்து பார்க்கச் சொல்வார் எம்.கே.ராதா. தூங்கி வழியும் பாலையாவை அவரதுஇளம் மனை ... எம்.என்.ராஜம் தட்டி எழுப்ப, பயபக்தியுடன் அதை படிக்கும் பாலையாவின் முகத்தின் போக்கைப் ... வேண்டுமே. 'இளம் காதலர்களுக்கு மணமுடித்து அவர்களைக் கொலை செய்யாவிடில் ரத்தம் கக்கி ...' என்ற வாசகத்தை படித்து நடுங்கி சிவாஜி - பத்மினியை மணமுடிக்கும் மனமாற்றத்திற்கு வருவார்.

ஆத்மநாதன் இயற்றிய 'விண்ணோடும் முகிலோடும் விளையாடும் வெண்ணிலவே' என்ற சி.எஸ்.ஜெ...ன் - பி.சுசிலா பாடலின் முன்பாதியில் கடற்கரையோரம் கோமாளிபோல் ஆடும் சிவாஜி சரண...யில் செட்டில் எடுக்கப்படும் காட்சியில் மிடுக்காய் நடிப்பார். பாலையாவிடம் மாட்டிக் கொண்டு ... அறையில் அடைபட, சிவாஜியைக் காப்பாற்ற பத்மினி குடுகுடு பாண்டி வேடம் போட்டு எம்.கே.ரா...ன் தெருவில் பாடிக் கொண்டே பாலையா வீட்டை அடையும் பாரதியாரின் 'நல்ல காலம் வருகுது' ...லை டி.எம். சௌந்தரராஜனும் - பி.சுசிலாவும் அவர்களுக்கே பாடிக் கொண்டது போல் ஆகிவிட்டது. ... 1957ம் ஆண்டுகளில் டி.எம்.சௌந்தரராஜன் - பி.சுசிலா இருவரின் பொற்காலத்தின் முதல் அத்தியா...ன் ஆரம்பமாகி விட்டன. சுபபந்துவராளி ராகத்தில் பி.சுசிலா பாடிய மருதகாசி எழுதிய ... அலை போலே வாடும் எந்தன் மனமே ஆசை காதலை மறந்து போ' காட்சியில் பத்மினி சோகத் ... பாட சந்திரபாபு வயலின் வாசிக்கும் காட்சி. இருவரையும் பாலையா ஒரு வீட்டில் சிறை வைத்தி... இலங்கை வானொலியில் திரை தந்த இசை நிகழ்ச்சியின் மற்றொரு பிரதான பாடல்.

## சைனா பஜாரு நைனா உஷாரு

பாலையாவின் சதியை தெரிந்து கொண்டு பெண் வேடமணிந்து சந்திரபாபு கோவிந்தனை மயக்கி ... காட்சியில் இருவரும் ஆலம்விழுதுகளை பிடித்து ஊஞ்சலாடிக் கொண்டு 'ஹலோ மை டியர் ராமி ...மா உனக்கு மாமி டிலே செய்யாதே சாமி - இங்கு டேஞ்சர் ஏதுமில்லே ராமி' என்று ஆங்கில ...தைகளின் ஜாலத்தோடு காமெடி பாடலை வழங்கி இருந்தார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

'சைனா பஜாரு நைனா உஷாரு மைனா குருவியே நீ யாரு யாரும் திங்காத சொளையே சிங்கார ...யே அழகான மட்காடு தலையே' 'யுவர் மூக்கு ஸ்பென்சர் தேக்கு யுவர் காது கேக்காது யுவர் பாடி ...' - என்று தனது ஆங்கில புலமையையும் நிரூபித்தார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். எம்.என். ...த்தை கொலை செய்யும் முன் 'அதோ போறாரே வள்ளி அம்பலம்' என்று நீண்ட வசனத்தை அவர் ... பாலையா 'பேசாதடி பதித்ரோகி' என்று கத்தும் காட்சி சரியான நகைச்சுவை வில்லத்தனம். கடைசி ... சிவாஜி - பத்மினி நடிக்கும் நாடக பாடலை டி.எம்.சௌந்தர்ராஜன் - பி.லீலா பாடினர். 1956 டிசம் ... பேசும்பட அட்டையை அலங்கரித்தது 'புதையல்' பட விளம்பரம்தான். உள்ளே 'புதையல்' படத்தின் ... ஸ்டில்கள். அநேகமாக 1956லேயே படப்பிடிப்பு முடித்திருந்த 'புதையல்' 1957ன் தொடக்கத்தி...யே வெளியானது. விஸ்வநாதன் ராமமூர்த்தியின் இசை பொக்கிஷமான 'புதையல்' படப்பாடல்கள் ... திரை இசை ரசிகர்களின் நெஞ்சங்களில் நீங்கா இடம்பெற்றவை. தஞ்சை மண்ணில் தமிழோடு ...ந்து வளர்ந்த மு.கருணாநிதி அதன் கடற்கரையோரம் சர்ஃபோஜி மன்னர் அமைத்த மனோரா மினாரை ...ணியாக 'புதையல்' படத்தின் நிரந்தர அடையாளமாக்கி பெருமைபடுத்திவிட்டார்.

## ...ன்னு வெளையற பூமியடா

பானுமதியும் சிவாஜி கணேசனும் ஜோடி சேர்ந்த 1957ன் மற்றொரு பிரபல படமான 'மக்களைப் பெற்ற ...யில் கொங்கு தமிழ் வசனத்தில் பேசி நடித்தனர். வி.கே.ராமசாமியோடு கூட்டாக சேர்ந்து லக்ஷ்மி

பிக்சர்ஸ் பேனரில் ஏ.பி.நாகராஜன் தயாரித்து டைரக்ட் செய்த 'மக்களை பெற்ற மகராசி' நூறு நாட் வெற்றிப்படம். சிவாஜி கணேசன், பானுமதி, வி.கே.ராமசாமி, முத்துலட்சுமி, நம்பியார், எம். பி.டி.சம்பந்தம், சாய்ராம், சி.டி.ராஜகாந்தம் இவர்களோடு மக்களைப் பெற்ற மகராசியாக கண்ணாம் களை உருக வைத்தார். கா.மூ.ஷெரீப், மருதகாசி, தஞ்சை ராமையாதாஸ், பட்டுக்கோட்டை கல் பாடல்களை இயற்றினர். ஏ.பி.நாகராஜன் யூனிட் ஆனதால் கே.வி. மகாதேவனின் இன்னிசையில மணம் கமழும் காலத்தை வென்ற பாடல்கள் இன்றும் ரசிகர்களை கவர்கின்றன.

மருதகாசியின் கைவண்ணத்தில் கிராமிய மணம் நிறைந்து ஏர் முனையிலிருந்து சந்தை வரை பாறை மாடு, மாயவரம் ஏறு' என்று தொடங்கி 'பொள்ளாச்சி சந்தை' வரை தமிழகத்தின் விவசாய உ கிராமத்தின் இதயமே பேரன்பின் நிலையமாக கடைசியில் தாயாரிடம் சேர்த்த பணத்தைக் கொடுக் வுரையோடு முடித்து வாழும் வகையின் அமர கவிதையாக்கி விட்டார். 'மணப்பாறை மாடு க வின் பெருமையைச் சொல்வதை விட அதை டி.எம்.சௌந்தர்ராஜன் குரலில் கேட்டு மகிழலாம். டிக் கொண்டே சிவாஜி கணேசன் பாடும் இந்தக் காட்சியை பார்க்காமலேயே இது சிவாஜிக்காக ஜன் பாடியது என்று சொல்லி விடலாம். மருதகாசி எழுதிய 'சீமைக்கு போயி படிச்சவரு சின்ன நல்லவரு' எஸ்.சி.கிருஷ்ணன் - ஏ.ரத்னமாலா பாடியது கோரஸ் நடன காட்சி.

ஆடுகளை ஓட்டிக் கொண்டே பானுமதி சேட்டையாக பாடும் 'சொன்ன பேச்சைக் கே முன்னும் பின்னும் பார்க்கணும்' என்று ஆடுகளுக்கு 'கட்டுப்பாட்டை விட்டுப்புட்டு கண்டபடி என்ற அவைகளின் பெயர்களை சொல்லி விரட்டிக் கொண்டு ஓட்டுவது பானுமதி குரலுக்கேற்ற நகைச்சுவை பாடல். 'காதிலெல்லாம் வாங்கிகிட்டு காத்துவாக்கில் பறக்கவிட்டு பாதையில் வழுக்கி கூடாது' என்ற தன் வரிகளில் மருதகாசி சொல்வது போல் மனிதர்களுக்கும் வேடிக்கையாகச் சொ டார். மற்றொரு படு சிரிப்பான பாடலில் 'வந்தது யாரென உனக்கு தெரியுமா, சொந்தமுள்ள சொன்னா புரியுமா' என்று தன் காளையிடம் பானுமதி கேட்கவும் அது அழகாக தலையை ஆட்டும் முழுதும் பானுமதியின் நையாண்டியும் குரலின் நெடியும் சேர்ந்து 'சிங்கார கட்டழகன் பொட்டழகன்' ஒரே குறும்புதான்.

'போரவளே போரவளே பொன்னுரங்கம்' பாடலை சிவாஜியும் பானுமதியும் வேடிக்கையும் யாட்டுமாக ஒரே ஷாட்டில் முடித்திருப்பார்களோ என்னவோ. பாடலில் 'இந்த கன்னிப் பெண் படைச்சு உன் கண்ணிரண்டை ஏன் படைச்சான் அட என்ன மச்சான் அப்படி பார்க்குறே - என்று அலட்டிப்பார். ஏ.பி.கோமளா, ஏ.ரத்னமாலா இருவரும பாடியது 'செந்தாழம் பூவை போல'. ரோஜா, தாமரை மலர்களுக்கிடையே மோதிக் கொள்ளும் பாடலை பட்டுக்கோட்டை கல்யாண இயற்ற ஜிக்கி, ஜமுனாராணி, ரத்னமாலா மூவர் பாடினர், சாயி, சுப்புலக்ஷ்மி நடனம். 'அட தாம்பரம்' என்று பாடலில் எஸ்.சி.கிருஷ்ணன், ரத்னமாலா ஆகியோரின் சிரிப்பு வெடிக்க ஏழுமலை, லட்சுமி காமெடி டூயட், 'முன்னாலே ஒரு பொண்ணு' என்று மற்றொரு பாடல்.

பி.பி.ஸ்ரீனிவாஸ், சரோஜினி பாடிய 'ஒன்று சேர்ந்த அன்பு மாறுமா' பாடலை ஸ்ரீனிவாஸ் ளின் பிரபலமான முதல் டூயட் என்று கூட சொல்லலாம். அதுவரை காட்சி பின்னணி பாடல்களும், சித்ர பாடல்களுமாக பாடி வந்தவருக்கு கே.வி.மகாதேவன் இசையில் அபூர்வமாக நம்பியாருக்கு குரல் தது இன்றும் விரும்பிகேட்கப்பட்டு வருகிறது. சரோஜினி பாடியது எம்.என்.ராஜத்துக்காக. மருதகாசி றிய 'மக்களை பெற்ற மகராசி மகாலட்சுமி போல் விளங்கும் முகராசி ஒற்றுமை வளர்த்த இளராசி உத்தமி இந்திய குணராசி' என்று ஜிக்கி பின்னணி பாட கண்ணாம்பாவை எல்லோரும் போற்றி வணங்க நிறைவு பெறும்.

## சத்தியமே லட்சியமாய் கொள்ளடா

1957ல் கே.வி.மகாதேவன் இசையில் மற்றொரு வெற்றிப்படம் தான் 'நீலமலை திருடன்'. பின் தாரம்' படத்தை தெலுங்கில் டப் செய்து வெளியிட தயாராய் இருந்த தேவருக்கு எம்.ஜி.ஆர் அனுமதி இல்லாமல் டப்பிங் செய்ததற்காக வக்கீல் நோட்டீஸ் அனுப்ப, அதை எடுத்துக் கொண்டு ரெட்டி சக்ரபாணி ஆகியோரிடம் ஓட, அவர்கள் பதற்றமில்லாமல் எம்.ஜி.ஆருக்கு பதில் வக்கீல் நோட் அனுப்பினர். 'டம்மி' யான காளையின் பொய் கொம்பை மட்டும் நீங்கள் பிடித்துவிட்டு யாரோ உ காக டூப்பாக நடித்தவர் உண்மையாக சண்டை போட்டு உடம்பை புண்ணாக்கிக் கொண்டார். இருக்க, நீங்களே காளையுடன் நிஜமாக சண்டை போட்டிருந்தால் படம் இன்னொரு மடங்கு இருக்கும். அதனால் அந்த நஷ்டத்துக்கு நீங்கள்தான் எங்களுக்கு ஈடு கொடுக்கணும்' என்ற நோட் பார்த்தவுடன் சண்டை போட்டது எம்.ஜி.ஆர். அல்ல டூப்தான் என்ற ரகசியம் வெளியே தெரி தன்இமேஜ் பாதிக்கக் கூடும் என்று புரிந்து கொண்டு வாயை மூடிக் கொண்டார் எம்.ஜி.ஆர்.

ஆரை வச்சு படம் எடுக்கறதா இருந்தா 'நீங்களும் வேண்டாம், ஒங்க எம்.ஜி.ஆரும் வேண்டாம்' சக்ரபாணியும் சொல்லி விட்டார். இதனால் எம்.ஜி.ஆர். இல்லாமலேயே படமெடுத்து வெற்றி பெற 'நீலமலை திருடன்' படத்தை எடுத்தார் தேவர்.

ஹிந்தி சந்திரலேகாவுக்கு பிறகு பம்பாயில் சில படங்களில் நடித்துக் கொண்டிருந்த ரஞ்சன் ஒரு படத் நடிக்கும்போது குதிரை சவாரியின் போது விழுந்து காலை ஒடித்துக் கொண்டு சென்னைக்கு வந்து மகா சாலையில் தனது பண்ணையில் ஓய்வாக இருந்தபோது அவரை வற்புறுத்தி 'நீலமலை திருடனாக' வைத்தார். ஆக்ஷன் ஹீரோக்களை விரும்பிய தேவருக்கு கத்தி சண்டை குதிரை ஏற்றம் அத்துபடி ரஞ்சன் கிடைத்தது சௌகரியமாகப் போய்விட்டது. முகமூடியையும் கத்தியும் கொடுத்து கூடவே குதிரை கதாநாயகனின் கதையை பின்னி (ஏற்கனவே கண்ணதாசன் ஏ.பி. நாகராஜன் வராமலே இழுக்கடித் தாய்க்கு பின் தாரம் படத்திற்கு அய்யா பிள்ளை என்பவரை எழுதச் சொன்னார் தேவர்.) அய்யா வசனமும், மருதகாசி, தஞ்சை ராமையாதாஸ், புரட்சிதாஸன் பாடல்களும் கே.வி.மகாதேவன் இசை நீலகிரி மலை காடுகளின் வெளிப்புற காட்சிகளும் படத்தை வெற்றிபெற செய்து விட்டன.

'சாலிவாகனன்' *(1945)* என்ற படத்தில் கதாநாயகன் ரஞ்சனும், எம்.ஜி.ஆரும் கத்தி சண்டை போடும் வேண்டுமென்றே எம்.ஜி.யாரை காயப்படுத்தியும் திருப்பி தாக்காமல் இயக்குனர் பி.என்.ஆரிடம் முறை எம்.ஜி.ஆர். இயக்குனரும் குறுக்கிட்டு ரஞ்சனை திருத்தி இருக்கிறார். இதைமனதில் வைத்துக் கூட காலம் கனிந்துதேவர் அழைத்ததும் 'நீலமலை திருடன்' வாய்ப்பை பயன்படுத்தி எம்.ஜி.ஆர். வெறுப்பை தீர்த்துக் கொண்டிருப்பார் போலும். வாள் வீச்சில் எம்.ஜி.ஆர் வல்லவராக திகழ தொடங் ரஞ்சனுக்கு பிடிக்கவில்லை. அதனால் அவரைபடப் பிடிப்பில் காயப்படுத்தினார் என்று ரண்டார்கையி பி.என்.ஆர். கூறி இருந்தாராம்.

ரஞ்சனுக்கும் பானுமதிக்கும் ஒத்துவராதென்று அஞ்சலிதேவியை ரஞ்சனுக்கு ஜோடியாக்கி விட்டார் தேவர். ராஸ். - ஜிக்கி பாடிய 'பணக்கார சீமையிலே' பாடலுக்கு அஞ்சலி தேவி, ரஞ்சன் நடித்தனர். ராதா, டி.எஸ்.பாலையா, ஈ.ஆர்.சகாதேவன், ஸ்ரீராம், ஈ.வி.சரோஜா, கண்ணாம்பா நடித்த 'நீலமலை பொழுதுபோக்காகத்தான் இருந்தது. 'நீதிபதி'யில் *(1955)* கே.ஆர்.ராமசாமியை துரத்திக் கொண்டே போல், 'நீலமலை திருடனில்' ரஞ்சனை நினைத்து கதி கலங்குவார் பாலையா. 'சத்தியமே லட்சி கொள்ளடா' பாடலை கம்பீர மோஹனமாக கணீரென்று கருத்துக்களை உரைக்க, மலைகளிடையே மாக எதிரொலிக்கும் தன்மையோடும் ஜெயத்தின் அறிகுறியாக துள்ளும் மோஹன பின்னணி இசை வழங்கி ஃபுல் த்ரோட் full throat ஆக டி.எம்.சௌந்தரராஜனை பாட வைத்து திரை இசையின் கம்பீர உச்சிக்கே போய் விட்டார் கே.வி.மகாதேவன். 'அம்பிகாபதி'யில் ஜி.ராமனாதனுக்காக ' சற்றே சரிந்த ' என்று உச்சஸதாயில் நிலைத்து குரலில் நர்த்தனமாடிய டி.எம்.சௌந்தரராஜன் 'நீலமலை திருட கே.வி.மகாதேவன் இசையில் 'சத்தியமே லட்சியமாய்' மலைசாரலோடு எதிரொலித்தார். 'மணப்பாறை கட்டி' என்று வயல் மணம் கமழ எழுதிய மருதகாசியை மலைமீது குதிரை சவாரி அழைத்து கருத் ஒலி பெருக்க செய்து விட்டார் கே.வி.மகாதேவன். 'சித்திர மாச நிலவு போலே ஜொலிக்குது என்று கஸ்தூரி பாட ரீடா ஆட கூட்டத்தில் சின்னப்பா தேவர் ரசித்துக் கொண்டிருப்பார்.

## உள்ளம் கொள்ளை போகுதே

'நீலமலை திருடன்' படத்தில் நடித்தபோது பள்ளத்தாக்கில் இறக்கி விட்ட நேரத்தில் மேகங்கள் சூழ, யூனிட்டும் வெகு தூரம் இருந்ததால்) பயந்தே போய்விட்டாராம் அஞ்சலிதேவி. அந்த மாதிரி இடங் அதற்கு பிறகு பார்க்க முடியுமா என்று தேவரை நன்றியோடு நினைவு கூறுகிறார் அஞ்சலி தேவி (துார் பேட்டியில்).

'உள்ளம் கொள்ளை போகுதே உண்மை இன்பம் காணுதே தெள்ளுதமிழ் தெம்மாங்கு பாடிடுதே
பள்ளத்தில் பாயும் வெள்ளி அலைபோலே துள்ளி விழும் வெள்ளத்தாலே தோன்றும் குளிர் போலே
காட்சி தன்னிலே இயற்கை ஆட்சியே மண்ணிலே என் கண்கள் பண்பாடுதே'-

என்று ஜிக்கி குழுவினர் பாட மருதகாசியின் வரிகளை நடன நடிகைகளோடு அஞ்சலிதேவி நீலகிரி பள்ளத்தாக்கின் பகுதியில் அருவியோரம் ஆடி பாடி மகிழும் இயற்கைக் காட்சி. ஒரு நாள் ஷூட்டிங்கிற்கு வரவழைக்கப்பட்டு நீலகிரி பள்ளத்தாக்கிற்கு சென்று பார்த்து பயந்துபோன அஞ்சலிதேவியை செய்து அதில் பாதாளம்போல் காட்சியளித்த அருவிகள் விழும் பாறைகளிடையே இறக்கி ர்களாம். ஆனால், பெரும் மேகசூழலிடையே படப்பிடிப்பு நடக்க 'முருகா' என்று தேவர் அவர்கள் அந்த குறிப்பிட்ட வட்டம் வரை மேகங்கள் விலகி பாடல் காட்சி தாமதமாகாமல் படமானதை இன்றளவும் அஞ்சலிதேவி பிரமிக்கிறார். தேவரின் மெய்யுணர்வு பக்தி பரவசத்திற்கு கடைசிவரை முருகனின் தெய்வச்செயல் கைகொடுத்தது.

ஈ.வி.சரோஜாவுக்கு அஞ்சலிதேவி சண்டை போட கற்று தரும் 'கொஞ்சு மொழி பெண்களுக்கு
நெஞ்சம் வேணுமடி வஞ்சகரை எதிர்த்திடவே வாளும் ஏந்த வேணுமடி' என்ற மருதகாசி பாடலை
பாடினார். தஞ்சை ராமையாதாஸ் எழுதிய - 'ஏங்கி ஏங்கி நிக்காதே எதிலும் மனசை வைக்காதே
தின்ன குரங்கை போலே என்னை பார்த்து சொக்காதே' - என்ற ஈவி.சரோஜாவின் ஆடலுக்கு ஜிக்கி
னார். தங்கவேலு, ஈ.வி. சரோஜா நடித்த 'வெத்தலை பாக்கு சுண்ணாம்பு' (எஸ்.சி.கிருஷ்ணன்,
பாடலில் தங்கவேலுவுக்கு கனகச்சிதமாக எஸ்.சி.கிருஷ்ணனின் குரல் பொருந்துகிறது. 'ஒண்ணுக்கு
டாச்சு' என்ற மற்றொரு பாடலையும் எஸ்.சி.கிருஷ்ணன் பாலையாவுக்கு பாடுகிறார். நீலமலை
தேடும் ரகசிய போலீஸ்காரராக பாலையாவுடன் பெண்கள் வேடத்தில் சாயிராம், ஸ்ரீராமன்
நகைச்சுவை 'நீதிபதி' (1955) படத்தில் திருடன் கே.ஆர்.ராமசாமி பெண் வேடத்தில் போலீஸ்காரர்
யாவை ஏமாற்றும் பாடல் காட்சிதான் ஞாபகப்படுத்துகிறது.

## காட்சி தன்னிலே இயற்கை ஆட்சியே மண்ணிலே

50கள் 60களில் இருந்த ஊட்டியும் கொடைக்கானலும் 70களில் இருந்து குட்டி சுவராகி விட்டன
மொழி படப்பிடிப்புகள், நாகரீக குடியிருப்புகள், ஹோட்டல்கள் என்று மக்களுக்கு மலை பிரதேச
ணர்ச்சிகளை உண்டாக்கி அந்த இடங்களை கழிவு நீரின் அலங்கோலங்கள் ஆக்கிரமிக்கும் குப்பை
மாற்றி விட்டன. நகரங்களை நாசமாக்கியது போதாதென்று Bird watching Tiger watching என்று
மாட்டிக் கொண்டு மலை மடிகளை மிதித்துக் கொண்டு ப்ளாஸ்டிக் பொருள்களின் குப்பைகளை
விட்டு காட்டிலும் வன பகுதிகளிலும் நடமாட்டத்தை அதிகமாக்கி யானைகளையும், புலிகளையும்
ளையும் பார்க்கிறேன் என்று ஒரு கும்பல் போக மறுபக்கம் வேட்டையாடும் சமூக விரோத கும்பல்
கும் லூட்டிகள் இந்த ஐம்பது வருடங்ளில் நம் காடுகளை பாதிக்கு மேல் அழித்து விட்டன. திரையில்
இயற்கை எழில் பகுதிகளை காட்டி மக்களை மகிழ்விப்பது இருக்கட்டும். அங்கே படப்பிடிப்புகள்
அந்த இடங்களின் தூய்மையும் கெடுத்து அந்த மக்களின் மனதிலும் விபரீதங்களை உண்டாக்கி
றிகளாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இது போதாதென்று 'ஹிந்து' போன்ற ஆங்கில பத்திரிகைகளும்
உதாரணமாகக் கொண்டு தமிழ் பத்திரிகைகளும் இந்த பறவைகள் வந்து விட்டன, இங்கு புலியை
லாம்; அங்கு யானைகளைக் கண்டு மகிழலாம் என்று அதோடு மக்கள் ஊடுறுவாத கன்னி பிரதேசங்
யும் படங்களோடு போட்டு வழி குறிப்புகளையும் தந்து destructive awareness உருவாக்கி மனித நடமா
தின் துர்நாற்றத்தால் பசுமை கொஞ்சும் இயற்கை எழிலும் வன விலங்குகளும் அழியக் காரணமாகி
டன. சினிமா மக்களின் மனதை கெடுப்பதாக சொல்லும் சில அறிவு ஜீவிகள் தங்கள் பங்குக்கு இ
மடியிலேயே கையை வைத்து விடுகிறார்கள். இவர்களின் trekking, research எல்லாம் படிப்பறிவில்லாத
விடையே சமூக விரோத போக்கை உண்டாக்கி அவர்கள் பங்குக்கு காடுகளை வேட்டையாடி பிழைத்து
கொண்டிருக்கிறார்கள். திரையில் இருட்டில் பார்ப்பது மக்களின் மனங்களை பாதிப்பதை சொல்பவர்கள்
களுக்கு பல விஷயங்களை தெரிவிக்காமல் இருப்பதே மலை பிரதேசங்கள் காடுகளுக்கு பாதுகாப்பாக
கும். Enough damage has been done, கூட்டம் கூட்டமாக பறவைகளை பார்க்கிறோம் trekking போகிறோ
புலிகளை காணலாம் என்று மக்களை தடுத்து நிறுத்தினாலே இயற்கை தப்பித்து செழிக்க உதவும்.

அந்தக் காலத்தில் மந்திரகுமாரி, நீலமலை திருடன், செங்கோட்டை சிங்கம்போன்ற படங்களே
பன் போன்ற தீவிரவாதிகளை விபரீதமாக வளர்த்திருக்கலாம் என்பதில் சந்தேகமே இல்லை. Society
only the wrong singnals பல்லாயிரக் கணக்கான வருடங்கள் வளர்ந்து செழித்து பூமியைக் காப்பாற்றிய இய
சூழல் இந்த நூறு வருடங்களில் அழிந்தது விஞ்ஞானத்தினால்தானே. அதனால் தான் நம் முன்னோர்கள்
யும் கண்டு பிடிக்காமல் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த வகை பூமியை காப்பாற்றி வந்தது. விஞ்ஞானத்
வசதி வாய்ப்புகள் மனிதனின் எல்லை மீறிய அட்டகாசங்களை உருவாக்கி இயற்கையை மொட்டையா
விட்டன. மூன்று மணி நேரம் இருட்டில் பார்க்கும் சினிமா முப்பது மடங்கு பாதிப்பை ஏற்படுத்துவது போ
படித்தவர்கள் ஒரு நடைமுறையை பின்பற்றினால் படிக்காதவர்கள் அதை நூறு மடங்காக விபரீதமாக ப
படுத்தி பிழைத்துக் கொள்ள, நடுவில் பணக்கார திமிலங்களும் அரசியல்வாதிகளும் நாட்டையே சூறையா
பன்மடங்கு லாபமடைந்து வருகிறார்கள்.

## ஏரிக்கரையின் மேலே போறவளே பெண்மயிலே...

'மக்களை பெற்ற மகராசி', 'நீலமலை திருடன்' ஆகிய படங்களின் வெற்றியோடு 1957ல் கே.
காதேவன் அவர்களுக்கு வெற்றியை தந்த மூன்றாவது படம் 'முதலாளி'. 'பெண்ணரசி' (1955). படத்தை
தொடர்ந்து 'சம்பூர்ண ராமாயணம்' தயாரித்துக் கொண்டிருந்த எம்.ஏ.வி. பிக்சர்ஸ் வேணு அவர்கள்
கால தயாரிப்பாக 'முதலாளி'யை தயாரித்தார். 'சம்பூர்ண ராமாயணத்தில் ஏ.பி.நாகராஜன் பிஸியாக இரு
தாலோ என்னவோ, ' முதலாளி ' க்கு வி.ஸ்ரீனிவாசன் அவர்களுக்கு முதன் முதலில் இயக்கும் வாய்ப்பை
கொடுத்தார். அதுவரை பல பேருக்கு உதவியாளராக இருந்த வி.ஸ்ரீனிவாசனுக்கு முதல் படமான 'முதலா

யடைந்து மூன்றே வருடங்களில் முக்தா ஸ்ரீனிவாசன் ஆனார். துரித தயாரிப்பாக ஆரம்பித்ததால் ஸ்.ஆரை புக் செய்து கதாநாயகிக்கு பத்மினியை அணுகினார்களாம். அவர் ரஷ்யாவுக்கு 'பரதேசி' படத் நடிக்க சென்று விட்டதால் புதிதாக ஒருவரை தேர்ந்தெடுக்கும் படத்தில் எஸ்.வி. சஹஸ்ரநாமம் அவர் சேவா ஸ்டேஜ் குழுவில் இருந்த ப்ரமீளாவை 'தேவிகா' என்று பெயர் மாற்றி ஒப்பந்தம் செய்தார்கள். டையில் 'நாட்டியதாரா' 'ராணி லலிதாங்கி' 'மணமகன் தேவை' படங்களில் தேவிகா நடித்து வெளிவந்து விட்டன.

இதில் வேடிக்கை என்னவென்றால், 1955லிருந்து எண்பது சதவிகிதம் ராஜா ராணி படங்களாகவே த்துக் கொண்டிருந்த தமிழ்திரை உலகில் மீண்டும் 'முதலாளி ' என்ற சமூக படத்தின் ரூபத்தில் முதல் கத்தி ராஜாராணி படங்கள் மேல் விழுந்தது. ஆம். 1957 ஆம் ஆண்டு தீபாவளி திருநாளில் ஜெமினி சன், சாவித்ரி நடித்த சௌபாக்யவதி, எம்.ஜி.ஆர்., அஞ்சலிதேவி நடித்த 'சக்ரவர்த்தி திருமகள்', கணேசன், பானுமதி நடித்த 'அம்பிகாபதி' படங்களோடு எஸ்.எஸ்.ஆர்., தேவிகா நடித்த சமூக பட 'முதலாளி' யும் ரிலீசானது. அந்த மூன்று ராஜாராணி படங்களையும் மிஞ்சி 'முதலாளி' நூறு நாட்கள் முதலிடத்தை பெற்றது. குறைந்த செலவில் நிறைய வசூலை கொடுத்து தேசிய விருதும் பெற்றது லாளி ' படம்.

எஸ்.எஸ்.ராஜேந்திரன், தேவிகா, டி.கே., ராமச்சந்திரன், எம்.என்.ராஜம், ராஜேஸ்வரி, சி.டி.. ராஜகாந்தம், சாமி ஆகியோரோடு கன்னையா முத்துலக்ஷ்மி ஜோடியும் நடித்தது. 'அடியே நீ நேத்து வந்தவ' என்று லட்சுமியை கன்னையா ஒவ்வொரு தடவையும் கிண்டல் செய்வார். (இதே கன்னையா 10 வருடங்க பின் 1967ல் 'நான்' படத்தில் 'என்னாத்தே' என்று ஒவ்வொரு தடவையும் வசனத்தில் பேசியதால் 'என் கன்னையா'வானார்). 'ஏழை படும்பாடு' (1951) படத்தில் வி.நாகையாவுக்கு பதில் சொல்லும் ஒரே சியில் வந்த கன்னையா, தொடர்ந்து பல படங்களில் நடித்தும் 'முதலாளி'யில் நன்றாக அடையாளம் பட்டார்.

## ருந்தோ வந்தார் என் இதயம் கவர்ந்தார்

நாமகிரிப்பேட்டை கிருஷ்ணனின் நாதஸ்வர டைட்டில் இசையோடு மங்கலமாக முக்தா ஸ்ரீனிவாச 'முதலாளி' படம் தொடங்கியது. கா.மு. ஷெரீப் இயற்றிய பாடல்களில் சிரஞ்சீவி வரம்பெற்று விட்ட ரையின் மேலே' 1957ல் டி.எம்.சௌந்தரராஜனின் உச்சஸ்தாயிலேயே நிலைத்து ஜாலம் செய்த மற் உதாரணம். ஆரபி ராகத்தில் கே.வி.மகாதேவன் மெட்டமைத்து அமர்க்களப்படுத்த சௌந்தர்ரா அதை அட்டகாசப்படுத்தி விட்டார். எஸ்.எஸ். ராஜேந்திரன் அவர்களுக்கு 'குலதெய்வம்' (1956) படத் பின் (காதல் காதல் காதல்) டி.எம்.சௌந்தரராஜன் பாடிய காலத்தை வென்று விட்ட பாடல். முதலாக கதாநாயகியாக நடித்த 'முதலாளி'' படத்தில் தேவிகாவை மறக்காமல் என்றும் நினைவுப வது 'ஏரிகரையின் மேலே போறவளே பெண் மயிலே' பாடல்தான். சேலத்தின் மலையோர பின்னணியில் டிப்பு. பழுதடையாத அன்றைய இயற்கை சூழலில் எஸ்.எஸ்.ஆர்., தேவிகா நடித்த காட்சி. முதலாளி தங்க முதலாளி' என்கிற இருபக்க இசை தட்டுக்கு லக்ஷ்மி ராஜ்யம், ராஜேஸ்வரி, லீலா, பிரதிபா, சரஸ்வதி கோரஸ் நடனக்காட்சியில் ஆடிய ஆனந்தன் இன்னும் 5 வருடங்களில் தன்னுடன் யகனாக நீயா நானா (1962) படத்தில் நடிப்பாரென்று தேவிகா எதிர்பார்த்திருக்கமாட்டார். இவர்களில் ஆடிய மற்றொரு நடனத்திற்கு ரத்னமாலா, கஸ்தூரி பாடிய 'சிக்கனமா வாழணும், சேர்த்துவைக்க ணும்' என்ற அன்றைய பிரபல பாடல் ஒலித்தது. எம்.எஸ். ராஜேஸ்வரி தேவிகாவுக்கு பாடியது ருந்தோ வந்தார் என் இதயம் கவர்ந்தார் என் வாழ்வில் நான் கண்ட மிக நல்லவர்'. டி.எம்.சௌந்தர்ராஜன் ஸ்.ராஜேஸ்வரி பாடிய 'குங்கும பொட்டுக்கார கோணகிராப்புகாரா உனையே நான் பிரியேனே' என்ற டூயட்டை னில் போய் கொண்டே எஸ்.எஸ்.ராஜேந்திரனும், தேவிகாவும் பாடுவார்கள். 'யௌவனராணிதான் பாடும் வாணிதான் என்மேலே ஆசை கொள்ளும் இளைஞரும் கோடிதான்' என்ற ஜிக்கி பாட எம்.என்.ராஜம், டி.கே.ராமசந்திரன் அடிக்கும் லூட்டி காட்சி. 1957லிருந்து 'முதலாளி ' ஸ்ரீனிவாச அழைக்கப்பட்டுக் கொண்டிருந்த நேரமோ என்னவோ தன் அண்ணன் ராமசாமியுடன் தயாரிப்பில் 1961ல் முக்தா ஸ்ரீனிவாசன் ஆகிவிட்டார்.

## ந்தம் தருவது சங்கீதமே

மனிதனும் மிருகமும்' 'கள்வனின் காதலி ' படங்களின் தோல்விக்கு பின் ரேவதி ஸ்டுடியா ஸ்ரீனி ராகவன் 'சமய சஞ்சீவி' நாடகத்தை படமாக தயாரித்தார். ஆனால், இதுவும் தோல்வியைத்தான் வியது. பட்டு, டி.ஆர். ராமச்சந்திரன், நம்பியார், சிவதாணு, சாரங்கபாணி, வித்யாவதி, சந்தியா, ன்.ராஜம், சி.கே.சரஸ்வதி, குசலகுமாரி நடித்த 'சமயசஞ்சீவி' படத்தின் பாடல்களை மருதகாசி எழுத நாதன் இசை அமைத்தார். ஷண்முகப்பிரியா ராகத்தில் 'ஆனந்தம் தருவது சங்கீதமே அகில உயிர்க்கும்

அனுவளவும் பேதமின்றி ஆனந்தம் தருவது சங்கீதமே' என்று ராதா ஜெயலக்ஷ்மி பாடிய பாடலை இ... வானொலி திரை தந்த இசை, நாட்டிய பாடல்கள் நிகழ்ச்சிகளில் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன்.

இலங்கை வானொலியில் மட்டும் தான் 'சமய சஞ்சீவி ' பாடல்களை கேட்க முடிந்தது. ... பாடிய பாடல் : ஜரிகை பட்டு சலசலக்க சாந்து பொட்டுபளபளக்க புருஷன் மனசு கிறுகிறுக்க பு... தனம் நடத்த போற கல்யாண பொண்ணே கவனம் வையடி. பி.பி.ஸ்ரீனிவாஸுடன் ஜிக்கி குரல் இ... பாடல் - 'கம கமவென நறுமணம் வீசுதே நம் திருமண முதல் இரவென அது பேசுதே'. பாகேஸ்வரி ... பி.சுசிலா பாடிய பாடலை இலங்கை வானொலி திரை தந்த இசை, பாட்டும் பதமும், நிகழ்ச்சிகளில் ... டிருக்கிறேன்.

தொகையறா- 'விளக்கினை பழமென்று கருதியே ஏமாந்து நித்திலமும் விழுந்ததேனோ
ஆண்களின் வெளிவேஷ பேச்சில் மயங்கியே பெண்கள் என் போல் நலிவதேனோ

பல்லவி- சிந்திக்கும் தன்மையற்றதலா அல்லது முன் ஜன்மத்தில் செய்த வினையா
சொந்த நலம் நினைந்ததாலா இன்பம் தன்னை துன்பம் தொடரும் என்பதால' -
பி.சுசிலா மிக உருக்கமாக பாகேஸ்வரி ராகத்தில் சோகமாக பாடிய பாடல்.

'வெளியே சொன்னா வெக்கம்' என்ற பாடலை எஸ்.ஸி. கிருஷ்ணன் பாடினார். 'தென்றல் ... விளையாடும்' என்று மற்றொரு பாடல் ஜிக்கி பாட, ' பேப்பர் பேப்பர் ' என்ற நகைச்சுவை பா... சந்திரபாபு பேப்பர் விற்றுக்கொண்டே பாடினார். டி.வி. ரத்னம் பாடியது - திருவருள் தந்து ஆதரி.

## ஓங்காரமாய் விளங்கும் நாதம்

*1957ல் வெளியான படங்களில் டி.எம்.சௌந்தரராஜனின் முழுபரிமாணங்களுடன் ஓங்காரமாக ஒலித்த... சிலபாடல்கள்:-*

அம்பிகாபதி - வடிவேலும், சிந்தனை செய், விருத்தங்கள் கற்புக்கரசி - அம்பிகாபதி செய்த பிழை மாற்று' விருத்தம்
சௌபாக்யவதி - தில்லை அம்பல நடராஜா, ஏதுக்கோ நீலமலை திருடன் - சத்தியமே லட்சியமாய்
மக்களை பெற்ற மகராசி - மணப்பாறை மாடுகட்டி ராணி லலிதாங்கி -ஆண்டவனே இல்லையே,-எட்டடி நில...
வணங்காமுடி - ஓங்காரமாய் விளங்கும் நாதம்

இவைகளுக்கெல்லாம் 'முதலாளி' படத்தின் 'ஏரிக்கரையின் மேலே' பாடல் சிகரம் வைத்தா... அமைந்தது. இதைத் தவிர இன்னும் பல பாடல்கள் 1957ல் சௌந்தரராஜனுக்கு பாடி இருந்தாலும் ... காழி, ஏ.எம்.ராஜா போன்றவர்களின் வாய்ப்புகளும் பெருகிக் கொண்டிருந்தன. ஆனால் பின்னணி ... கிகளில் சுசிலாவின் வாய்ப்புகள் பன்மடங்காகி ஜிக்கி, பி.லீலா ஆகியோரின் வாய்ப்புகளை குறை... எம்.எல்.வசந்தகுமாரிக்கு எப்பொழுதும் போல் முக்கியமான பாடல்கள் கிடைத்துக் கொண்டிருந்தன. ... திர நடிகைகளுக்கு சுசிலாவின் குரலே திரைக்கேற்ற முன்னணி குரலாக தீர்மானிக்கப்பட்டு விட்டது.

## கண்ணுக்கு நேரிலே கலை என்ற தேரிலே

ஒரே நேரத்தில் டி.எம்.சௌந்தரராஜன், ஏ.எம்.ராஜா, சீர்காழி கோவிந்தராஜன், அதோடு தெலுங்கில் ... டசாலா ஏ.எம்.ராஜா, கன்னடம் என்று 1957க்குள்ளேயே 200 பாடல்களை பி.சுசிலா தொட்டிருக்கக் ... *1957ல் சுசீலாவின் தமிழ் பாடல்களின் வரிசை (இதில் சிலபாடல்கள் தவற விடப்பட்டிருக்கலாம்.)*

அம்பிகாபதி - ஆட்டுமா கொஞ்சம் பாட்டுமா அன்பே தெய்வம் - இன்பமெல்லாம் தந்தருளும்
அலாவுதீனும் அற்புதவிளக்கும்- ஆசையுடனே, கன்னி பெண்ணே வா, கண்ணுக்கு நேரிலே, சேலாடும் நீரோடை,
இரு சகோதரிகள் - தங்க சிலையே வாடா, ஜோரான ரூபமே, மனதை கவர்ந்த மலர்மாரா
எங்கள் வீட்டு மகாலக்ஷ்மி - காத்தாடி, ஆடி பாடி வேலை செஞ்சா
சமய சஞ்சீவி - சிந்திக்கும் தன்மை அற்றதலா தங்கமலை ரகசியம் - அமுதை பொழியும்
பத்தினி தெய்வம்- மோகன புன்னகை, கசக்குமா இல்லை ருசிக்குமா, வேதாந்தம் பேசுவாங்க
பக்த மார்க்கண்டேயா - இளமாங்குயில் புதுமைபித்தன் - தேன் மதுவை வண்ணம் தேடி வரும்
புதையல் - சின்ன சின்ன இழை பின்னி பின்னி வரும், தங்க மோகன தாமரை, ஆடும் அலை போலே,
விண்ணோடும் முகிலோடும், நல்ல காலம் வரு...
மகதல நாட்டு மேரி - பறந்து சென்ற வெண் புறா, ஆசை கொண்டேன் உன் மீதிலே
மணாளனே மங்கையின் பாக்கியம் - ஜெகதீஸ்வரா, அழைக்காதே, நீயே என் வாழ்வின்,
தேசலாவுதே, ஜோரான பொம்மை பாருங்க, தேவா தயை புரிய வா
மல்லிகா - மங்காமல் வளரும், நீல வண்ண கண்ணனே, எந்தன் கண்ணில் கலந்து, வருவேன் நான் உ...
மகாதேவி - கண் மூடும் வேளையிலும் யார் பையன் - தந்தை யாரோ தாயும் யாரோ